I may quote here the sober and sound words of J. S. Mill the great thinker and logician of the last century. "The Government of a people by itself has a meaning and reality, but such a thing as Government of one people by another, does not and cannot exist: One people may keep another for its own use, a place to make money in human cattle-farm, to be worked for the profits of its own inhabitants." As compared with this bold and sound dictum, our claim under the Congress and Moslem League is clearly moderate if not timid and too cautious. Again, to quote the words of one of the eminent Judges of the Calcutta High Court, Justice Stratchey, "In a civilised populous country like India, Justice can well be dispensed with only through the Indians themselves." I may be permitted to point out here that the creditable way in which the Native states are now managed, afford ample proof of the administrative capabilities of the sons of the soil. It is opportunity that makes a man and the useful art of swimming cannot be learnt without a venture and confidence in the teacher and the taught. It is too much to assert that the administrative capacity is the birthright or monopoly of any specified nation. Are not the Indian servants and clerks in the different departments of Government and the Indian Assistants and Secretaries in the various responsible places, bearing the lion's share in the present administrative out-turn of our country. The defect may be that these Indian Lieutinents or Ministerial servants are not bold enough to give out their independent views being under the disadvantage of the choking atmoshphere of official groove. After all, what we demand is not full and independent hand, but only some effective voice and due share in the Government of our country so that we may have the real right of representation and effective power of retrenchment in the matter of superfluous salaries and luxurious expenses that are paid by the hard earned laborer and the sweating and poor ryot in the shape of taxes. So much then for the higher aspect of affairs.

*The true foundation of Real Government.*

It should be observed that a grand citadel without strong foundation will go to ground and so our attention should be devoted specially to the foundation at the bottom that is to the constitution of the village community on which the whole future fabric of our structure depends. To quote the words of Elphinstone in early 1819, "the Village Communities contain in miniature all the materials of a state within themselves and are almost sufficient to protect their members if all the Government's are withdrawn". Again, Sir Charles Metcalfe in 1830 said "the Village Communities are a little Republic, having nearly everything they want within themselves.

They are conducive to their happiness and for enjoying freedom and independence". And so you see the importance of this time-honored institution, which played so important a part in the by-gone days of Mahamadan and Hindu period. It is an happy augury that the Government are reviving this old sacred institution by a Legislative measure. The reception Committee Chairman Mr. Vedi Chettiar has placed in my hands his comments and criticisms on this important Bill. I congradulate him for his excellent production, earnest thought and intelligent observation. No doubt the act will prove a very benefient measure, but I anxiously hope that the trios of our village life, I mean the Bahadur Village Headman, who has head without a real heart, the cunning village Karnam who foments litigation and lives upon the pernicious doctrine of "divide and Rule" and the village Usurer & Shylock who lends money and fleeces the poor ryots their last drop of blood, all these three set of people will take a new turn of life and learn to lead a better and worthier life of altruism and lend their helping hand to the proper growth of this young Institution instead of proving a clog and obstacle at this initial experimental stage. It will be mincing matters if I do not candidly admit that the moral and social condition of the village is still at its low ebb and the sanitary atmosphere of this village life still requires strong disinfectants. It is a matter of deep concern to note that the Rural Credit Banks are threatening to fall on account of this want of honesty and rectitude in the so called village leaders who are to be the practical future protectors and rulers of these illeterate and ignorant masses. I hope that early steps are taken to eradicate these evils that eat away the vitals and foundations of this social fabric by spreading effective education and moral training to the masses in all the nooks and corners of every village wherein lies the real salvation of the country. I fear I am rather very strong in this pungent observation, but I am obliged to be little hard for I strongly think that real salvation is within us rather than from without and that the temples ought to be clean and carefully washed before installing divinities there.

And lastly, though not of least importance, is the momentous question of our country's call at this critical moment and our urgent and immediate duty to it. The militant German has used his might or rather his machine power and is doing havoc in the western theatre and what shall be our duty at this juncture? There is no good in hesitation and reflection when the house is in flames. It is our bounden duty to prepare ourselves to meet the situation and the destiny of Britain is knitted closely with our own. If we are self-reliant, and able to defend and liberate ourselves from foreigners, then liberty is at our door, and we will have full liberty from our Rulers. There is no need to ask; for, the deserving will have his dues even without desiring for it. We should not forget at this moment our grand and sacred motto of (நிஷ்காம்ய-தர்மா) *Nishkamya Dharma* that is unselfish work without the least care for its fruit or result. Herein lies the nobility and the secret of success in life. If we discharge our sacred duty as the true sons of this sacred soil by fearlessness and fortitude this ready sacrifice shall surely bring forth its own fruit of perfection, peace and all happiness, which you hope to secure through your Home Rule, or Responsible Government which is the only real form of Government.



## Closing address of the President.—21-5-1918.

I thank you from the bottom of my heart for the able and valuable assistance rendered by the Chairman of the Reception Committee and for the whole hearted co operation of the members, delegates and friends who have assembled here. As I told you at the outset, the success of our movement depends wholly upon the steady and practical work that is to be carried on all through the year. Our luxurious and expensive habits ought to be reformed and cut short, our life ought to be based on plain living and high-thinking. Our old ideas of charity and philanthrofic gifts must be remodelled. Charity ought to be discriminate instead of wasting for feeding idlers and spending a lot in the construction of temples which we have already enough and more. The best modern mode of charity is to spend for Hospitals and Education which go in a great way for the alleviation of human suffering and misery and for uplifting our depressed and ignorant masses. "Learning", said Fuller, "is the greeted alms that can be given." The love of God is best shewn by love of man. Our future worship must be for the regeneration of Humanity which is the real temple of God and the large amount spent for building choultries and chatrams is a sheer waste at present, as in these modern days, Railways have proved such institutions a superfluity and lastly I may earnestly plead for economy in luxurious marriages, and superstitious ceremonies and rigid rituals.

With my deep devotion to the Unseen and Mysterious Powers that rule over our destinies, I pray with all my humility and earnest heart for the Highest and Holiest Being to give us strength and guide us in His merciful ways in the path of Virtue and Universal Love and bestow upon our young Institution the full measure of Success and Happy Life.

**Patriot Press, Salem.**

## Closing address of the Pres[illegible]

I thank you from the bottom of my heart for the [illegible] assistance rendered by the Chairman of the Reception Committee and for the whole-hearted co-operation of the [illegible] friends who have [illegible] here. As I told you at the outset, the success of our movement depends wholly upon the steady and [illegible] work [illegible] carried on all through the year. Our [illegible] and [illegible] ought to [illegible] and our [illegible] ought to be [illegible] plain living and high thinking. Our old ideas of charity and philanthropic gifts must be remodelled. Charity ought to be [illegible] instead of wasting for feeding idlers and spending a lot in the construction of temples which we have already enough and more. The most modern mode of charity is to spend for Hospitals and Education which go in a great way for the alleviation of human suffering and misery and for uplifting our depressed and ignorant masses. "Learning," said Tyler, "is the greatest alms that can be given." The love of God is best shown by love of man. Our future worship must be for the regeneration of Humanity which is the real temple of God and the large amount spent for building choultries and chatrams is a sheer waste at present, as in these modern days, Railways have rendered such institutions a superfluity and lastly I may earnestly plead for economy in luxurious marriages, and superstitious ceremonies and rigid rituals.

With my deep devotion to the Unseen and Mysterious Powers that rule over our destinies, I pray with all my humility and earnest heart for the highest and Holiest Being to give us strength and guide us in His merciful ways in the path of Virtue and Universal Love and bestow upon our young Institution the full measure of Success and Happy Life.

Patriot Press, Salem.





# ஊத்தங்கரை தாலூகா கான்பரன்ஸ்.

## வரவேற்பு கமிடியின் செயர்மேன் அவர்கள் உபந்நியாசம்.

ஊத்தங்கரை தாலூகா கான்பரன்சு என்னும் பெயர்பூண்ட ஊத்தங்கரை தாலூகா மஹாநாடு அரூரில் கூடுவதாய் பிரசுரம் செய்யலான விஷய ஸூசிகைகளடங்கின மீட்டிங்கு நோட்டீஸை, பத்திரிகைகள் வாயிலாக நேசர்கள் வாசித்திருப்பார்கள். அதில்கண்டபடி ஊத்தங்கரை தாலூகா மஹாஜன சபையாரின் முயற்சியால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கான்பரன்ஸ் நிகழும், மேமீ 20, 21-உ சோம, மங்கள வாரங்களில் அரூரில் இதற்கென்றே நன்சமைக்கப்பட்ட விசித்திர கூடத்தில் நடைபெற்றது திரளான ஜனங்கள் எதிர்பாராதபடி வந்து நிறைந்தவர்களின் தொகை சுமார் 2500, 3000 இருக்கலாமென்று மதிப்பிடப்பட்டன. புராணஸ்தலமான இந்நகரில் ஏககாலத்தில் இவ்வளவுபெரிய கூட்டத்தைக் கண்டது இதுதான் முதல் தரமென்று சொல்லப்படுவதுடன் சேலஞ் ஜில்லாவில் ஏகமனதாய் ஏகோபித்து எல்லா வகுப்பினரும் இராஜாங்க விஷயத்தில் ஒரு தாலூகா கான்பரன்ஸ் நடத்தினதில் இது முதலாவதாகும் என்று சொல்லுவது மிகைப்படாது. அக்கிராசனாதிபதியாக வந்த இராயக்கோட்டை ஜமீன்தாரும், சேலம் ஹைகோர்ட்டு வக்கீலுமான ஸ்ரீமான் லோகநாத முதலியார் அவர்களும், அவர்களுடன் வந்த ஏனைய்ய இராஜபக்தர்களும், தேசபக்தர்களும், காலை 11மணிக்கு வந்திறங்கினவுடனே வரவழைப்பு கமிட்டியார் மேளகோஷ்டியுடன் சென்று உபசாரணைசெய்து விருந்தானபின் மாலை 3-மணிக்கு வாலண்டியர்கள் சேவிக்க, பலர் வெண்சாமரம் வீசவும், கும்பாலாத்திகள் எடுக்கவும், மச்சுவீடுகளிலிருந்து புஷ்ப மாரிகள் பொழியவும், திருத்தொண்டர்கள் மத்தியில் கான்பரன்ஸ் கூடும் மாளிகைக்கு ஊர்கோலத்துடன் கூட்டிவரப்பட்டன. அக்கிராசனாதிபதியவர்களும் அவருடன் வந்தவர்களும் பந்தலில் பிரவேசித்தவுடனே மிக்க ஆரவாரத்துடன் கரகோஷங்கள் செய்யப்பட்டன. பின்பு வரவேற்பு சபையின் சபாநாயகர் கனம் அரூரில் தாலூகாபோர்டு மெம்பரும், யூனியன் சேர்மேனுமான வேடி செட்டியார் உபசாரணை உபந்நியாசம் செய்தார். அதன் சுருக்கம் பின்வருமாறு:—

### உபந்நியாசம்.

கனவான்களே! இக்கான்பரன்ஸ் வரவேற்பு கமீட்டியின் அக்கிராசனாதிபதி என்னும் ஜவாபுதாரியான ஸ்தானத்தை வகிக்கும்படி எனக்குசெய்த மரியாதைக்காக என் மனப்பூர்வமான வந்தனமளிக்கிறேன் நான் இதற்கு அருகனல்லேன் என்பது எனக்குத் தெரியும். நான் இதுவரையில்செய்த வேலைக்கல்லாமல் பொதுஜன ஊழியஞ்

செய்வதில் ஆவலுள்ளவனாயிருக்கிறேன் என்று நம்பி என்னை இந்தஜவாபுதாரியான ஸ்தானத்துக்கு தெரிந்தெடுத்திருக்கிறீர்கள் என்று நான் நினைக்கிறேன். ஆயினும் இன்னும் கொஞ்ச காலத்திற்குள்ளாகவாவது உங்கள் அன்புக்கும் நல்லெண்ணத்திற்கும் நிஞ்சிற்றாகிலும் பாத்திரனாகத்தகுந்த என்னாலான முயற்சிசெய்வதில் தடையிராது.

கல்வியாலும், செல்வத்தாலும், நிறைந்துள்ள பல கனவான்களடங்கிய இம்மாதிரியான பகிரங்க கூட்டத்தில் முன்வந்து பேசுவது எப்படி எனக்கு இது முதல்தரமோ, அதுபோலவே பலவகுப்பினரும் ஏகோபித்து, எவ்வித வித்தியாசமுமில்லாமல் இராஜாங்கவிஷயத்தில் இன்று கூடியிருக்கும் இத்தாலூகா கான்பரன்ஸானது, இத்தாலூகாவுக்கு தலைநகரான ஹரிபுரம் என்னும் இப்புராணபுண்ணிய க்ஷேத்திரத்தில் கூடுவது முதல்தரம் என்று நான் சொல்லும்போது ஜில்லாவுக்கே இதுதான் முதல் முதல் கூடும் தாலூகா கான்பரன்ஸ் என்பது தெரிந்துகொள்வீர்கள். இப்படிப்பட்ட கான்பரன்சுகளில வரவேற்பு கமிட்டி அக்கிராசனாதிபதி செய்யவேண்டிய கடமைகள் சிலது தொண்டு தொட்டு பழக்கத்திலிருந்து வருகின்றன. அவைகளாவது:- இந்த கான்பரன்சின் உற்பத்தியும், உத்தேசமும், அதில நடக்கவேண்டிய விஷயங்களும், அவைகளை நடத்துவதற்கு சபாநாயகராக ஏற்படுத்தப்பட்டிருப்பவர் இன்னாரென்பதையும், இச்சபையிலுள்ளவர்களுக்குத் தெரிவித்து அவர்கள் அங்கீகாரத்தையும், அனுமதியையும், பெற்று சபாநாயகரை ஆசனத்தில் அமரும்படி பிரேரேபணை செய்வதுதான். இத்தகைய என கடமையை நிறைவேற்றப் பிரயத்தினப்படுவதில என்னால் யாதாவது பிசகுகள் நேரிட்டால் குற்றத்தை மன்னித்து குணத்தை மேற்கொண்டு ஆதரிக்க கேட்டுக்கொள்ளுகிறேன். (*பாதகமில்லை, பாதகமில்லை.)

சகோதரர்களே!! இத்தாலூகா இச்சென்னை மாகாணத்தில் மற்றவிடங்களைவிட நாகரீகத்திலாவது, ஊக்கத்திலாவது, புத்தி நுட்பத்திலாவது, பின்பட்டதல்லவென்று பலர் அபிப்பிராயம் கொண்டிருந்தாலும், கல்வி விஷயத்தில் இன்னும் எவ்வளவோ அபிவிருத்தியடையவேண்டியிருக்கிறதென்பது இத்தாலூகா க்ஷேமத்தில் முனைந்துள்ளவர்கள் கருத்து. அதை விருத்தி செய்யவும் இத்தாலூகாவின் குடிகளுக்கு இராஜாங்கத்தார் நோட்டீசுக்கு கொண்டுபோகவேண்டியிருக்கும் குறைகளை அடிக்கடி அதிகாரிகளுக்கு தெரிவிக்கவும், நமது ராஜதானியில் நாளுக்கு நாள் அதிகப்பட்டுவரும், ஆலகாலவிஷத்துக்கொப்பான ஆங்கிலேயர் இந்தியர் என்னும் வித்தியாசத்தையும், உத்தியோகஸ்தர்கள் குடிகள் என்று அவமரியாதையை உண்டாக்கக்கூடிய வித்தியாசத்தையும், பிராமணர் பிராமணரல்லாதார் என்னும் வித்தியாசத்தையும், சுயராஜ்ஜியம், பராஜ்ஜியம் என்னும் வித்யாசங்களையும் பாராட்டி பொது நலத்தைக் கெடுக்கக்கூடிய விஷயாதிகளை உண்டாக்கும் தொத்துவியாதிகள் இத்தாலூகாவில் வந்து அணுகாதிருக்கும்படி காப்பாற்றவேண்டுமென்ற எண்ணத்துடனும் இந்த மஹாநாட்டை இதன் மூலபுருஷர்களான ஊத்தங்கரை தாலூகா மஹாஜன சபையார் கூட்டியிருக்கிறார்கள்.

இம்மஹாஜன சபையின் ரூல்களில் எழுதியிருப்பதை சுருக்கி வாசிக்கிறேன். அவைகளாவது:—

1. இச்சபையின் நோக்கங்களாவன:

(a) ஊத்தங்கரை தாலூக்கா எல்லா வகுப்புகளையுஞ் சார்ந்தவர்களுடைய கல்வி, ஒழுக்கம், சுகநலம், செல்வம், தேச ஆட்சி, விவகாரம் முதலானவைகளின் அபிவிருத்தியைப் பெருக்குதல்;



II. (a) இந்தியாவிலுள்ள எல்லா வகுப்பினரும் எவ்வித பேதமுமின்றி ஏகமனதாய் இராஜாங்கத்தாரின் உதவியையே பெரிதாக எதிர்பாராமல் சுயமுயற்சியால், கல்வி, கைத்தொழில், செல்வம் முதலியவைகளை விருத்திசெய்து நாட்டை அபிவிர்த்திக்கு கொண்டுவருவது முதன்மையான கொள்கையாயும்;

(b) ஆனால் யுக்தாயுக்தங்களைப்பற்றி தீர்க்காலோசித்து தகுதி, வகுப்பு, நிலைமை, (fitness communal interest, condition in life) இவைகளையனுசரித்து பிரஜைகளிடம் நம்பகம்கொண்டு அவர்களுக்கு இராஜாங்க உரிமைகளும், சுதந்திரங்களும், சரியானபடி கொடுக்கவேண்டுமென்று பொதுவாய் வற்புருத்துவது இரண்டாவது கொள்கையாயும்;

(c) இத்தாலூகா ஜனங்களுக்கு ஸ்தல சுயாக்ஷி (Local self-government) விஷயமாய் தங்களுக்குற்ற உரிமைகளை மேற்கண்டமாதிரி அடைவதல் தாலூக்கா ஜனங்களின் அபிவிருத்திக்கு வேண்டிய உபாயங்கள் அப்போதைக்கப்போது இன்னதென்று குறிப்பாய் யோசித்தலும், யோசித்தப்படி நிறைவேற்றுதலும், அவைகளை அமுலுக்கு கொண்டுவருதலும், இச்சங்கத்தின உறுதியான கொள்கையாயுமிருக்கும்.

இவைகளை கேட்கும்போது இம்மஹாஜன சபையினுடையவும், அச்சபையால் வரவழைக்கப்பட்ட இக்கான்பரன்ஸினுடையவும், நோக்கங்களும், கொள்கைகளும், இன்னதென்பது தெரியக்கூடும். அத்துடன் இம்மஹாநாட்டில நடக்கும் விஷயங்கள் இன்னதென்பதை நீங்கள் பல பத்திரிகைகளில் வாசித்ததுமல்லாமல் உங்களிடமிப்போதிருக்கும் மீட்டிங்கு நோட்டீஸ்களிலும் சுருக்கமாயிருந்தாலும் விளக்கமாய்த்தெரியும். ஆகையால அவைகள் ஒவ்வொன்றைப்பற்றியும் நமக்கு வந்திருக்கும் சபாநாயகர் விஸ்தரித்து சொல்வாராதலும் கல்வியைப்பற்றியும் இன்னும் இரண்டொரு எச்சரிக்கைகளைபபற்றியும சிறிது சொல்ல இடந்தரகேட்கிறேன். (*அவசரமில்லை, அவசரமில்லை, நிதானமாய்சசொல்லுங்கள்.)

## இந்தியா குழப்பத்தின் காரணம்.

———0———

சென்ற சில்பநாட்களாக அன்னிய நாட்டார் நமது வியாபாரத்தை கைப்பற்றிக் கொண்டார்கள என்றும அரசாங்கத்தில நமக்கு சுதந்திரமல்லை என்றும, அதிகாரிகள் நம்மை அடிமைகளாக நடத்துகிறார்கள் என்றும், அரசிடத்திலும் அவர் பிரதிநிதிகளிடத்திலும குடிகளுக்குள்ள சுதந்திரம், இங்கிலாந்திலும் அதுபோன்ற இதர நாடுகளிலும், இருப்பதுபோல இந்தியாவில் இல்லையென்றும், இதனால் இந்தியா நாளுக்குநாள் க்ஷீணப்பட்டுவருகிறது என்றும், ஆகையால் தேசம் முன்னுக்கு வருவதற்கு 'சுயாக்ஷி' வேண்டுமென்பதும சிலர் வேண்டாமென்பதும இதன் உண்மையை செம்மையாயும் பாரபக்ஷமன்றியும யாராவது ஆராச்சிசெய்து சொல்லமுனனுகுவந்தால் அவர்கள் வக்கீல்கள் கோஷ்டியில் சேர்ந்தவர்கள் என்று அதிகாரிகள் சொல்வதும், வக்கீலல்லாதவர்கள் சொன்னால் பிராமணர்கள் சுயநலம கருதி சொல்லுகிறார்கள் என்று சில பிராம்மணரல்லாதார் சொல்வதும், பிராமணரல்லாதார் சிலர் சொல்லவெளிப்பட்டால் அவைகளை வாசித்தவர்கள் தூண்டிவிட்டது என்று

நினைப்பதாலும், தேசக்ஷேமத்துக்கு விரோதமாய் இப்போதிருக்கும் மேல்கண்ட குழப்பங்களுக்கு காரணம் இன்னதென்பதை விவசாயிகளாலும், வியாபாரிகளாலும், சாதாரண வாசிப்புள்ளவர்களாலும் நிறைந்த ஊத்தங்கரை தாலூக்கா மஹாஜனங்களடங்கிய நாம் யோசிக்கவேண்டியது முதல் வேலை. இத்தகைய் நமது யோசனையை சிலதேச விரோதிகள் முட்டாள் யோசனை என்று முட்டாள்தனமாய் சொன்னாலும், கவர்ன்மெண்டார் அப்படி நினைக்கமாட்டார்கள் என்பதுஎன் நம்பிக்கை. ஆகையால் நமது நாட்டின் தற்கால நிலைமையை உங்கள் சமுகத்திற்கு எனக்கு தெரிந்த மட்டில் தெரிவிக்க விரும்புகிறேன்.

## விவசாயமும், வியாபாரமும்.

———0———.

ஒருதேசம் முன்னுக்கு வரவும் இராஜாங்கம் செழித்தோங்கவும் சத்தியமும் தர்மமும் எப்படி அவசியமோ அப்படி விவசாயமும் வியாபாரமும் நாளுக்குநாள் அபிவிர்த்தியாக வேண்டியிருக்கிறது. ஆகையால் அவைகளைப்பற்றி முன்னும் அவைகளுக்கு ஆதாரவாயுள்ளதைப்பற்றி பின்னும் சொல்லுவேன்:—

இந்தியாவில் முக்கியமாக நம்மவர்கள் பயிரிடும் தொழிலையேபற்றியிருப்பதினால் ஜனங்கள் கிராமங்களிலேயே வசிக்கின்றனர். (*நாம் கிராமவாசிகள் தானே. அதையே சொல்லுங்கள்.) இந்தியாவின் மொத்த ஜனங்களில் 100-க்கு 72-பேர் விவசாயிகள்; 100-க்கு 18-பேர் வியாபாரம் செய்பவர்கள்; 100-க்கு $1\frac{1}{2}$-பேர் உத்தியோகம் புரிபவர்; (*இந்த $1\frac{1}{2}$-பேர்தான் $98\frac{1}{2}$-பேரை அடிமைகள்போல நடத்துகிறார்கள். போரும் இரச்சல் வேண்டாம்). கூலிவேலை முதலான இதரதொழில்களுள்ளவர் 100-க்கு $5\frac{1}{2}$பேர்கள்; இதர ஜிவனத்தார்கள் மிகுதி பாகத்தை சேர்ந்தவர்களாகின்றனர்: பெருத்த தொகையாளர்கள் அதாவது 100ல் 72பேர் விவசாயத்தைக்கடைபிடித்து வந்தும் நாட்டில் விளைபொருள்கள் போதுமான அளவு உற்பத்தியாவதாக காணப்படவில்லை. சர்க்காருக்கு அதிக தீர்வை கொடுப்பது ரய்யத்வாரீ நிலங்களே ஆகும். இந்நிலங்களால் சர்க்காருக்கு வருடமொன்றுக்கு 512 லக்ஷப் ரூபாய் வருகிறது. இதுதவிர சில்லரைத் தீர்வைகளில் வருடமொன்றுக்கு 92 லக்ஷத்துக்கு மேல்பட்டு வருகிறது. குவிட்ரெண்டில் 23 லக்ஷமும், தண்ணீர் தீர்வையில் (நீர்கூலி) 35 லக்ஷமும்; அக்கிறமுப்புச்சட்டத்தினால் (என்கரோச்மெண்டு) தெண்டத்தீர்வை என்று சொல்லப்படும் வரும்படி $5\frac{1}{2}$லக்ஷமும் (*இந்த தாலூகாவில் இந்தஇனங்களில் நடக்கும் அனியாயம் அதிகம். பேச இடங்கொடுங்கள் நீங்கள் சொல்வதை பின் சொல்லுங்கள்). மரப்பட்டா தீர்வையில் வரும்படி 3 லக்ஷமும், இதரதீர்வைகளில் $26\frac{1}{2}$ லக்ஷமுமாக வருகிறது. இவ்வகையில் ரயித்வாரிகளால் வருவது நீங்கலாக மிட்டா ஜமீன் முதலியவைகளில் குயிட்ரெண்டுகள்உட்பட நிலவருமானம் 4990138ம் பூர்வமிருந்த இராஜாக்களால் விடப்பட்ட ஜாகீர்கள், இனாம்கள் முதலியவைகளிலிருந்து 751114–ரூபாயும் வருகிறது.

இச்சென்னை ராஜதானி சற்றேறக்குறைய 9-கோடி ஏகரா பூமி விஸ்தீரணங்கொண்டது. இதில் $1\frac{1}{2}$-கோடி ஏகரா காடாகவும், $\frac{1}{2}$-கோடி ஏகரா பூமிகள் சாகுபடிக்கு உதவாததாகவும், $1\frac{1}{2}$-கோடி ஏகரா சதுப்பு நிலங்களாகவும், 1கோடி ஏகரா சாகுபடியில்லாத நிலங்களாகவும், $3\frac{1}{2}$-கோடி ஏகரா சாகுபடியாகும் நிலங்களாகவுமிருக்கின்றது. நீர்பாசனத்திற்குறிய மார்க்கங்களின்றி பயிரிடாமலிருக்கும் நிலங்களைப் பற்றி சர்க்காரார் தக்கயேற்பாடு செய்யவேண்டியதிருக்கிறது. (*இந்த விஷயமும் கஷ்டமும் இத்தாலூகாவில் அதிகமாய் கவனிக்கவேண்டியிருக்கிறது). பொருங்கள். அவசரம் வேண்டாம். பின்னால் தீர்மானம் வரும்: 1913–14 வருடத்தில்



விவசாயத்தின் அபிவிர்த்திக்காக சர்க்கார் செலவழித்த தொகை 5130652 ரூபாய்; பிரதிவருடமும் பிரஜைகளிடமிருந்து இந்நாட்டில் நிலத்தீர்வையாக 30கோடி ரூபாய் வசூல் செய்யும் கவர்ன்மெண்டார் 50 லக்ஷம் ரூபாய் விவசாய விருத்திக்கு செலவழிப்பது போதுமா? மீளாத்தரித்திரத்தினால் பிடிக்கப்பட்டிருக்கும் இந்தியருக்கு கனத்த வரியை சுமக்கச்செய்வது நீதியல்லவென்று சர் வில்லியம் டிக்பீ, தாதாபாய் நௌரோஜி முதலானோர் கூறியிருக்கின்றனர். வியாபார விருத்தியால் நிதிக் குவியல்களில் புரளும் ஆங்கிலேயர் வருடவாரியில் 40 ரூபாய் வரி செலுத்துகின்றனர் என்று சொல்லப்படுகிறது. நம் நாட்டு ஜனங்களோ போதுமான அன்னத்துக்கே வழியில்லாமல் தவிமாகும் காலத்தில் வருடவாரியில் சற்றேறக்குறைய 4 ரூபாய்க்கு குறையாது வரிசெலுத்துவதாகவும், அதனால் இந்தியாவே குறைந்த வரிசெலுத்துவதாயும், சில ஆங்கிலேயர்கள் சொல்லுகிறார்கள். ஆகையால் வரியை யோசிப்பதற்குமுன் வரும்படியை ஆராய்ச்சி செய்துபார்ப்போம். முப்பத்து முக்கோடி தேவர்கள் முன்னிருந்ததாக சொல்லப்பட்டதுபோல இப்போது முப்பத்துமூன்று கோடி உள்ள இந்திய ஜனங்களின் வரும்படி வருஷம் 1-க்கு 27 ரூபாய் என்பதாக இந்தியா கவர்ன்மெண்டாரே சுல்ப நாளுக்குமுன் மதிப்பிட்டார்கள். இந்தியாவிலுள்ள பெரிய மிராசுதாரர்கள், கனத்த வியாபாரிகள், உயர்தர உத்தியோகஸ்தர்கள் ஆகிய சகலரையும் ஒருமிக்க சேர்த்து இந்தியாவின் வரும்படியை சராசரி பங்கிட்டால் நபர் 1-க்கு பிரதிதினம் 0—1—6 வரும்படியாகிறது. இந்த தொகையைக் கொண்டு உணவு, வஸ்திரம், வசதி, சடங்குகள், சர்க்காருக்கு வரி, முதலிய சகலமும் ஆகவேண்டும்.

இங்கிலாந்திலோ நபர் 1-க்கு பிரதிதினம் கிடைக்கும் வரும்படி 2—2—5; வருடவரும்படி ரூபாய் 780; இந்தியர்களாகிய நமக்கு வருவதாகச் சொல்லும் வரும்படியைப்பார்க்கிலும் 23 மடங்கு அதிகமான வரும்படியைக்கொண்ட இங்கிலாந்துவாசிகள் வருடவாரியில் 40 ரூபாய் வரி கொடுப்பது அதிகமா? அல்லது தினம் 0—1—6 அதாவது வருஷத்தில் 27 ரூபாய் வரும்படியுடைய இந்திய ஏழைகளான நாம் 4 ரூபாய் வரி கொடுப்பது அதிகமா?

இதை யோசித்து கணக்கு பிரித்து பார்க்க இந்திய ஏழைகளாகிய நமக்கு நூறு ரூபா வரும்படி வந்தால் பதினைந்து ரூபா வரி செலுத்துகிறோமென்றும், இங்கிலாந்து தேசத்திலுள்ளவர்களுக்கு நூறு ரூபாய் வரும்படிவந்தால் ஐந்து ரூபா வரி செலுத்துகிறார்கள் என்றும் தெரிகிறது. சர் வில்லியம் டிக்பீ என்னும் அர்த்த சாஸ்திரி இந்தியாவானது தனது வருடவரும்படியில் 4-ல் 1 பங்கு சர்க்காருக்கு செலுத்துவதாகவும் சொல்லுகிறார். எவ்வெவர் எத்தன்மையாகக் கூறினும் பொதுவாக யோசிக்குமிடத்தில் இந்தியாவானது மற்ற நாடுகளைவிட அதிகவரி செலுத்துகிறதென்பதை யாரும் மறுதளிக்கமுடியாது. இது இப்படியிருக்க நம்ம வியாபார விஷயத்தைக் கவனிப்போம். ஏற்றுமதி இறக்குமதி வரிகள் 11 கோடி ரூபாய் ஏற்றுமதி இறக்குமதி சாமான்களுக்கு விதிக்கப்படுகிறது. கடல் சுங்கத்தீர்வை 100-க்கு 10 வீதமும் 20 வீதமும் உயர்த்தப்பட்டிருந்தது. இதைக்கண்ட ஆங்கிலேய பருத்தி நெசவுக்காரர்கள் தீர்வையை ரத்துசெய்ய கவர்ன்மெண்டாரிடம் 1882 வருடம் மன்றாடி தீர்வையில்லாமல் செய்துக்கொண்டனர். காங்கிரஸ் சபையார் முறையிடவே 1894 வருடத்தில் பருத்தி நூல் வஸ்திரங்களுக்கு வரி விதிக்காமல் மற்ற சாமான்களுக்கு 100-க்கு 5 வீதம் வரி விதித்தனர். எல்லா வெளிநாடுகளிலிருந்தும் இந்நாட்டிற்கு இறக்குமதியாகும் சாமான்கள் விலை மதிப்பு 145 கோடி ரூபாய். இதில் 49 கோடி ரூபாய் பருத்தி சாமான்கள், இறக்குமதி சாமான்களில் பெருத்த தொகையுள்ளது

இதுவே. இங்கிலாந்திலுள்ள நெசவு தொழில் வியாபாரிகள் பிரயத்தனத்தால் நெசவாகும் பருத்திசாமான்களுக்கும் 100-க்கு 3½-வீதம் எதிர் தீர்வை ஏற்பட்டது. மேல்சொன்னபடி இந்தியாபருத்தி என்று பேர்போன பருத்தியை தடுப்பில்லாமலும் வரியில்லாமலும அன்னியநாட்டுக்குவிடுவதாலும், வெளிநாடுகளிலிருந்து துணிகளை தடுப்பில்லாமல் கொண்டுவந்து இந்தியர்பொருளை கொண்டுபோவதாலும், உண்டாகும் கெடுதி அனந்தம். அதாவது இந்தியர் கைத்தொழில் குறைகிறது. அதனால் எத்தனையோ கோடி ரூபாய் நஷ்டம் உண்டாகிறதுமல்லாமல், அன்னியநாட்டார் சமயம்வாய்த்தபோது கேட்டவிலையைகொடுத்து உடுக்கும் கந்தைக்கும் உழலவேண்டியிருக்கிறது என்பது நீங்கள் அறிந்த விஷயம். (*ஆம் ஆம் காடா கஜம் 14-அணா விற்கிறது நம்ம ஊரில் மில்கள் போதுமானதிருந்தால் இந்த சமயம் இந்த துணி பஞ்சம் வராது). கனவான்களே அப்படி சொல்வது போறாது இதற்கு மூலகாரணம் என்ன? அதையோசியுங்கள். காரணம் ஒன்றுமில்லை கல்வியில்லாமையே!! அந்த கல்வி நம் நாட்டில் எவ்வளவு இருக்கிறதென்பதை பேசுவோம்.

## கல்வி.

இப்பிரபஞ்சத்தில் நாகரீகமுள்ள நாடுகளில் கட்டாயப்படிப்பும், இலவசப்படிப்புமுண்டு. அதாவது 5-வயதுமுதல் 14-வயதுவரையில் ஒவ்வொரு சிறுமியும் சிறுவனும் கற்கவேண்டுமென்பதே. நாகரீகம் நிறைந்த எல்லாநாடுகளிலும் கல்வி அந்தந்த நாட்டைப்பற்றினதே தவிர வேறொரு நாட்டையும்பற்றினதல்ல. நம்ம நாட்டில்மட்டும் கல்வி இங்கிலாந்தைப்பற்றினதேயன்றி நமது நாட்டைப்பற்றினதன்று. மேல்நாட்டிலுள்ள தேசங்களிலெல்லாம் விவசாயம், வர்த்தகம், கைதொழில் இராணுவம், கலைஞானம் முதலிய பலவேறு கல்விகளை போதிக்கின்றனர். இந்தியாவிலோ அம்மாதிரியில்லை சென்னை மஹாணத்திலுள்ள 4½-கோடி ஜனங்களுக்கு விவசாயத்தைப்புகட்டக்கூடிய கல்விச்சாலைகோயம்பத்தூரில் ஒன்றுண்டு. அதுவும் அவ்வளவு திருப்தியை தரவில்லை. ஏனென்றால் விவசாயிகளுக்கும் சாமான்னிய வாசிப்புள்ள அவர்கள் மக்களுக்கும் அங்கு பாடமில்லை, விவசாயிகளுக்கு அதிகாரிகளாக வருபவர்களை தயார்செய்யும் கவர்மெண்டு காரியங்களுக்கு உத்தியோக உற்பத்திசாலையாக பெரும்பாலும் எண்ணப்படுகிறது. ஆகையால் அதையும் பொது விவசாய ஜனங்கள் கற்பனா அபிவிர்த்திக்கு என்று அனுபவத்தில் தெரியவில்லை. சென்னை இராஜதானியைவிட எண் மடங்கு சிறிதாயுள்ள ஹாலண்டு தேசத்தில்மட்டும் 16-விவசாய கலாசாலைகள் உண்டு, நவீன சாஸ்திரமுறைபடி கற்பிக்கும் தொழிற் பள்ளிக்கூடங்களும் வர்த்தகசாலைகளும் இந்தியாவில் கிடையவேகிடையாது. மேல்நாட்டுகளில் மாணவர்கள் சுதந்தரத்துடன் கற்பிக்கப்படுகிறார்கள். இந்தியாவிலோ பிள்ளைகள் அடிமை குணத்தை பின்பற்றும் கல்வியை கற்பிக்கப்படுகிறார்கள், ஆகவே நமது இளைஞர்களுக்கு கொடுக்கும் கல்விமுறையில் மாறுதல்கள் நம்முயர்ச்சியாலாவது உண்டாக்கப்பார்க்க வேண்டியது அவசியமாயும் அவசரமுள்ளதாயுமிருக்கிறதென்பதை நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன், நம்நாட்டில் ஆரம்பிக்கவேண்டிய கல்விமுறையில் ஆழ்ந்த சாஸ்திரக்கல்வியுடன் முக்கியமாக தொழிற் கல்வியும் சேர்த்து புகட்டவேண்டும். பிரகிருதி சாஸ்திர கல்வியை செய்கையில் அமைத்து நூதனபாதார்த்தங்களை உண்டுபண்ணும் வழியில் கற்பிக்கப்படவேண்டும். இத்தகைய கல்விமுறையில் தேறின பிள்ளைகள் பிறருக்கு அடிமையாளராய் தரித்திரத்தில் அழுந்தாமல் சுதந்தர ஜீவனத்துடன் வாழக்கூடும். நமது சுயமுயற்சியால் உண்டாக்கும் கல்வியின் ஸதாபனத்தால் கட்டாயப்படிப்பும், இலவசப்படிப்பும் நம்நாட்டில் தானே உண்டாகும், ஆகையால் ஒவ்வொரு ஸ்தரீ புருஷர்களும் தங்களால்



இயன்றவரையில் முழு சந்தோஷத்துடன் மனதார சகாயம் செய்ய முன்னுக்கு வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்குமுள்ள சம்மந்தத்தைப்பற்றிய அறிவு நமது தேசத்திலிருந்தே உற்பத்தியாகி மேல்நாடுகளில் வியாபித்தது. நமது மதக்கோட்பாடுகளையும், நமது நாகரீகத்தின் லக்ஷணங்களையும், சிறுவர்களுக்கு கற்பித்து அவர்கள் தம்தம் ஜாதீக, தேசீய, குணத்தைக் காப்பாற்றும்படி, செய்தால் ஒழிய பூர்வீகமாயுள்ள நமது நாகரீகம், கௌரவம், சுயமரியாதை இருந்தவிடம் தெரியாமல் போய்விடும். நம்முடைய பிரிட்டிஷ் அரசாக்ஷியில் 150 வருஷத்தில் நம்முடைய ஜனங்களில் 1000 பேருக்கு 110 பேர் படிக்கத் தெரிந்தவர்களாயிருக்கிறார்கள் என்று கணக்கு எடுக்கப்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது. ஊத்தங்கரை தாலூக்காவில் ஆயிரத்துக்கு 50பேர் படிக்கத் தெரியுமா? அதிலும் குறைவாயிருக்குமென்று சொன்னால் தப்பாகாது. அமெரிக்கர்வில் 10 கோடி ஜனங்களுக்காக 350 சர்வகலாசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் 33 கோடி ஜனங்களுக்காக 5 சர்வகலாசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன,

கல்வி விஷயத்தில் நபர் 1க்கு. ....
- அமெரிக்கா 16 ரூபாய் செலவழிகிறது.
- இங்கிலாந்து 10 ரூபாய்.
- ஜப்பான் 3½ ரூபாய்.
- கொழும்பில் 12-அணா.
- பரோடா சமஸ்தானத்தில் 6 அணா.
- நமது தாய் நாடாகிய பிரிட்டிஷ் இந்தியாவில் 1-அணா செலவழிக்கப்படுகிறது.

இந்த இடத்தில் நான் முன்சொன்ன செலவு விஷயத்தை உங்களுக்கு ஞாபகமூட்ட திருப்பிசொல்ல வேண்டியிருக்கிறது. அதாவது இங்கிலாந்து வாசிகள் வருஷம் 1க்கு 40 ரூ வரிகொடுப்பதாயும், இந்தியர்கள் 4 ரூ வரிசெலுத்துவதாயும் நான் முன்சொன்னது ஞாபகமிருக்கலாம், அந்த கணக்கைபார்த்தால், இங்கிலாந்தில் ஒரு ரூபாய் வரியில் நாலணா, கல்விக்கு இராஜாங்கத்தார் செலவு செய்கிறார்களென்றும், இந்தியாவில் ஒரு ரூபாய் வரியில் காலணா செலவு செய்யப்படுகிறதென்பதும் நாம் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது. இந்தியாவில் வரும் வரியில், ரூபாய்க்கு காலணா கல்விக்கு செலவு செய்யும்போது இங்கிலாந்தில்மட்டும் ஒரு ரூபாயில் நாலணா செலயு செய்யக்கூடிய வசதி என்னவென்று கேட்பீர்கள்? அது வேறொன்றுமில்லை.

## பார்லிமெண்டில் பிரஜைகளின் சுதந்திரமே அதற்கு ஆதாரம்.

இங்கிலாந்தில் பிரஜைகளுக்கு ஜவாப்புதாரியான கவர்ன்மெண்டு இருக்கிறது. பார்லிமெண்டு சபை பொது பிரஜைகளைகொண்டு பொறுக்கி எடுக்கப்பட்ட ஜனப்பிரதிநிதிகளால் பிரஜைகள் க்ஷேமத்துக்காகவும், பாதுகாப்புக்காகவும், அமைக்கப்பட்டிருக்கிறது. பார்லிமெண்டு மகாசபையின் யோசனையையும் சம்மதத்தையும் கொண்டே நமது மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தியவர்கள் தம் ஆதிபத்தியத்தைநடத்த கடமைப்பட்டவர் என்பது பிரிட்டிஷ் அரசாக்ஷி முறையில் நீடூழிகாலமாக ஏற்பட்ட அரசியல். அப்படி பார்லிமெண்டுசபையில் சொல்லப்படும் யோசனைகள் அரசருடைய

அனுமதியை பெற்றவுடன் யாவரையும் கட்டுப்படுத்தக்கூடிய சட்டங்களாய் விடுகின்றன. பிரிட்டிஷ் சட்டசித்தாந்தங்களின்படி பார்லிமெண்டு மகாசபை செலுத்தக்கூடாத அதிகாரம் ஒன்றுமில்லை. ஒரு பிறநாட்டு ராஜதந்திரி* சொன்னதாக சுதேசமித்திரன் பத்திர அதிபரும் நம்ம தேசோபகாரியுமான ஸ்ரீமான் A. அரங்கசாமி அய்யங்கார் அவர்கள் பொருளைக்கருதாத பொதுஜனோபகாரமாய் "இந்தியாவின் இராஜாங்கரீதி" என்னும் வியாசத்தில் எழுதினதுபோல, பார்லிமெண்டு சபை ஆணைப் பெண்ணாக்கவும் பெண்ணை ஆணாக்கவும் கூடாதேயொழிய மற்ற எதையும் செய்யக்கூடும். (*காசோஷ்டம்).

இப்படி இங்கிலாந்து பிரஜைகளுக்குள்ள ஜவாபுதாரியான கவர்மெண்டையும் இராஜ சுதந்தரத்தையும் நமது சக்கரவர்த்தியவர்கள் கொடையின்கீழ், இந்தியப் பிரஜைகளுக்கும் கொடுக்கும்படி கேட்பதுதான், "காங்கிரஸ்லீக் முஸ்லிபலீக்" இவர்களுடைய கொள்கை; அதை சிறிது விசாலப்படுத்தி கேட்பதுவே "ஹோம்ரூல்" கொள்கை. "ஹோம்ரூல்" என்னும் வார்த்தையையே சிலர் குற்றமாக பாவிப்பதும், பழிப்பதும், பயப்படுவதும், படுத்துவதும் பெருந்தவறு. அது இங்கிலீஷ் பதம்: ஹோம் என்பது "இங்கிலாந்தென்று" பழக்கத்தினால் பொருள்படுகிறது. ஆங்கிலேயருக்கு வரும் தபால்களுக்கும் "ஹோம் மெயில்" என்றும், இங்கிலாந்துக்கு இந்தியா கவர்ண்மெண்டார் கொடுக்கும் சிலவுக்கும் "ஹோம் சார்ஜி" என்றும், கணக்கெழுதப்படுகிறது. இதனால் ஹோம்ரூல் என்பது இங்கிலாந்திலிருப்பதுபோன்ற "அரசாக்ஷி" வேண்டுமென்றே அர்த்தமாகும். இதைத் தமிழில் "சுயஆட்சி" என்று அர்த்தங்கொள்ளவேணுமே தவிர சிலர் துஷ்டத்தனமாய் நினைப்பதுபோல ஆங்கிலேயரைத்திட்டுவதும் துரத்துவதும், நாமே அரசராக ஆளப்பார்ப்பதுமல்ல. "ஓம்" என்னும் பிரணவமந்திரம் மோக்ஷசாதகமடைய எப்படி அவசியமோ, அப்படியே ஹோம்ரூல் என்னும் சுயஆட்சியின் கொள்கை இராஜாங்க உரிமைகளை இந்தியாவில் அடைய அவசியமானது என்று கல்வியிலும், இராஜ தந்திரங்களிலும், சிறந்த கோகலே, தாதாபாய் முதலானவர்களும் வற்புறுத்துவதுடன் இந்திய க்ஷேமத்தைக்கோறும் ஆங்கிலேயர்களில் பலரும் நடுவு நிலைமை குன்றாத ஹைகோர்ட்டு ஜட்ஜிகளில் பலரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் சுயஆக்ஷிக் கேட்க இன்னும் இந்திய ஜனங்கள் பரிபக்குவப்படவில்லையென்றும் இன்னங்கொஞ்சம் பொருக்காமல் கேட்பதும், கொடுப்பதும், கெடுதி விளையுமென்றும் அப்படி செய்வதால் படித்த ஒரு வகுப்பினருக்கு கவர்ன்மெண்டு சொந்தமாய்விடும் என்றும், தடுக்கிறார்கள். இந்த தகரார்களை யோசிக்க நம்ம தாலூக்கா ஜனங்கள் இப்போது கஷ்டப்படவேண்டியதில்லை, நம்மைவிட வாசித்தவர்களுக்கும் நகரவாசிகளுக்கும் ஜனத்தலைவர்களுக்கும் அந்த பொருப்பு இருக்கவேண்டியதாயிருந்தாலும் "பிரஜைகளுக்கு ஜவாப்தாரியான அரசாக்ஷி" நமக்கு தேவையிருப்பதால் அதை அனுபவிக்கவும், மற்ற லௌகிக ராஜரீக சுதந்தரங்களை அனுபவிக்கவும், நமக்கு வாசிப்பு வேண்டியிருக்கிறது. ஆகையால் கல்வியை இன்னும் அதிகமாக நீங்கள் அடையவேண்டும். அப்படி நீங்கள் அடையுங் கல்வியானது இயற்கையைப்பற்றியும், இயந்திரங்கள், தொழில்களைப்பற்றியும் நவீன ஞானத்தை உங்களுக்கு உண்டாக்கக் கூடியதாயிருக்கவும் வேண்டும். தொழிலறிவையும், ஸயன்ஸ் ஞானத்தை தொழில்களில் உபயோகிப்பதை போதிக்கவும், பாடசாலை நீங்கள் ஸ்தாபிக்கவேண்டும். சாஸ்திர ஆராய்ச்சிக்கு வேண்டிய தளவாடங்கள் நிரம்பியிருக்கப்பெற்ற ஒரு ஆராய்ச்சி சாலையும், சாஸ்திர சம்பந்தமான நூல்களையுடைய ஒரு புத்தகசாலையும் அப்பாடசாலையுடன் சேர்ந்திருக்க வேண்டும்.

ரஸாயனம், பூமி சாஸ்திறம், நெசவு முதலிய வித்தைகளைக் கற்றுக்கொள்ள உங்களில் ஏழைகளாயிருக்கிற பிள்ளைகளுக்குப் பணம் கொடுத்து உதவிசெய்கிறதற்காக ஸ்திரமான ஏற்பாடு செய்யவேண்டும். விவசாயத்தில் உங்களுக்கு மிக்க அவாவிருக்



கிறதாக நான் அறிகிறேன். கைத்தொழில்களைச் செய்வதற்கு வேண்டிய பதார்த்தங்களை சிலாக்கியமாக உற்பத்திசெய்யவும், அவைகளை விற்றுப் பணமாக்கும் விஷயத்தில் இப்பொழுது அனுஷ்டானத்திலிருக்கிற முறைகளைவிடச் சிறந்த முறைகளையும் நீங்கள் தெரிந்துகொண்டு பிறருக்கும் தெரிவிக்கவேண்டும்.

உங்களில் விவசாயத்தில் தேர்ந்தவர்களை ஒரு கிளைச்சங்கமாக ஏற்படுத்தி அவர்களைக்கொண்டு உங்கள் ஜாதியாருக்கும் பிறஜாதியாருக்கும் விவசாய விஷங்களைப் பற்றி உபயோகமான சமாசாரங்களை சேகரித்து பரவச்செய்யவேண்டும்.

பெண்களுடைய படிப்பில் நீங்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும்; கிறிஸ்தவ சகோதரர்கள் இவ்விஷயத்தில் செய்துவரும் காரியம் வெகு உத்தமமானது. அதை ஹிந்துக்களாயுள்ளவர்களும் பின்பற்ற வேண்டும். ஹிந்து ஸ்திரீகள் படிப்பில்லாமலேயே அவர்கள் புத்திசாலிகளாகவும், புருஷர்களுக்கு உதவியாகவுமிருப்பதால், அவர்களுக்குச் சரியான படிப்பு சொல்லிவைக்க வேண்டிய அவசியத்தை சிறிது காலத்துக்கு முன் வரையில் நாம் உணரவேயில்லை. ஆனால் படிப்பினால் உண்டாகக்கூடிய பிரயோஜனம் அறிவினால்மாத்திரம் உண்டாய்விடமாட்டாது. கல்வியினால் அறிவிற்குப் பயிற்சி ஏற்பட்டபொழுது தான் புத்தியின் முழுப்பிரயோஜனமும் தெரியும். கல்வியில்லாமலிருந்திருந்தால், நீங்கள் இந்த நிலைமைக்கு வந்திருக்கக்கூடுமாவென்பதைச் சிறிது யோசித்துப்பாருங்கள்; இரண்டு தலைமுறைகளுக்குள் நீங்கள் அடைந்திருக்கிற ஆச்சரியமான அபிவிருத்திக்குக் காரணம் படிப்பே என்பதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்கள். படிப்பினால் நீங்கள் அடைந்திருக்கிற தேர்ச்சியையும் பிரயோஜனத்தையும் உங்களுடைய மனைவிமாரும், பெண்களும் சகோதரிகளும் ஏன் அடையக்கூடாது? நாம வாழும் நிகழ்காலத்தை அனுசரித்தன்றோ நடக்கவேண்டும். பழையகால ஞாபகம் பயன்படாது. அதை இத்தாலூக்காக்களில் அதிகப்படுத்துவதே நம்ம தீர்மானங்களில் முக்கியமான நோக்கமாயிருக்கவேண்டியது.

## எச்சரிக்கை.

கனவான்களே! இந்நோக்கத்துடன் நடக்கும் கான்பரன்சில் ஒவ்வொரு தீர்மானங்களைப்பற்றியும் நீகள்செய்யும் உபன்னியாசங்கள் விஷயமாக முன்எச்சரிக்கையாக அடியேன் ஒரு விண்ணப்பம் செய்துகொள்ளுகிறேன். அதாவது ஒவ்வொரு சபையும் உலகத்தில் நன்மையை உண்டாக்கவே தவிர பிறருக்கு மனத் துன்பத்தை உண்டாக்கவல்ல நான் ஏற்கனவே இந்த சபையானது எல்லா வகுப்பினருடைய க்ஷேமத்தையும் பாதுகாப்பதென்று சொல்லியிருக்கிறேன். ஆகையால் பிராமணர் பிராமணரல்லாதார் என்ற அருவருப்பையும் தூஷணையுமுண்டாக்கக்கூடிய பாஷைகளை உபயோகப்படுத்தாமலும் உத்தியோகஸ்தர்களையாவது இராஜாங்கத்தாரையாவது அவமரியாதையாக காட்டக்கூடிய வார்த்தைகளாவது உபயோகப்படுத்தாமலும் விஷயங்களை நடத்தக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆனால் ஒவ்வொரு வகுப்பினருக்குமுள்ள பாத்தியதையையும் குற்றம் குறைகளையும் எடுத்துக்காட்ட பாத்தியமுண்டு. அதில் தூஷணையும் இழிவுமுள்ள வார்த்தைகள் இல்லாதவரையில் அதை ஆக்ஷேபிக்க ஞாயமில்லை. இந்திய மாதாவின் வயற்றில்பிறந்த "இந்திய சகோதரர்கள்" என்ற மூலாதாரமான கோட்பாட்டை மறவாதீர்கள். ஜாதி வித்தியாசத்தையாவது, பெருமையையாவது பாராட்டாதீர்கள். நீங்கள் செய்யவேண்டியிருக்கும்

பெரியவேலைகளை சிந்தனை செய்யுங்கள். வெகு காலத்திற்குமுன் ராஜாக்களாயிருந்தவர்களின் வம்சத்திலோ அல்லது ஆச்சாரியர்களாயிருந்தவர்களின் வம்சத்திலோ பிறந்து வீணாகக்காலங்கழிக்கும் ஒருவனைக்காட்டிலும் தன்னுடைய பிரயாசையினால் முன்னுக்கு வந்துவிட்ட ஒருவனை அல்லது ஒரு ஜாதியை நாம் மதிக்கவும் மரியாதை செய்யவும் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தியர் என்ற உயர்ந்த ஜாதியை நீங்கள் சேர்ந்தவர்கள். அதைவிட மேலானது ஒன்றுமில்லை என்பதை நம்பி பொதுநலத்தைக்கருதி நம் காரியங்களை நிறைவேற்றுவதில் எச்சரிக்கையாயிருக்கும்படி இன்னொருமுறை கேட்டுக்கொள்வதுடன் நமது சபாநாயகரைபற்றி என் முடிவுரையில் சிறிது சொல்லிக்கொள்கிறேன். உங்கள் முன்னிலிருக்கும் ஸ்ரீமான் லோகநாத முதலியார் வக்கீலென்பதும், ராயக்கோட்டை ஜமீன் தார் என்பதும், உங்களுக்குத் தெரியும். சித்தூர் ஜில்லா ஆரணி சமஸ்தானம இவருடைய மானேஜ்மெண்டில் கவர்ன்மெண்டார் நம்பி விட்டிருந்தனர்கள். ஆகையால் இவர் கவர்ணமெண்டாரால் நன்கு மதிக்கப்பெற்றவர். அதுபோலவே பொதுஜன விஷயங்களிலும் இராஜாங்க விஷயங்களிலும் ஆழ்ந்த விரிந்த கருத்துள்ளவர் என்பதும் பிராமணர் பிராமணரல்லார் உத்யோகிகள், உத்தியோகமில்லாதவர்கள், ஹிந்துக்கள், மகம்மதியர்கள் முதலான எல்லாரும் விரும்பத்தக்கினவர் என்பதும் நான் சொல்லவேண்டியதில்லை. இச்சீமான் இங்கிருப்பது மனுஷ பிரயத்தனமட்டுமென்று நீங்கள் நினைக்கக்கூடாது. திருவுள சம்மதமும் அப்படியே இருந்தது. ஏனென்றால் இவருடன் 3 பிராமண சீமான்களையும், 2 பிராம்மணரல்லாத ஹிந்து தேசாபிமானிகளும், ஒரு மகமதிய கனவானையும் எங்களுக்குள் பொருக்கி திருவுளச்சீட்டு போட்டுபார்த்ததில் உலகத்துக்கே நாதனுயுள்ள இரட்சகன் இந்த "உலகநாத முதலியார்" பெயரை எங்களுக்கு தந்தபடியால் அதன்படி எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி இச்சபைக்கு விஜயம் செய்திருக்கிறார். ஆகையால் அவரை இந்தசபைக்கு அக்கிராசனாதிபதியாய் அமர்ந்திருக்க இப்போது நான் பிரேரேபிப்பதை நீங்கள் அங்கீகரிக்க சிறங்குநிந்து கரங்கூப்பிக கேட்டுக்கொள்ளுகிறேன். (*சம்மதி, சம்மதி. கரகோஷம்! அதுவே சரி. கரகோஷ்டம்!!

N. B.—குறிப்பு:—இந்த உபந்நியாசத்தை 1918-ளு ஜூன் 6, 7 தேதிகளின் சுதேசமித்திரன், தினசரிப்பத்திரிகையிலும் 8 தேதியில் "தேசபக்தன்" பத்திரிகையிலும் ரிபோர்ட்டு செய்யப்பட்டிருக்கிறது, [Editor]

---

இலக்ஷ்மிவிலாசம் பிரஸ், சேலம்.

# Uttankarai Taluk Conference held at Harur on 20th & 21st May 1918.

## Resolutions.

## தீர்மானங்கள்.

---

### INDIAN ENDOWMENTS.

### தேவாலயங்கள்.

---

தீர்மானம் நெம்பர் 1.

1. ஊத்தங்கரை தாலூகா எல்லா மத தேவஸ்தானங்களின் ஆராதனைகளும், திருப்பணிகளும், செம்மையாய் நடை பெறுவதற்காகவும், ஒழுங்கு படுவதற்காகவும், தாலூகா தேவஸ்தான தர்மகர்த்தாக்களை தாலூகா ஜனங்கள் 2 வருஷத்துக்கு ஒருமுறை வோட்டின்பேரில் நியமனம் செய்யவேண்டுமாயும், அப்படி செய்பவர்களையே தேவஸ்தான கமிட்டியார் ஏற்படுத்தவேணுமாயும் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

பிரேரேபணை செய்தவர்:—சஞ்சீவி செட்டியார், மர்ச்சண்டு அண்டு மிராசுதார், வெங்கடதாம்பட்டி.

ஆமோதித்தவர்:—சபாபதிகவுண்டர், மிராசுதார், வேட்டரப்பட்டி.

(a) ஊத்தஙகரை தாலூகாவில் கெவர்ன்மெண்டாராலும், பொது ஜனங்களாலும், தேவாலயங்களின் உபயோகத்துக்காகவும், சம்ரட்சணைக்காகவும், விடப்பட்ட மான்னியங்களையும், கொடுக்கப்பட்ட சொத்துகளையும், பலர் கைப்பற்றிக்கொண்டிருப்பதாகவும், துர்வினியோகப் படுத்துவதாயும் தெரியவருவதால் அவைகளை கவர்ன்மெண்டு மூலியமாயும், கோர்ட்டு மூலியமாயும் தேவஸ்தான கமிட்டியார் வசப்படுத்தவும், தேவஸ்தான காரியங்களுக்கு உபயோகப்படுத்தவும் தீர்மானிப்பதுடன் அந்த தீர்மானத்தை நிறைவேற்றவேண்டிய பொருள் உதவியும், ஜன உதவியும், தேவஸ்தான கமிட்டியாரை எதிர்பாராமல் தாலூகா மஹாஜனங்கள் செய்ய முன்னுக்குவர தயாராயிருப்பதாயும் ஏகமனதாய் தீர்மானிக்கிறார்கள்.

பிரேரேபணை செய்தவர்:—சஞ்சீவி செட்டியார், மர்ச்சண்டு அண்டு மிராசுதார், வெஙகடதாம்பட்டி.

ஆமோதித்தவர்:—குப்புசாமிசெட்டியார், தேவஸ்தான கமிட்டிமெம்பர், வியாபாரி அண்டு மிராசுதார், ஊத்தங்கரை.

(b) ஊத்தங்கரை தாலூகா தேவஸ்தானங்களுக்காக தேவஸ்தான கமிட்டியாரிடமும், தர்மகர்த்தாக்களிடமும், வந்த வரவு செலவுகளுக்கு விவரமான கணக்குகள் பகிரங்கமாக வெளிப்படுத்தி அதின் காபி ஒவ்வொரு தேவாலயத்திலும் கோரும் மஹா ஜனஙகளுக்கு கிடைக்கும்படியான மாதிரியில் வைக்கவேண்டுமாய் தேவஸ்தான அதிகாரிகளை இத்தாலூகா ஜனங்கள் வற்புருத்துகிறார்கள்.

பிரேரேபணை செய்தவர்:—H. V. வேடிசெட்டியார் அவர்கள், தாலூகா போர்ட்டு மெம்பர் & யூனியன் சேர்மேன், அரூர்.

ஆமோதித்தவர்:—வே. ல. வெங்கிடராம செட்டியார், வியாபாரி & மிராசுதார், வேங்கடதாம்பட்டி.

## LOYALTY.

### இராஜ சக்கிரவர்த்தியும் மகா யுத்தமும்.

---

தீர்மானம் நெம்பர் 2.

இத்தாலூகா மஹாஜனங்கள் இராஜசக்கிரவர்த்தியிடம் நிலையான இராஜபக்தியையும் அன்பையும் உண்மையாயும் உள்ளன்புடனும் உடையவர்களாயிருப்பதை மிகவும் வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புவதுடன் இம்மகாயுத்தம் நேச கட்சியார்களுக்கு பூரண வெற்றியுடன் சீக்கிரம் முடியுமாறு கடவுளை பிரார்த்திக்கிறார்கள்.

பிரேரேபணை செய்தவர் :—H. V. வேடிசெட்டியார் அவர்கள், தாலூகா போர்ட்டு மெம்பர் அண்டு யூனியன் சேர்மேன், அரூர்.

ஆமோதித்தவர் :—காஜி சையத்பாச்சா சாயபு பகதூர் தாலூகா போர்டு மெம்பர் அண்டு மிராசுதார், அரூர்.

## PREMIER'S & VICEROY'S APPEAL.

### பிரதம மந்திரியின் கோரிக்கை.

---

தீர்மானம் நெம்பர் 3.

ஸ்வதந்திரத்துக்காகவும், நீதிக்காகவும், ஐரோப்பாவில் நடக்கும் மஹாயுத்தத்தின் தற்கால நிலமையில் பிரதம மந்திரியின் வேண்டுகோளுக்கிணங்கி நமது இராஜாங்கத்தாருக்கு உதவி புரியவேண்டுமென்று இக்கூட்டத்தார் கோரி ஏகமனதாய் தீர்மானிக்கிறார்கள். ஆயினும் நமது சக்கிரவர்த்தியின் கொடையின் கீழ் ஸ்வதந்திரத்தை கொடுக்கக்கூடிய மாதிரியில் இந்தியாவில் பிரஜைகளுக்கு ஜவாப்தாரியான அரசாட்சியை படிப்படியாயாவது கொடுக்கத்தகுந்த மாதிரியான ஒரு சட்டத்தை இனிகாலதாமதம் செய்யாமல் இந்தியரிடத்தில் நம்பகங்கொண்டு உடனே பார்லிமெண்டில் உண்டாக்கி இந்தியருடைய நெடு நாளைய கோரிக்கையை நிறைவேற்றினால் இந்திய மக்கள் இன்னும் அதிக ஊக்கத்துடன் தங்களுடைய உடல், ஆவி, பொருள் மூன்றையும் தத்தஞ் செய்து போர்புரிய முன்னுக்கு வருவார்கள் என்று இம்மஹாநாட்டார் அபிப்பிராயப்படுகிறார்கள்.

பிரேரேபணை செய்தவர் :—C. இராமசாமி செட்டியார், தேவஸ்தான கமிட்டி மெம்பர், வியாபாரி, மிராசுதார், அரூர்.

ஆமோதித்தவர் :—குப்புசாமி செட்டியார், ஷை, ஊத்தங்கரை.

## INDIAN WAR LOAN.

### யுத்தக்கடன்.

---

தீர்மானம் நெ. 4

இந்தியா கவர்ன்மெண்டார் அவர்களால் இப்போது இரண்டாந்தரமாக விற்க விளம்பரம் செய்திருக்கும் இந்தியா யுத்தகடனை நமது தாய்நாட்டின் க்ஷேமத்தையும், நம் சக்ரவர்த்தியவர்களின் பெருமையையும், நாடி இம்மஹாநாட்டார்கள் மனப்பூர்வமாக ஆதரிக்கிறார்கள்.

நம்மால் பிரைவேட் பார்டிகளுக்கு கொடுக்கக்கூடிய பொருளை தற்சமயத்தில் நம்ம கவர்மெண்டாருக்கு கொடுத்து உதவி செய்ய இத்தாலூக்கா ஜனங்கள் முன்னுக்கு வரவேண்டுமென்று இம்மஹாநாட்டார் தீர்மானிக்கிறார்கள்.

பிரேரேபணை செய்தவர் :—H. V. வேடிசெட்டியார் அவர்கள், தாலூகா போர்டு மெம்பர் & யூனியன் சேர்மேன், அரூர்.

ஆமோதித்தவர் :—இராமசாமி செட்டியார், தேவஸ்தான கமிட்டி மெம்பர். வியாபாரி & மிராசுதார், அரூர்.



தீர்மானம் நெ. 5

இக்கூட்டத்தார் விசாரணையில்லாமல் இந்தியக்குடிகளைப் பந்தோபஸ்தில் வைப்பது இராஜாங்கமுறைக்கு குறைவு விளைவிக்கக்கூடிய ஒரு செயலென்று கவர்ன்மெண்டாருக்குத்தெரிவிப்பதோடு இதுவரையில் அவ்வாறு விசாரணையில்லாமல் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டிருக்கிற மகம்மது ஆலி ஷாகுத்தாலி முதலியவர்களை உடனே விடுதலை செய்யவேண்டுமென்றும் இந்த சமயத்தில் இராஜாங்கத்துக்கு விரோதமான குற்றம் செய்ததாக நீதிபதிகளால் விசாரணை செய்யாமல் தண்டிக்கப்பட்டிருக்கிறவர்களை யெல்லாம் விடுதலை செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

பிரேரேபணை செய்தவர் :—மகா-ள-ள-ஸ்ரீ சுப்பராவ் அவர்கள், வக்கீல், சேலம்.

ஆமோதித்தவர் :—வே. கே. பாபுசாயபு பகதூர், வியாபாரி, மிராசுதார் & அரூர் யூனியன் பஞ்சாயத்து அங்கத்தினர்.

தீர்மானம் நெ. 6.

வெள்ளத்தினாலும் பஞ்சத்தினாலும் பீடிக்கப்பட்டிருக்கும் கெயிரா நாட்டு விவசாயிகளிடத்தில் தாங்கொணாத நிலவரியை வசூலிக்கும் விஷயத்தில் ஜீவகாருண்யமற்ற ரெவின்யூ சட்டத்தை கைக்கொண்டு அதிகாரிகள் செய்யும் இம்சையை சன்மார்க்க தனத்தினால் எதிர்க்கும் கெய்ரா நாட்டு சாத்வீகமுள்ள ஜனங்களுக்கும் அவர்கள் மனைவி மக்களுக்கும் பெரும்பாலும் விவசாயிகளும் வியாபாரிகளும் நிறைந்துள்ள இந்த மஹாஜன சபையார் அனுதாபம் காட்டுவதுடன் அவர்களுடைய கோரிக்கைகளை விடாமல் காப்பாற்றவும் நிறைவேற்றவும் அவர்களுக்கு வேண்டிய எல்லாவித உதவியும், ஊக்கமும், சக்தியும் கொடுக்கவேண்டுமென்று சர்வவல்லமையுள்ள கடவுளை பிரார்த்திக்கிறார்கள்

பிரேரேபித்தவர் :—பிரசிடெண்டு அவர்கள், சேலம்.

ஆமோதித்தவர்.—மகா-ள-ள-ஸ்ரீ சுப்பராவ் அவர்கள், வக்கீல், சேலம்.

## EDUCATION.

### கல்வி.

---

தீர்மானம் நெம்பர் 7.

இச்சபையார் 7-வயது முதல் 14-வயதுள்ள சிறுவர்களுக்கு பிரதம கல்வியை இலவசமாய் கட்டாயப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறார்கள். பிரதம கல்வியை கட்டாயப்படுத்தும் சட்டங்களை உண்டாக்குவதில் கவர்ன்மெண்டார் இனிகாலதாமதம் செய்யக்கூடாதென்று அபிப்பிராயப்படுவதுடன் அப்படி சட்டம் உண்டாக்கும் வரையில் லோகல்போர்டுகளில் இலவசமாய் பிரதமபடிப்பை அதிகப்படுத்த வற்புருத்தவேண்டுமென்று கவர்ன்மெண்டாருக்கு தெரிவித்துக்கொள்ளுகிறார்கள்.

பிரேரேபணை செய்தவர் :—நாராயணசாமி பிள்ளை அவர்கள், சேலம்

ஆமோதித்தவர் :—ம. வெங்கடஞ்செட்டியார், வியாபாரி & மிராசுதார், அரூர்.

(a) இத்தாலூகாவில பஞ்சமர்கள் பாடசாலைகளை அதிகப்படுத்த வேண்டியதுடன் அவர்களுக்கு இலவச படிப்பும், (Scholarship) உபகாரசம்பளமும் கொடுத்து அவ்வகுப்பினருக்கு கல்வியில் ஊக்கத்தையும் அதிக அக்கரையையும் உண்டாக்கத்தக்கின ஏற்பாடுகள் லோகல் போர்ட்டார் செய்ய வேண்டுமென்று இக்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

பிரேரேபணை செய்தவர் :—விஸ்வாசம் பிள்ளையவர்கள், உபதேசி, தர்மபுரி.

ஆமோதித்தவர் :—குப்புசாமிசெட்டியார் அவர்கள், தேவஸ்தான கமிட்டி. மெம்பர், வியாபாரி & மிராசுதார், ஊத்தங்கரை.

(b) பஞ்சம பாடசாலைகளுக்கு தனிக்கை செய்ய ஏற்படுத்தும் அதிகாரிகள் பிராம்மணரல்லாதவர்களாயும் அல்லது பஞ்சம மாணுக்கர்களை நெருங்கி தனிக்கை செய்யவும் பரீட்சிக்கவும், வித்தியாசம் பாராட்டாதவர்களாயுமிருக்கத்தகுந்த மாதிரியில் தனிக்கை அதிகாரிகளை (Inspecting officers) லோகல் போர்டார் நியமிக்க வேண்டுமாய் இக்கூட்டத்தார் வற்புருத்துகிருர்கள்.

ப்ரேரேபணை செய்தவர் :—விஸ்வாசம் பிள்ளையவர்கள், உபதேசி, தருமபுரி.

ஆமோதித்தவர் :—குப்புசாமி செட்டியார் அவர்கள், தேவஸ்தான கமிட்டி மெம்பர், வியாபாரி & மிராசுதார் ஊத்தங்கரை.

(c) கல்வியில் தாழ்ந்த நிலைமையிலிருக்கும் சில வகுப்பினர்க்கு இலவசப் படிப்பை கொடுக்கும் விஷயத்தில் கவர்மெண்ட் உத்திரவு பிறந்தும் அதை அனுசரித்து இத்தாலூக்காவிலுள்ள எலிமெண்டரி பாடசாலைகளில் வாசிப்பை இலவசமாய் கொடுக்கும் விஷயத்தில் தற்கால ஏற்பாடுகள் அவ்வளவு திருப்திகரமில்லாததாலும் இத்தாலூகா கல்வி விஷயத்தில் அதிக தாழ்வுபட்டிருப்பதை கவனித்தும் தாலூக்கா போர்டார் இத்தாலூக்கா எலிமெண்டரி ஸ்கூல்களில் வாசிக்கும் மாணுக்கர்களுக்கு இலவசப்படிப்பை இன்னும் தாராளமாய் கொடுக்கவேண்டுமென்று இக்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிருர்கள்.

ப்ரேரேபணை செய்தவர் :—மலையபிள்ளையவர்கள், மிராசுதார், பொன்னேரி.

ஆமோதித்தவர் :—தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள், ஷை, சின்னுங்குப்பம்.

(d) ஊத்தங்கரை தாலூக்காவின் அவசியமான அநேக இடங்களில் (Grant-in-Aid) பாடசாலைகள் நாளுக்கு நாள் குறைந்து வருவதாலும் அதனுல் தாலூக்கா போர்டில் பாடசாலைகள் வைக்கக்கூடாத இடங்களிலுள்ள கிராமவாசிகள் கல்வி அபிவிர்த்திக்கு இடையூறு உண்டாவதாலும் ஊத்தங்கரை தாலூக்காவிலுள்ள எல்லா பிரைவேட் பாடசாலைகளும் தளைத்தோங்குமாதிரியில் கிராண்ட்டுகள் தாராளமாய் கொடுக்கவேண்டியிருப்பது பற்றியும் கிராண்டு பாடசாலைகளில்லாத விடங்களில் நூதனமாய் கிராண்டு பாடசாலைகள் உண்டாக்கத்தகுந்த ஏற்பாடுகள் செய்யத்தகுந்த மாதிரியில் குறிப்பாயும் தாராளமாயுமுள்ள கவனத்தை தாலூக்கா போர்டார் செலுத்தவேண்டுமென்று இக்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிருர்கள்.

ப்ரேரேபணை செய்தவர் :—C. ராமசாமி செட்டியார் அவர்கள் தேவஸ்தான கமிட்டி மெம்பர், வியாபாரி & மிராசுதார், அரூர்.

ஆமோதித்தவர் :—முத்துசாமி முதலியாரவர்கள், மிராசுதார் இருளப்பட்டி.

(e) சுயமுயற்சியாலும் தாலூக்கா போர்டார் உதவியை பெற்றும் இத்தாலூக்காவில் பாடசாலைகளில்லாத ஒவ்வொரு கிராமம் அல்லது கிராமத்தொகுதிகளில் கிராம பாடசாலைகளை உண்டாக்கவும் அவைகளின் மானேஜ்மெண்ட்டுக்காக தாலூக்கா போர்டாருல் கிடைக்கக்கூடிய பொருளுதவியை பொராத சமயங்களில் வேண்டிய பொருளுதவியை அந்தந்த கிராம வாசிகள் குறிப்பாயும் தாலூக்கா மகாஜனங்கள் பொதுவாயும் தாராளமாயும் செய்யவும் அவ்வித பாடசாலைகளை பரிபாலிக்கவும் இக்கூட்டத்தாரால் ஏகமனதாய் தீர்மானிப்பதுடன் இத்தீர்மானத்தை நிறைவேற்றும் பொறுப்பை இத்தாலூகா வேளாள வகுப்பினர் ஒப்புக்கொள்ளுகிருர்கள்.

ப்ரேரேபணைசெய்தவர் :—சின்னப்பகவுண்டர் அவர்கள், மிராசுதார், வேட்டறபட்டி.

ஆமோதித்தவர் :—நா. தீர்த்தகிரிகவுண்டர் அவர்கள், ஷை சின்னுங்குப்பம்.

(f) தாலூகா போர்டு ஸ்கூல்களில் 4-வது வகுப்பு முதல் வாசிக்கும் மாணுக்கர்களுக்கு பொதுவாயும் வியாபாரிகளின் பிள்ளைகளுக்கு குறிப்பாயும் வியாபாரக்கணக்கெழுதும் நூலும் இந்தியாவின் வியாபாரச் சரக்குகள் ஏற்றுமதி இறக்குமதியாகக்கூடிய இடங்களை தெரிவிக்கு



முறையுள்ள பூகோள சாஸ்திரங்களையும் (Book-keeping and Commercial Geography) கற்பிக்க தகுந்த ஏற்பாடுகளை காலதாமதமின்றி தாலூக்காபோர்டார் செய்யவேண்டுமாக இக்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிருர்கள்.

பிரேரேபணை செய்தவர் :—சஞ்சீவி செட்டியாரவர்கள், மர்ச்சண்டு அண்டு மிராசுதார், வேங்கடதாம்பட்டி.

ஆமோதித்தவர் :—குப்புசாமிசெட்டியாரவர்கள், தேவஸ்தான கமிட்டிமெம்பர், வியாபாரி அண்டு மிராசுதார், ஊத்தங்கரை.

(g) நவீன விவசாய சம்மந்தமான கலைகளில் இந்த ஜில்லா விவசாயிகள் பாண்டித்யமடையவும் விவசாய விர்த்தியை அதிகப்படுத்தும் மாதிரியாக விவசாய தொழிலாளிகளின் பிள்ளைகளுக்காக சேலத்தில் ஒரு சென்ட்றல் விவசாய ஸ்கூலும், தொழிற்சாலையும், கவர்மெண்டார் ஏற்பாடு செய்யவேணுமாக இக்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிருர்கள்.

பிரேரேபணை செய்தவர் :—H. V. வேடிசெட்டியார் அவர்கள், தாலூகா போர்டு மெம்பர் & யூனியன் சேர்மேன், அரூர்.

ஆமோதித்தவர் :—வே. கே. பாபுசாயபு பகதூர், வியாபாரி, மிராசுதார் & அரூர் யூனியன் பஞ்சாயத்து அங்கத்தினர்.

(h) ஊத்தங்கரையிலும் அரூரிலும் பிரத்தியேகமாக தாலூகா போர்டு பெண்கள் பாடசாலை ஏற்படுத்தவேண்டுமாய் இக்கூட்டத்தார் லோகல் போர்டாறை கேட்டுக்கொள்ளுகிருர்கள்.

ப்ரேரேபணை செய்தவர் :—C. ராமசாமி செட்டியார் அவர்கள், தேவஸ்தான கமிட்டி மெம்பர், வியாபாரி & மிராசுதார், அரூர்.

ஆமோதித்தவர் :—குப்புசாமி செட்டியார் அவர்கள், தேவஸ்தான கமிட்டி மெம்பர், வியாபாரி & மிராசுதார், ஊத்தங்கரை.

## AGRICULTURE.
## விவசாயம்.

---

தீர்மானம் நெ 8.

இத்தாலூக்காவில் பெரும்பாலார் குடிகளின் ஜீவனோபாயமே கிருஷித் தொழிலாயிருப்பதை முன்னிட்டும், அதை விர்த்தி செய்யும்பொருட்டும், ஒரு விவசாய மாதிரி பண்ணை இத்தாலூக்காவிற்கு மத்தியஸ்தானமான அரூரில் ஏற்படுத்த வேண்டியதுடன் பசு விர்த்தியை உண்டாக்கவும், பாதுகாக்கவும் கோரி ஒரு கால்நடை ஆஸ்பத்திரியும் பொலி யெருதும் கவர்மெண்ட்டார் ஏற்பாடு செய்யவேணுமாய் இக்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிருர்கள்.

பிரேரேபித்தவர் :—சபாபதிகவுண்டர், மிராசுதார், வேட்டறப்பட்டி.

ஆமோதித்தவர் :—நா. தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள், ஷை, சின்னுங்குப்பம்.

2. வருஷம்பிரதி நடக்கும் தீர்த்தமலை ரதோச்சவகாலத்தில் விவசாய பொருட்காட்சியும், கால்நடை காட்சியும், வாரம் பிரதி அரூரில் மாட்டுசந்தையும் உண்டாக்கத்தகுந்த ஏற்பாடுகள் கவர்மெண்டார் செய்யவேண்டுமாய் இக்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிருர்கள். இது விஷயத்தில் இத்தாலூக்கா ஜனங்களாலாகவேண்டிய உதவியும் முயற்சியும் செய்ய தயாராயிருக்க தீர்மானிக்கிருர்கள்.

ப்ரேரேபணை செய்தவர் :—கோபாலகிருஷ்ண அய்யங்கார் அவர்கள்.

ஆமோதித்தவர் :—குப்புசாமிசெட்டியார் அவர்கள், தேவஸ்தான கமிட்டி மெம்பர், வியாபாரி & மிராசுதார், ஊத்தங்கரை.

3. ஊத்தங்கரை தாலுக்காவில் கூலியாட்கள் கிடைப்பது நாளுக்குநாள் அபூர்வமாய் போய்விட்டிருப்பதை முன்னிட்டு வெளிநாடுகளுக்கு கூலிக்கு ஆள்கள் போகாதிருக்கும் மார்க்கங்களை ஜனத்தலைவர்கள் செய்யவேண்டியதுடன், அதுவிஷயமாய் கவர்மெண்ட்டாரும் அவசரமான ஏற்பாடுகள் செய்யவேணுமாய் இக்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

ப்ரேரேபணை செய்தவர் :—அக்கிராசனாதிபதி அவர்கள்.

ஆமோதித்தவர் :—சபையார் ஏகோபித்து.

## IRRIGATION.

### நீர்க்கூலிச் சீட்டு, தண்டதீர்வை.

தீர்மானம் நெ. 9

இக்கூட்டத்தார் புன்செய் நிலங்களில் நஞ்சைப்பயிராவது தோட்டப்பயிராவது செய்வதாயிருந்தால் அதற்கு ஏரியின் தண்ணீரை உபயோகப்படுத்துவதற்கு அனுமதி கொடுப்பதா, கொடுக்கக்கூடாதாவென்று தீர்மானிப்பதற்கு ஒவ்வொரு ஏரிக்கும் ஒவ்வொரு பஞ்சாயத்தை ஏற்படுத்தவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள்.

ப்ரேரேபணை செய்தவர் :—அக்கிராசனாதிபதி அவர்கள்.

ஆமோதித்தவர் :—சபையார் ஏகோபித்து.

(a) ஓர் ஏரியின் கீழ் ஆயக்கட்டில் சேராத நிலத்திற்கு ஏரியில் ஜலம் அதிகமாயிருக்கும்போது அந்நிலத்தின் பட்டாதார் முன்னாடி உத்திரவின்றியே தங்கள் நிலத்திற்கு ஜலம் பாய்ச்சிக்கொள்ளலாமென்றும், பின்பு தண்டதீர்வை விதிக்காமல் நியாயமான வரியே வசூல் செய்யவேண்டுமென்றும், கால்வாய்களில் அல்லது கயங்களில் அதிகமாய் ஜலம் போகும்போது தானாய் அடுத்த நிலங்களுக்குக் கசிந்தும் புரண்டும் பாயும் ஜலத்திற்கும் நியாயமான நீர்க்கூலியே விதிக்க வேண்டுமென்றும் தண்டதீர்வை விதிக்கக்கூடாதென்றும், இம்மஹாநாட்டார் கவர்ன்மெண்ட்டாரை வற்புறுத்தி கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

ப்ரேரேபணை செய்தவர் :—அக்கிராசனாதிபதி அவர்கள்.

ஆமோதித்தவர் —சபையார் ஏகோபித்து

## FOREST.

### காட்டிலாகா.

தீர்மானம் நெ. 10

மற்ற ஜில்லாக்களைப்போலவே இத்தாலுக்காவிலும் விறகு விலை அதிகமாயிருக்கிறபடியால் ஏழைகள் கஷ்டப்படுவதை யோசித்து ஒவ்வொரு பெரிய ஊர்களிலும் சர்க்காரில் விறகு டிப்போக்களை ஏற்படுத்தி குறைந்த விலைக்கு விற்கவேண்டுமென்றும் அதுமுடியாதவகையில் ஒரு ஷெட்யூல் ரேட்டை ஏற்படுத்தியும் கண்டிறாக்டர்களுக்கு இப்போது நிர்ப்பந்தமாயிருக்கும் கண்டிஷன்களை குறைத்தும் அந்த விலைக்கு அதிகப்படாமலும் குடிகள் தேவைக்கு குறைவில்லாமலும் சப்ளை செய்யவேண்டுமென்ற கண்டிஷனுடனும் கூப் கண்டிறாக்டுகளை ஏலத்தில் விடவேணுமாயும்,

(a) ஊத்தங்கரை தாலுக்கா கிராமவாசிகளுக்கு அன்ரிஜர்வு காடுகளில் சொந்த உபயோகத்துக்காக வேண்டிய விறகு எடுக்கவிடாமல் பாரஸ்டு சிப்பந்திகள் தடுப்பதும், விவசாயத்துக்குவேண்டிய எருதழைகள், விவசாயக்கருவிகளுக்கும், வீடுகளுக்கும், வேண்டிய மரசாமான்கள் மூங்கில்கள் முதலியவைகளைக்காட்டில் வெட்டிக்கொள்ள பாசு கொடுக்காமல் ரத்து செய்யப்



பட்டிருப்பதும் நாட்டுப்புறத்து ஜனங்களுக்கு தற்கால நிலைமையில் கவர்மெண்ட்டாரிடம் அதிக அருவருப்பையும் அவநம்பிக்கையும் உண்டாக்கும் மாதிரியிலிருப்பதால் இதுவிஷயத்தில் கவர்மெண்ட்டார் காலதாமதம் செய்யாமல் ஜனங்களுக்குசவுகரியத்தை யுண்டாக்கி கிராமவாசிகள் மனவருத்தத்தை நீக்கவேண்டுமாயும்,

(b) கால்நடைகளின் மேச்சல் தீர்வை இப்போதிருப்பதே தாங்க முடியாத அவ்வளவு அதிகமாயும் குடிகள் க்ஷேமத்திற்கு இடைஞ்சலாயுமிருக்கிறது. அதை அடுத்த ஜூலை முதல் இன்னும் அதிகப்படுத்தப்பார்ப்பது ஞாயமில்லாததாயும் அதிக வருத்தத்தை உண்டாக்கத்தக்கதாயுமிருப்பதால் பழய தீர்வைகளையே விதிக்கவேண்டுமென்றும் ஒரே பெர்மிட்டினால் எந்த பிளாக்கிலும் கால் நடைகளை மேய்த்துக்கொள்ள உத்திரவு பிறப்பிக்க வேண்டுமென்றும் இந்த ஏற்பாடுகள் முடியாதவரையில் நெல்லூர் முதலான வட ஜில்லாக்களில் நடக்கும 'சாஞ்சா' ஸிஸ்டம் போல இத்தாலுக்காவிலும் குடிகளுக்கு வசதியாயிருக்கக்கூடிய மாதிரியில் ஒரு ஏற்பாடு செய்யவேண்டுமென்றும்,

(c) மேல்கண்ட விஷயங்களில் எவ்வித சீர்திருத்தங்கள் செய்தாலும், உத்திரவு செய்தாலும் அவைகளை பிறப்பிப்பதற்கு முந்தி இத்தாலுக்கா மகாஜன சபை அரூரிலிருக்கும் எட் ஆபீசுக்கு தெரிவித்து அச்சபையின் அபிப்பிராயத்தை பெற்றுக்கொண்டு யோசனை செய்து அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமாயும், இக்கூட்டத்தார் கவர்மெண்ட்டாரையும் டிஸ்ட்ரிக்ட் அதிகாரிகளையும் கேட்டுக்கொள்ளுகிறார்கள்,

(d) பாரஸ்டு டிபார்ட்மெண்டில் சம்மந்தப்பட்ட பாரஸடு சம்மந்தமான வேலைகளைப் பாரஸ்டு டிபார்ட்மெண்டார் நடத்துவதால் பாரஸ்டு சிப்பந்திகளினால் பக்கத்துக்குடிகளுக்குப் பலவிதமான கஷ்டங்களும் நஷ்டங்களும் உண்டாவதால் அவ்வேலைகளை இனிமேலாகக் கண்டிராக்டில் விட்டு நடத்தும்படி கவர்ன்மெண்ட்டார் ஏற்பாடு செய்யவேண்டுமென்று இக்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்,

ப்ரேரேபணை செய்தவர் :—அக்கிராசனாதிபதி அவர்கள்,

ஆமோதித்தவர் :—சபையார் ஏகோபித்து.
பாலக்கோடு முனிசாமி கவுண்டர் ஆதரித்து பேசினார்.

## REVENUE, JUDICIAL AND MAGISTERIAL,

### ரெவின்யூ, நீதி அண்டு மாஜிஸ்திரேட் இலாகா

தீர்மானம் நெ 11.

பெரிய பிராஜக்ட்டுகள் தவிர கவர்ன்மெண்டாரால் கட்ட முடியாதிருக்கும் ஏரிகளையும், அணைகளையும், பிரைவேட்டில் கட்டிக்கொள்ள கவர்ன்மெண்டார் குடிகளுக்கு அனுமதி கொடுக்கவேண்டுமாயும்,

(a) குடிமராமத்துகள் செய்யும் ஏரிகளின் மச்சங்களை ஏலம் போட்டு விற்காமல் அந்தந்த கிராம குடிகளுக்கே இலவசமாய் மீன் பிடித்துக்கொள்ளும் பாத்தியும் கொடுக்கவேண்டுமாயும்,

(b) தென்கரைகோட்டையில் கொட விஜயன் அணை 1916-வருஷத்தில் உடைந்து போனதை இன்னும் கட்டாமலிருப்பதால் அந்த அணையின் கீழிருக்கும் ரயித்துகளுக்கு அதிக நஷ்டத்தை உண்டாக்குவதால் அதை உடனே கட்டவேணுமாய் இம்மஹாநாட்டார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

ப்ரேரேபணை செய்தவர் :—K. பச்சயப்பமுதலியார் அவர்கள், மிராசுதார், செக்ரிடரி, இராமியம்பட்டி.

ஆமோதித்தவர் :—காதர்பச்சாசாயபு அவர்கள், மிராசுதார், தென்கரைக்கோட்டை

(c) அரூரில் ரெவின்யூ வேலைகள் அதிகமாயிருக்கும் தாசில்தார், சிரஸ்தார் கோர்ட்டுகளில் கிரிமினல் வேலைகளை சேர்த்திருப்பதால் ஜனங்களுக்கும் கக்ஷிக்காரர்களுக்கும் பலவித அலச்சலும், இடஞ்சலும், பணவிரயமும் உண்டாவதால் உடனே காலஹரணம் செய்யாமல் ஒரு ஸ்டேஷனரி மாஜிஸ்திரேட் கோர்ட்டை ஊத்தங்கரை தாலூக்காவுக்கு அமைக்கவேண்டுமாயும் அப்படி அமைக்கப்படும் வரையில் சொற்ப குற்றங்களை விசாரிக்க ஒரு ஸ்பெஷல் பெஞ்சு மாஜிஸ்திரேட் கோர்ட்டு உடனே ஏற்படுத்தவேணுமாயும் இம்மகா நாட்டார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

பிரேரேபணை செய்தவர் :—H. V. வேடிசெட்டியார் அவர்கள், தாலூகா போர்ட்டு மெம்பர் அண்டு யூனியன் சேர்மேன், அரூர்.

ஆமோதித்தவர் :—சபையார் ஏகோபித்து.

## REGISTRATION & MEDICAL.

## ரிஜிஸ்திரேஷன், மெடிகல்.

---

### தீர்மானம் நெ. 12

மாதத்தில் 15-நாளுக்கு குறையாமல் சப் ரிஜிஸ்த்திரார் அவர்கள் ஒவ்வொரு பிர்க்கா செண்டர்களிலும், பெரிய கிராமங்களிலும் வெளியில் போய் ரிஜிஸ்தரேஷன் செய்யத்தகுந்த வசதிகள் செய்யவேண்டுமாய் இம்மகாநாட்டார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

பிரேரேபணை செய்தவர் :—H. V. வேடிசெட்டியார் அவர்கள், தாலூகா போர்ட்டு மெம்பர் & யூனியன் சேர்மேன், அரூர்.

ஆமோதித்தவர் :—சபையார் ஏகோபித்து.

(a) தமிழ் ஜில்லாக்களில் பிறந்து, தமிழ் ஜனங்கள் மத்தியில் வளர்ந்து தமிழில் செம்மையான அனுபவமும், பாஷா ஞானமுமுள்ளவர்களாக பொருக்கி எடுத்து இத்தாலூக்காவுக்கு சப் ரிஜிஸ்தர் ஆபீசர்களாகவும், மெடிகல் ஆபீசர்களாகவும் அனுப்பவேண்டுமாக கவர்மெண்ட்டாரையும் டிஸ்டிரிகட் போர்டு பிரசிடெண்ட் அவர்களையும் இம்மகாநாட்டார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

பிரேரேபணை செய்தவர் :—H. V. வேடிசெட்டியார் அவர்கள், தாலூகா போர்ட்டு மெம்பர் & யூனியன் சேர்மேன், அரூர்

ஆமோதித்தவர்.—சபையார் ஏகோபித்து.

## LOCAL BOARD.

## லோகல் போர்டுகள்.

---

### தீர்மானம் நெ. 13.

தாலூகா போர்டுகளுக்கு உத்தியோகஸ்தரல்லாதவர்களையே பிரசிடெண்டுகளாக நியமிக்க வேண்டியது என்று ஜனங்கள் பொதுவாய் சொறக்கூடியதாயிருந்தாலும் வைஸ்பிரசிடெண்டுகளை இச் ஜில்லாவின தாலூகா போர்டுகளில் உத்தியோகஸ்தரல்லாதவர்களை எலக்ஷன் பேரில் நியமிக்க கவர்ன்மெண்டார் பிரயத்தனப்படவேண்டுமென்றும்,

(a) டிஸ்திரிகட்டு போர்டு மெம்பர்கள் வேலைக்கு உத்தியோகஸ்தர்கள் எலக்ஷனில் காண்டிடேட்டுகளாக நிற்கக்கூடாதென்று சட்டம் ஏற்படும் வரையில் கவர்ன்மெண்டு உத்திரவு பிறப்பிக்கவேண்டுமாயும் ரெவின்யூ தாசில்தார்கள் டி. போர்டில் தேவையாயிருந்தால் நாமினேஷன் செய்துக்கொள்ளும்படிக்கும், ஆனால் வோட்டு கொடுக்க பாத்தியஸ்தராயிருக்கப்படாதென்றும்,



(b) தா. போ. மெம்பர்கள் ஸ்தானம் காலியானவுடனே தெரிவிக்கும் விளம்பரம் தாலூக்கா கச்சேரியில மட்டும் தெரிவிப்பது போதாது. எந்த பிர்க்காவில் காலியாயிருக்கிறதோ அந்த பிர்க்கா வோட்டர்களிருக்கும் ஒவ்வொரு கிராமங்களிலும் நோட்டீசுகள் ஒட்டவேண்டுமென்றும், இனிதயாராகும் வோட்டர்கள் லீஸ்ட்டை தமிழில் அச்சடித்து பகிரங்கமாய் கோரும் வோட்டர்களுக்கு சுலபமாய் கிடைக்கத்தகுந்த ஏற்பாடுகள் செய்ய வேண்டுமாயும் இக்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

ப்ரேரேபணை செய்தவர் :—H. V. வேடிசெட்டியார் அவர்கள், தாலூகா போர்டு மெம்பர் அண்டு யூனியன் சேர்மேன், அரூர்.

ஆமோதித்தவர் :—குப்புசாமி செட்டியார் அவர்கள், தேவஸ்தான கமிட்டி மெம்பர், வியாபாரி அண்டு மிராசுதார், ஊத்தங்கரை.

(c) ரோட்பண்டு என்ற தீர்வையில் ஒரு குறித்த பாகத்தை கிராமபாதைகளுக்கென்றே செலவழிக்கவேண்டுமென்றும் அது விஷயத்தில் ஸ்பெஷல் கிராண்டுகளையே எதிர்பார்த்து கிராம ரோட்டுகளை ஈனஸ்திதியில் வைத்திருக்கக்கூடாதென்றும், இம்மஹா நாட்டார் கேட்டுக்கொள்ளுகிறார்கள். அத்துடன் ரைல்வே போடாததாலும் மகாயுத்தம் இருக்கும் மாதிரியில் சமீபகாலத்தில் போடக்கூடிய சங்கற்பமில்லாதிருப்பதாலும் ரைல்வேக்களுக்காக வசூல் செய்யும் தீர்வையை கவர்ன்மெண்டார் நிருத்திவிடவேண்டுமாயும் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

ப்ரேரேபணை செய்தவர் :—H. V. வேடிசெட்டியார் அவர்கள், தாலூகா போர்டு மெம்பர் அண்டு யூனியன் சேர்மேன், அரூர்.

ஆமோதித்தவர் :—குப்புசாமி செட்டியாரவர்கள், தேவஸ்தான கமிட்டி மெம்பர், வியாபாரி அண்டு மிராசுதார், ஊத்தங்கரை.

(d) கிராம சுகாதாரங்களை கவனிக்கும் விஷயமாய் தாலூகா போர்ட்டாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சுகாதாரகமிட்டியில் தற்காலமிருக்கும் மெம்பர்கள் தொகை குறைவாயிருப்பதால் அக்கூட்டத்தார் கிராம சுகாதார விஷயங்களை சரியாய் கவனிக்கும்படி ஒவ்வொரு பிர்க்காவிலும் இன்னும் சில பெயர்களை எலக்ஷன் வோட்டர் லீஸ்டிலிருந்து பொருக்கி எடுத்து சானிடரி கமிட்டியின் தொகையை அதிகப்படுத்தியும், அவர்கள் கவனித்து நடத்த அலுவல்களை இப்போதிருப்பதைவிட விசாலமாக தா. போ. பிரசிடெண்டு அவர்கள் உண்டாக்குவதுடன் அது சரியாய் நடைபெருகிறதா வென்று பிரசிடெண்டு அவர்கள் பார்க்கவேண்டுமென்றும் இக்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

பிரேரேபணை செய்தவர் :—குப்புசாமி செட்டியாரவர்கள், தேவஸ்தான கமிட்டி மெம்பர், வியாபாரி அண்டு மிராசுதார், ஊத்தங்கரை.

ஆமோதித்தவர் :—C. இராமசாமி செட்டியாரவர்கள், தேவஸ்தான கமிட்டி மெம்பர். வியாபாரி & மிராசுதார், அரூர்.

(e) பெண்ணையார், கல்லார், பாம்பார், பண்ணிமடுவு ஆர் இவைகளுக்கு வராவதி கட்டும் விஷயத்தில் தக்கமுயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமாயும் அரூர் வாணியாற்றுக்கு வாராவதி கட்ட ஆரம்பித்தும், முடிவுபெறாமலிருப்பது ஜனங்களுக்கு பெருத்த நஷ்டத்தையும் கஷ்டத்தையும் உண்டாக்குவதால் அதை உடனே முடிக்கவேண்டுமாயும் டி. போர்டார் அவர்களை இக்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

பிரேரேபணை செய்தவர் :—காஜி ஸையத்பாச்சா சாயபு பகதூர், தாலூகா போர்டு மெம்பர் அண்டு மிராசுதார், அரூர்.

ஆமோதித்தவர் :—C. இராமசாமி செட்டியாரவர்கள், தேவஸ்தான கமிட்டி மெம்பர், வியாபாரி, மிராசுதார், அரூர்.

## 10

### POLICE.
### போலீஸ்.

தீர்மானம் நெ. 14

இத்தாலூக்காவில் பொதுவாயும், அரூரில் குறிப்பாயும், சூதாடிகளும், முடிச்சுமாரிகளும் ஜீவனோபாயத்துக்கு வழியில்லாது துன்மார்க்க வழியில் ஜீவனம் செய்து வருபவரும் நல்ல நடவடிக்கைகளுக்கு ஜாமீன் வாங்கத் தகுந்தவர்களும் சந்தேகபடக்கூடிய கேடிகளும் நாளுக்கு நாள் அதிகப்பட்டு வருவது விசனகரமாயும் அபாயகரமாயும் இருப்பதாலும், அசனுலேயே சில்லரை திருடுகள் நடப்பதற்கு காரணமென்று நம்பவேண்டி இருப்பதாலும், இது விஷயமாய் டிஸ்ட்ரிக்ட் போலீஸ் அதிகாரிகள் குறிப்பாய் கவனம் செலுத்தவேண்டுமென்றும், பொது ஜனங்களின் க்ஷேமத்தை காப்பாற்றவேண்டுமென்றும், கவர்மெண்டாருக்கு தெரிவித்துக்கொள்கிறார்கள். அதுவிஷயத்தில் போலீஸ் சிப்பந்திகளுக்கு வேண்டிய ஞாயமான ஜன உதவி செய்யவும் இம்மகாநாட்டார் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

(a) ஊத்தங்கரை தாலூக்காவில் (outpost) அவுட்போஸட்களை புது ஏற்பாட்டை அனுசரித்த பலஇடங்களில் ஏற்படுத்தி இருப்பது ஜனங்கள் பாதுகாப்புக்கும் க்ஷேமத்துக்கும் ஒப்புரவில்லாமலிருப்பதால் பழய ஏற்பாட்டின்படியே ஒவ்வொரு இடங்களில் பக்காஸ்டேஷன்களை கவர்ன்மெண்டார் உண்டாக்கவேண்டுமென்று இம்மகாநாட்டார் சிபார்சு செய்கிறார்கள்.

(b) அப்படி பக்கா ஸ்டேஷன்கள் ஏற்படும் வரையில் தீர்த்தமலையிலாவது கோட்டப்பட்டியிலாவது ஒரு (outpost) அவுட்போஸ்டை ஏற்படுத்தவேண்டுமாயும் இப்போது பள்ளிப்பட்டியிலிருக்கும் (outpost) அவுட்போஸ்டை பாபிரெட்டிபட்டிக்கு மாற்றவேண்டுமாயும் இம்மகா நாட்டார் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள்.

பிரேரேபித்தவர் :—அக்கிராசனாதிபதி அவர்கள்.

ஆமோதித்தவர் :—சபையார் ஏகோபித்து,

### POSTAL.
### போஸ்டல்.

தீர்மானம் நெ. 15

ஊத்தங்கரையிலும், கல்லாவியிலும், தபால்கள் தினப்பிரதி காலையில் கிடைக்காமல் கஷ்டப்படுவதால் தினப்பிரதி தபால்கள் காலையில் வரவும் மாலையில் போகவும் தகுந்தஏற்பாடு செய்யவேண்டுமாயும்,

(a) தீர்த்தமலை இரத உச்சவத்தில் 10-நாளைக்கு குறையாமல் தினப்பிரதி ரிஜிஸ்டர், மணியார்டர் இன்ஷியூர் உட்பட சகல தபால்களும் தினப்பிரதி வரவும் போகவும் தகுந்த ஏற்பாடு செய்யவேண்டுமாயும்,

(b) அரூர் பெரிய வியாபார ஸதளமாயும் பல உத்தியோகஸதர்கள் இருக்கக்கூடிய தாலூக்கா எட்குவார்டர் ஸதானமாயிருந்தும் ரைல்வேஸ்டேஷன் 8-மைல் தூரத்திலிருந்தும், ஒரு தந்தி ஆபீஸ் அரூரில் இல்லாமலிருப்பது வியாபாரிகளுக்கும் பொது ஜனங்களுக்கும் பலவித நஷ்டத்தை உண்டுபண்ணுவதால் யுத்தம் நடப்பது ஒரு காரணமாக சொல்லாமல் உடனே அரூரில் ஒரு தந்திஆபீசை வைக்கவேண்டுமாயும் இம்மஹா நாட்டார் கவர்மெண்டாரை கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

பிரேரேபித்தவர் :—சின்னய்ய பண்டாரம் அவர்கள், வியாபாரி & மிராசுதார், கல்லாவி

ஆமோதித்தவர் :—ம. வெங்கடஞ்செட்டியார், வியாபாரி & மிராசுதார், அரூர்

## 11

### INCOME TAX
### வருமானவரி

தீர்மானம் நெ. 16.

கிராமமுன்சிப், கர்ணம் இவர்களின் வார்த்தையின்பேரில் வருமானவரி விதிக்கும்முறை அதிகக்கெடுதல்களை விளைவித்திருக்கிறபடியால் ஒவ்வொரு ஊரிலும் கிராம உத்தியோகஸ்தர்களுக்குபதிலாக இதற்கென ஒரு பஞ்சாயத்தாரை நியமித்து அவர்கள் அபிப்பிராயத்தின் பிரகாரம் வரி விதிக்கும்படி இக்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள். கிராமமுன்சிப் கர்ணம் இவர்களின் வார்த்தையின் பேரில் வருமான வரி விதிக்கும் முறை அதிக கெடுதல்களை விளைவிக்கின்றன.

எவ்வாறெனில் :—

ஒரு சிறு எல்லைக்குட்பட்ட கிராமம் அல்லது கிராமங்களிலுள்ள தேவைகளையும், குறைகளையும் கவனித்து தன்னால் சீர்படுத்தக் கூடியவைகளை சரியானபடி ஒழுங்கு படுத்தவும், மேலதிகாரிகளுக்கு தெரிவித்து சீர்படுத்தவேண்டியவைகளை ரிபோர்டு செய்வதற்காகவும், குடிகளுக்காகவும், இராஜாங்கத்திற்காகவும் பிரதிநிதிகளாக கிராம பெரிதனக்காரர்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். கவர்ன்மெண்டார் அதிக விசாலமான நோக்கத்துடன் கிராம பெரிதனக்காரர்களை நியமனம் செய்திருந்த போதிலும் இத்தாலூகாவில் தற்சமயத்திலுள்ள கிராம பெரியதனக்காரர்களில் சிலர் வாசிப்பு குறைவினாலும் சாவகாசதோஷத்தாலும் குடிகளுடைய பிரியத்திற்கு பாத்திரர்களாகாமலிருப்பதோடு அவர்கள் பேரில் வைப்பு கடந்த அதிகாரத்தையும் செலுத்த ஆரம்பிக்கிறார்கள். அவர்கள் செய்யும் நியாய விரோதமான உத்திரவை மறுக்கும் குடிகள் பேரில் பொறாமையடைந்து வரிக்கு லாயக்கில்லாதவர்களையும் லாயக்கானவர்களென்று ரிபோர்ட்டு செய்து தங்கள் பழியை தீர்த்துக்கொள்ளுகிறார்கள்

ஆகையால் வருமான வரி விதிக்கும் ஆபீஸர்களும் அவர்களுடைய சிப்பந்திகளும் கிராமாதிகாரிகள் உட்படவும் அவசியமிருந்தால் அவர்களை நீக்கியும் ஒருபஞ்சாயத்து ஏற்படுத்தி அவர்களை இந்தியா இன்கம்டாக்ஸ் ஆக்டின்படிக்கே தனித்தனியாகவும், ரகஸ்யமாகவும், விசாரிக்கவேண்டியது. பஞ்சாயத்தார்களுடைய ஸ்டேட்மெண்டுகளை எழுத்து மூலியமாய் ரிகார்டு செய்து அவர்கள் கையெழுத்து பெற்று பைசல் செய்து வைக்கவேணுமே தவிர தற்போது நடந்து வருகிறபடி நோட்டீஸ் எடுத்துக்கொள்வது போதுமானதல்ல. வருமானவரி விதித்த பின்பு வரி செலுத்துபவன் தன் 'ஆக்ஷேபணை போட்டு' தன்பக்ஷம் விசாரிக்க சாக்ஷிகளை கோரிக்கொண்டால் அந்த சாக்ஷிகளை வருமானவரி விதித்த ஆபீசர் விசாரிக்கவும் அவர்கள் என்ன சொல்லுகிறார்களோ அதை ரிகார்டு செய்து ஸ்டேட்மெண்டில் அவர்கள் கையெழுத்து பெறவேண்டுமே தவிர அவர்களை குருக்கு கேழ்வி கேழ்க்கக்கூடாது. ஏனெனில் வருமானவரி விதிப்பதற்கு முன் விசாரித்த பஞ்சாயத்து சாக்ஷிகளை ரகஸ்யமாய் விசாரித்து விடுகிறபடியால் அவர்களை குருக்கு கேழ்வி கேழ்க்க ஆக்ஷேபணை மனுதாரனுக்கு அநுமதியும் அவகாசமும் கொடுக்கப்படாததால் மனுதாரனுடைய சாக்ஷிகளையும் வரிவிதிக்கும் ஆபீஸர் குருக்கு கேழ்வி கேழ்க்கக்கூடாது.

ஆனால் இருதரப்பு சாக்ஷிகளின் ஸ்டேட்மெண்டுகளையும் மதித்துப்பார்த்து தீர்ப்பு சொலவேண்டும். இந்த தீர்ப்புக்குமேல் மனுதார் அப்பீல் போட நேரிட்டால் அபீல் கோர்ட்டாருக்கு இருதிரத்தாருடைய எழுத்து மூலமான ஸ்டேட்டுமெண்டுகளை தன்ரிபோர்ட்டுடன் வரிவிதிக்கும் ஆபீசர் அனுப்பவேண்டும். இவைகளைக்கொண்டு பரிசீலனை செய்து தன் அபிப்பிராயத்திற்கிணங்க அப்பீல் கோர்ட்டார் தீர்ப்பு செய்யவேண்டியதென்றும் கேட்டுக்கொள்வதுடன் இக்கோரிக்கை நிறைவேறததகுந்த உத்திரவுகள் ரெவினியூ அதிகாரிகளுக்கு உடனே அனுப்ப இத்தீர்மானத்தை கலெக்டர் அவர்களுக்கும் மதராஸ கவர்ன்மெண்டாருக்கும் அனுப்ப இம்மஹாநாட்டார் தீர்மானிக்கிறார்கள்

பிரேரேபித்தவர் :—அக்கிராசனாதிபதி அவர்கள்.

ஆமோதித்தவர் :—சபையார் ஏகோபித்து.

## RAILWAY.

### ரெயில்வே

---

**தீர்மானம் நெ. 17.**

ரைல்வே வாகின்களில் கிடைக்காத கஷ்டத்தைப்பற்றி பொதுவாயும் கிடைக்கக்கூடியசுலல்ப வாகின்களையும் சரியான காலத்திலும் சுலபமாய் கொடாமலும் ரைல்வேசிப்பந்திகளால் வியாபாரிகளுக்கிருக்கும் நஷ்டத்தையும் கஷ்டத்தையும் பற்றி குறிப்பாயும் கவர்ன்மெண்டாரும். ரைல்வே போர்ட்டாரும் காலதாமதம் செய்யாமல் ஒரு கமிஷன் ஏற்படுத்தி விசாரித்து வியாபாரிகள் கஷ்டத்தை நிவர்த்திக்க வேண்டுமாய் இம் மஹாநாட்டார் கேட்டுக்கொள்ளுகிறார்கள். இந்த தீர்மானத்தை இராஜப்பிரதிநிதிக்கும் ரைல்வே போர்டுக்கும் லோகல்கவர்ன்மெண்டுக்கும் ஊத்தங்கரை தாலூகா மஹாஜனசபையின் பிரசிடெண்ட்டு அனுப்பவேண்டியது.

பிரேரேபித்தவர் :—அக்கிராசனாதிபதி அவர்கள்.

ஆமோதித்தவர் :—சபையார் ஏகோபித்து.

## SALT & ABKARI.

### மதுபானக்கடைகளை ஊருக்கப்புறப்படுத்தல்

---

**தீர்மானம் நெ. 18.**

மதுபானக்கடைகள் ஊருக்குள்ளிருப்பதால் அநேக சிறுவர்கள் குடிக்கப்பழகிக்கொள்ளுகிறார்களென்றும் குடிக்கப்பழகினவர்கள் அடிக்கடி கடைக்குப்போய் குடிக்கநேரிடுகிறதென்றும், இதனால் ஜனங்கள் மிகவும் ஏழைகளாகிறார்களென்றும் திருவிழா முதலிய காலங்களில் சண்டை சச்சரவுகள் அதிகமாகிறதென்றும், ஆதலால் ஊருக்கு தூரத்தில் இக்கடைகள் வைக்கப்படவேண்டுமென்றும், காலை 9-மணிக்கு முந்தியும் இரவு 8-மணிக்கு பின்பும் திருநாள் பண்டிகை, சந்தை முதலிய நாட்களில் கடைகளை திறக்காமலிருக்கும் படிக்கும் கடைகளின் எண்ணிக்கைகளை இன்னும் குறைக்கும்படிக்கும் நிடந்தனைகள் ஏற்படவேண்டு மென்று இக்கூட்டத்தார் சேலம் கலெக்டர் அவர்களையும் கவர்ன்மெண்டாரையும் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

பிரேரேபித்தவர் :—H. V. வேடிசெட்டியாரவர்கள், தாலூகா போர்டு மெம்பர் & யூனியன் சேர்மென் அரூர்.

ஆமோதித்தவர் :—C. இராமசாமி செட்டியாரவர்கள், தேவஸ்தான கமிட்டி மெம்பர், வியாபாரி & மிராசுதார், அரூர்.

### சிறுவர்கள் சுருட்டு முதலிய லாகிரி வஸ்துக்களை உபயோகித்தல்.

---

**தீர்மானம் நெ. 19.**

இக்கூட்டத்தார் 16-வயதுக்குள்பட்ட சிறுவர்களுக்கு லாகிரி வஸ்துக்களும் சுருட்டு சிகரேட்டு, பீடி முதலியவைகளும் விற்காமலிருக்க பஞ்சாபிலிருப்பது போல் இம்மாகாணத்துக்கும் ஒரு சட்டம் ஏற்படுத்தும்படி விரும்புகிறார்கள்.

பிரேரேபணை செய்தவர் :—H. V. வேடிசெட்டியார் அவர்கள், தாலூகா போர்ட்டு மெம்பர் அண்டு யூனியன் சேர்மேன், அரூர்.

ஆமோதித்தவர் :—வே. ல. வெங்கிடராம செட்டியார், வியாபாரி & மிராசுதார் வேங்கடதாம்பட்டி.





## MISCELLANEOUS.

### பொது விஷயங்கள்.

---

**தீர்மானம் நெ. 20.**

தேச பாதுகாப்புக்காகவும், தேச ஊழியம் செய்யவும், வாலண்டியர்களாக (தொண்டர்களாக) ஊத்தங்கரை தாலுக்கா ஒவ்வொரு பெரிய கிராமங்களிலும் வாலிபர்கள் முன்னுக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன் கிராமத்தலைவர்கள் இது விஷயம் காலதாமதிக்காமல் அக்கரையெடுத்து தொண்டர்களை சேர்க்கவேண்டுமென்றும்,

**தீர்மானம் நெ. 21.**

ஊத்தங்கரை தாலுக்கா ஜனங்களுக்கு ஒழுக்கம், நாகரீகம். ராஜபக்தி, கல்வி முதலியவைகளை இப்போதிருப்பதைவிட அதிகமாய் போதிக்கவும் இத்தாலுக்கா மஹாஜனசபையின் நோக்கங்களை இன்னதென்று சற்பிக்கவும் பாவச்செய்யவும் நிறைவேற்றவும் ஒரு பிரசங்கியை மஹாஜன சபையின் நிர்வாக கமிட்டியார் நியமிக்கவேண்டுமென்று இக்கூட்டத்தார் கோருகிறார்கள்.

பிரேரேபித்தவர் :—சபாபதிகவுண்டர், மிராசுதார், வேட்டரம்பட்டி.

ஆமோதித்தவர் :—K. பச்சயப்ப முதலியாரவர்கள, ஷை இராமியம்பட்டி.

**தீர்மானம் நெ. 22.**

மாட்சிமை தங்கிய மதராஸ் கவர்ன்மெண்டார் அவர்கள் கிராம பஞ்சாயத்து கோர்ட்டுகள் விஷயமாய் சட்டமாக்க கொண்டு வந்திருக்கும் மசோதாவையும், அதை சில விஷயங்களில் திருத்துப்பாடு செய்யவேண்டுமென்று அபிப்பிராயம் கொடுத்து அரூர் வேடிசெட்டியார் 1918-ளு மார்ச்சி மீ 27-தேதியில் கவர்ன்மென்டுக்கு எழுதலான லெட்டரையும் வாசிக்கப்பட்டன. ஷை லெட்டரில் கண்ட அபிபபிராயத்தை இக்கூட்டத்தார் ஆதரிப்பதுடன் அதில் கண்ட விஷயங்களை சட்டமாக்குவதற்கு முந்தி, குறிப்பாய் கவர்ன்மெண்டாரும் சபை மெம்பர்களும் கவனிக்க வேணுமாய் இப்பஹாநாட்டார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்,

ப்ரேரேபணை செய்தவர் :—அக்கிராசனாதிபதி.

ஆமோதித்தவர் :—சபையார் ஏகோபித்து.

**தீர்மானம் நெ. 23**

(b) தெய்வபக்தியிலும் இராஜபக்தியிலும் மேன்மைபட்ட இஜ்ஜில்லாவில் ஒரு டிஸ்ட்ரிக்ட் கான்பரன்ஸ் கூடாமல் இருப்பது இஜ்ஜில்லா வாசிகளிடம் தேசபக்தியும் ஐக்கியமும் இல்லையென்று அனுவமாய் பிறர் நினைக்க இடம தருகிறதாகையால் சேலத்தில் ஒரு டிஸ்ட்ரிக்டு கான்பரன்ஸ் கூட்ட சேலம ஜனத்தலைவர்களும் டிஸ்ட்ரிக்ட் காங்கிரஸ கமிட்டியாரும் முன்னுக்கு வந்து ஏற்பாடு செய்யவேண்டுமாய இக்கூட்டத்தார் விரும்புகிறார்கள். இத்தீர்மானத்தை சேலம் காங்கிரஸ கமிட்டியாருக்கும் மற்ற தாலுகாவிலுள்ள ஜனதலைவர்களுக்கும் அனுபப தீர்மானிக்கிறார்கள்.

பிரேரேபணை செய்தவர் :—H. V. வேடிசெட்டியார் அவர்கள், தாலூகா போர்டு மெம்பர் & யூனியன் சேர்மேன், அரூர்.

ஆமோதித்தவர் :—C. ராமசாமி செட்டியார் அவர்கள், தேவஸ்தான கமிட்டி மெம்பர், வியாபாரி & மிராசுதார, அரூர்.

**தீர்மானம் நெ 24**

ஊத்தங்கரை தாலுகா மஹாஜன சபையின் ரூல்களும், ஆலோசனை சபை, நிர்வாக சபை ஆபீஸ உத்தியோகஸ்தர் முதலியவர்களின் லிஸ்டையும், வாசிக்கப்பட்டது,

தீர்மானம் :—அங்கீகரிக்கப்பட்டது.

### தீர்மானம் நெம்பர் 25.

(c) இம்மஹா நாடு செய்த தீர்மானங்களை அடியில்கண்டவர்கள் ஒரு டிபுடேஷனுக சென்று சேலம் கலெக்டர் அவர்களுக்கு சமர்ப்பிக்கவேண்டுமென்றும் மற்ற தீர்மானங்களை பொதுவாய் கவர்மெண்ட்டுக்கும் ஒவ்வொரு தீர்மானமும் சம்மந்தப்பட்ட அந்தந்த டிபார்ட்டுமெண்டுக்கும் ஊத்தங்கரைத்தாலூக்கா மஹாஜன சபை பிரஸிடெண்ட்டு அனுப்பலாமென்றும் இம்மஹாஜன சபையார் தீர்மானிக்கிறார்கள்

ப்ரேரேபணை செய்தவர் :—H. V. வேடிசெட்டியார் அவர்கள், தாலூகா போர்டு மெம்பா & யூனியன் சேர்மேன், அரூர்

ஆமோதித்தவர் :—ம. சின்னப்பகவுண்டர் அவர்கள், மிராசுதார், வேட்டறபட்டி.

மகா-ா-ா-ஸ்ரீ R. M. லோகனாத முதலியார் அவர்கள்,
,, H. V. வேடிசெட்டியார் அவர்கள்
,, C. ராமசாமி செட்டியார் அவர்கள்
,, V. K. பாபு சாயபு பகதூர்
,, காஜி சையத் பாச்சா சாயபு பகதூர்
,, N. தீர்த்தகிரிகவுண்டர் அவர்கள்
,, V. சின்னப்ப கவுண்டர் அவர்கள்.
,, N. வரதப்ப கவுண்டர் அவர்கள்
,, காதர் பாச்சா சாயபு பகதூர்
,, K. பச்சயப்ப முதலியார் அவர்கள்
,, ஜமால் சாயபு பகதூர்
,, கோபால கிருஷ்ண அய்யங்கார் அவர்கள்
,, சஞ்சீவி செட்டியார், V. L. வெங்கடராம செட்டியார் அவர்கள்
,, U. குப்புசாமி செட்டியார் அவர்கள்
,, A. S. ராமஅய்யங்கார், கோபாலகிருஷ்ண அய்யங்கார் அவர்கள்
,, முனுசாமி கவுண்டர் அவர்கள்.
,,

27th மார்ச்சு 1918.

Supplement No. III. அனுபந்தம் 3.

## * இங்கிலீஷ் லெட்டருக்கு தர்ஜமா

சேலம் ஜில்லா ஊத்தங்கரை தாலுகா அரூரில் ரயத்தும், தாலூகா போர்டு மெம்பரும், யூனியன் சேர்மேனுமான H. V. வேடி செட்டியார், அவர்களிடமிருந்து.

மாட்சிமைதங்கிய மதராஸ் கெவர்ன்மெண்டார் முக்கிய காரியதரிசி அவர்களுக்கு.

ஹரூர். தாசில்தார் அவர்கள் மூலியமாய்

Reference கெவர்ன்மெண்டு ஆடர் நெ. 133/1918

ஐயா,

ஊத்தங்கரை தாசில்தார் அவர்கள் நாளது மீ 21உ கண்ட 466 நெ. லெட்டரில் 1888வரு த்திய வில்லேஜ் கோர்ட் ஆக்ட்டை திருத்தும் விஷயத்தில் என்னுடைய அபிப்பிராயங்களை தெரிவிக்கும்படியாய் தெரிவிக்கிறார்.

அவர் அப்படி கேட்பது சேலம் கலெக்டர் அவர்களிடமிருந்து அவருக்கு அது விஷயமாய் கிடைத்த உத்திரவின்படி இருக்கலாமென்று நினைக்கிறேன்.

கிராமவாசிகளையும் அவர்கள் சொத்துக்களையும் பாது காப்பதற்காக உத்தேசிக்கப்பட்ட கிராம கோர்ட்டுகள் ஆக்டின் சீர்திருத்த விஷயமாய் கிராமவாசிகளுக்கு தாங்கள் சொல்லிக் கொள்ளவேண்டியதை சொல்லிக்கொள்வதற்கு இச்சந்தர்ப்பத்தை கொடுத்ததற்காக நான் வந்தனம் செய்வதுடன் இம்மசோதாவின் பொது அம்சங்களை பரிவுடன் அங்கீகரித்து அடியிற்கண்ட * சில அம்சங்களைப்பற்றி என் அபிப்பிராயங்களை தெரிவித்துக்கொள்ளுகிறேன்,

* அவைகளாவன.

(1) பஞ்சாயத்து கோர்ட்டுகளின் அமைப்பும், அவைகளுக்கு மெம்பர்களை நியமனம் செயவதும்.

(2) பஞ்சாயத்து கோர்ட்டு மெம்பர்களை சஸ்பெண்டு செய்வதும், நீக்குவதும்.

(3) கோர்ட்டுகளின் அதிகார வரையருப்பு (a) சிவில் (b) கிரிமினல்,

(4) அப்பீல்.

(5) விசாரணைகளில் சாக்ஷியங்களை பதிவு செய்தல்.

### I. கோர்ட்டுகளின் அமைப்பு.

கோர்ட்டுகளின் பிரிவுகள்.

1. இம்மசோதா மூன்று முக்கியமான விஷயங்களில் கிராம கோர்ட்டுகள் ஆக்டை திருத்த ஏற்பாடு செய்கிறது. (1) கிராமக்கோர்ட்டு அதிகார வரம்பானது 20 ரூபாயிலிருந்து 50 ரூபாயிக்கு உயர்த்தப்படும், (2) கவர்னர் அவர்களால் குறிக்கப்படும் கிராமங்களில் வில்லேஜ் கோர்ட்டைத்தவிர ஒரு பஞ்சாயத்து கோர்ட்டு ஏற்படும், (3) கிரிமினல் தாப்பில் இ. பி. கோட் பிரகாரம் தண்டிக்கக்கூடிய "சுலப சண்டை," 10 ரூபாய் மதிப்புள்ள "சொத்து திருடு," முதலிய சிறிய குற்றங்களை விசாரணை செய்யவும் அதிகாரமுள்ளவர்களாய் கலெக்டரால் தெரிந்து எடுக்கப்பட்ட 5 பேருக்கு குறையாமலும் 12 பேருக்கு மேற்படாமலும் உள்ள மெம்பர்களைக்கொண்டு அந்த பஞ்சாயத்து கோர்ட்டு அமைக்கப்பட்டிருக்கும். இந்த நியாய கோர்ட்டுகள் விதிக்கக்கூடிய உயர்ந்த அபராத தண்டனை ரூபா 15.

* வில்லேஜ் பஞ்சாயத்து கோர்ட்டுகள் ஏற்படுத்த கெவர்ன்மெண்டில் வெளிப்படுத்திவிருக்கும் "புது சட்ட" விஷயமாய் அரூர் H. V. வேடி செட்டியார் 1918–வருஷம் மார்ச்சு–மாதம் 27–தேதி மதராஸ் கெவர்ன்மெண்டுக்கு எழுதியனுப்பலான லெட்டருக்கு இந்த தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு ஊத்தங்கரை தாலூக்கா கான்பரன்சில் 21-5-18-ல் வாசிக்கப்பட்டு டை கான்பரன்ச 22-வது தீர்மானத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாயத்து என்பது பூர்வீக கிராம குடியாட்சி.

2. ஜனங்களுக்கு பஞ்சாயத்து என்னும் பெயருனது பூர்வீக "கிராம குடி ஆட்சியின்" சிறந்த ஞாபகங்களை உண்டுபண்ணுகிறது. பூர்வீக கிராம ஆட்சியின் சிறந்த கோர்ட்பாடுகள் 1816வருஷத்திய 5-வது ரெகுலேஷனில் கொஞ்சம் இருந்ததையும் இம்மசோதா நீக்க உத்தேசிக்கிறது.

இம்மசோதா என்ன காரியங்களுக்காக கருதப்படுகிறது.

3. இம்மசோதாவானது சிவில், கிரிமினல், நியாயங்கள் சீக்கிரம் நடைபெறும்படியாகவும் கிராமகோர்ட்டுகளை ஜனங்கள் விரும்பும்படியான பஞ்சாயத்து கோர்ட்டுகளை ஏற்படுத்த ஏற்பாடுகள் செய்யவும், உத்தேசிக்கிறது. ஆனால், இம்மசோதாவில் கூறப்படும் திருத்தங்கள் ஜனங்களும் கவர்ன்மெண்டாரும் எதிர்பார்க்கிறமாதிரியானபிரயோசனங்களை உண்டாக்குமா என்பதையும் எவைகளை சீர்திருத்த முயலுகின்றதோ அவைகளை சீர்திருத்த முடியுமாவென்பதையும், சட்ட நிருபண சபையார் தீர்க்க ஆலோசிக்கவேண்டும். நியாய விசாரணை நடவடிக்கைகளில் பஞ்சாயத்து கோர்ட்டுகளிடம் ஒரு நியாயாதிபதிக்கு இருக்கவேண்டிய சுயேச்சையையும், நடுவுநிலைமையும், பிரஸ்தாப மசோதா கோறினலும், அம்மசோதாவில் அப்படி கோறும் பஞ்சாயத்தை அமைக்க விதித்திருக்கும் ஏற்பாடுகள், அநேகமாய் பஞ்சாயத்து மெம்பர்களை நிர்வாக அதிகாரிகளுக்கு அடிமைபடுத்துகிறது.

இப்பஞ்சாயத்தில் பிரஜைகள் அபிப்பிராயம் கேட்கப்படுவதுமில்லை. தெரிவிக்கப்படுகிறதுமில்லை. அவர்கள் சுயேச்சையும் இல்லாமல் போகிறது.

4. ஏனென்றால் பிரஸ்தாப மசோதா 7-வது பிரிவின் பிரகாரம் உண்டாக்கப்படும் பஞ்சாயத்தானது கலெக்டரால் தெரிந்தெடுக்கப்படுவதால் அதில் ஜனங்கள் அபிப்பிராயம் கேட்கப்படுவதுமில்லை, தெரிவிக்கப்படுவதுமில்லை. அதில் ஜனங்களுடைய சுயேட்சை இல்லாமல் போகிறது. சட்ட சபையில் கனம் பிலிப்ஸ் (Mr. Philipps) துரையவர்கள் வாசித்த ரிபோர்ட்டிலிருந்து கவர்ன்மெண்டார் பஞ்சாயத்தின் முக்கியமான அம்சங்களை பாதுகாக்க விரும்புகிறார்கள் என்று புலப்படுகிறது. இதுவும் நல்ல காலத்தின் அறிகுறியே. ஆகையால் பஞ்சாயத்தின் முக்கியாம்சமென்ன? அதன் கருத்தென்ன? குணம் என்ன? குறி என்ன? எப்படி இருக்கவேண்டுமென்பதை சற்று ஆராய்ச்சி செய்வோம். பஞ்சாயத்துகள் சிறப்புற்றோங்கிய முன்னாட்களில் பஞ்சாயத்துக்கு வேண்டிய பெரியோர்களை இதரர்கள் தெரிந்தெடுத்தார்களா? அல்லது ஜனங்களே தெரிந்தெடுத்துக்கொண்டார்களா? கிராம பெரியோர்களை கிராமாந்திர ஜனங்களுக்காக கலெக்டர், டிப்டி கலெக்டர், அல்லது இவர்களுக்கு பதிலாக தாசில்தார்கள், தெரிந்தெடுக்கவேண்டுமென்று யாராவது சொன்னார்களா? ஒருவரும் சொல்லவில்லையே? கிராம ஜனங்கள் கிராம பெரியோரை பொதுவாய் தெரிந்தெடுத்துக்கொள்வது மிகவும் சாதாரணமான வழக்கம்.

பஞ்சாயத்து கோர்ட்டு என்கிற பெயருக்கு இருக்குமே ஒழிய வேறே எவ்வித பிரயோசனமும் கொடுக்காது.

5. இம்மசோதாவினால் கி. மு. கோர்ட்டு, பஞ்சாயத்து கோர்ட்டு, என்று இரண்டு கோர்ட்டுகள் ஏற்படுத்த உத்தேசம். இம்மசோதாவின் 7-5 பிரிவுகளின்படி வாதியாவது அல்லது பிரதிவாதியாவது கேசை பஞ்சாயத்து கோர்ட்டிலேயே விசாரிக்கவேண்டுமென்று கேட்கலாம். வாதி பிரதிவாதிகள் இக்கோர்ட்டில்தான் விசாரிக்கவேண்டுமென்று ஒரு அபிப்பிராயத்தை தெரிவிக்காவிடில் பஞ்சாயத்தினலாவது அல்லது கிராம முனிசீபு தனியாகவாவது கேசை விசாரணை செய்யலாம், என்றும் சொல்லப்படுகிறது. இந்த ஏற்பாட்டின் பிரகாரம் பஞ்சாயத்தார் விசாரிக்கும்படியான சிவில் கேசுகள் எல்லாம்கூட தனியாயிருக்கும், கிராம முனிசீபும் விசாரணை செய்யலாம் என்பதற்கு சந்தேகமேயில்லை. கிராம முனிசீபு கிராமத்தில் கலெக்டரின் அதிகாரத்தை அமுல் செய்யும்படியான ஒரு மிகவும் முக்கியமானவராய் விடுகிறார். புதிதாக ஏற்படுத்தப்படும் பஞ்சாயத்து கோர்ட்டுகள் தன்னுடைய அதிகாரங்களை குறைக்கவந்ததாக நினைப்பார். சுக்கிராமவாசிகளும் தூரத்திலிருக்கும் ஜனங்களும் உள்ளூரிலிருக்கும் கிராம முனிசீபின் நிஷ்டூரத்துக்கு பயப்படாமல் பஞ்சாயத்து கோர்ட்டுகளுக்கு போகக்கூடியவர்கள் வெகு அருமையாயிருக்கும். கிராம முனிசீபு பஞ்சாயத்தில் ஒரு மெம்பராக இருந்தாலும் இருக்கலாம், இல்லாவிட்டாலும் இல்லை. இம்மசோதாவினால் ஏற்படும் பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் இப்போது ரத்து ஆகப்போகும் 1816-ம் வருஷத்து 5-வது ரெகுலேஷன்படி பெஞ்சு கோர்ட்டுகள்போல நிமித்திய மாத்திரம் பெயருக்கு பஞ்சாயத்து கோர்ட்டு என்னும் பெயரை வைத்துக்கொண்டு இருக்குமே ஒழிய வேறு எவ்விதமான பிரயோசனமும் கொடுக்காது.





6. புதுசட்டம் வருவதற்கு காரணங்கள் குறித்திருந்த ஸ்டேட்மெண்டில் கண்ட பிரகாரம் மெம்பர்கள் கலெக்டரால் அல்லது டிவிஷனில் ஆபீசர்களால் தெரிந்தெடுக்கப்படுவார்கள். இது பிரஸ்தாப மசோதாவின் 6-வது பிரிவில் "கலெக்டர்" என்பதற்கு பின்னால் "ஜில்லா" என்ற வார்த்தையை விட்டுவிடவேண்டும் என்று எழுதப்பட்டிருப்பதால் அதுதான் அவர்கள் உண்மையான உத்தியேசம் என்று சந்தேகமற தெரியவருகிறது.

பஞ்சாயத்து மெம்பர்களை நியமிக்கும் விதம்.

பஞ்சாயத்து மெம்பர்களை மாமூல் பிரகாரம் தாசில்தார் அல்லது டிப்டி தாசில்தாருடைய ரிபோர்டின் பேரில்தான் நியமனம் செய்வார்கள். கிராமாதிகாரி, தாசில்தார் அல்லது டிப்டி தாசில்தாருக்கு நியமிக்கக்கூடிய பஞ்சாயத்து மெம்பர்களின் பெயர்களை தன் இஷ்டப்படி சொல்வார். அவர்களும் அப்படியே கலெக்டர் அல்லது டிப்டி கலெக்டருக்கு சொல்வார்கள். ஜில்லா கலெக்டருக்கு இவ்விதம் நியமனத்துக்கு சிபார்சு செய்யப்படும் மெம்பர்களில் ஒருவரைப்பற்றி எள்ளளவாகிலும் இன்னவன் மெம்பர்ஸ்தானத்துக்கு தகுந்தவன் தகாதவன் என்று நேரில் தெரியுமா என்பது எனக்கு சந்தேகம்: இவ்வித ஏற்பாடுகள் முன்னிருக்கும் கெட்ட பழக்கத்தையே தொடரும்படியான பழயகதைக்கே வருமே ஒழிய பிரஜைகளுக்கு சுதந்திரமாவது, சுகமாவது உண்டாக்கக்கூடியது ஒன்றுமிருக்காது.

மசோதாவின்படி பஞ்சாயத்தார்களுடைய நிலைமை.

7. இம்மசோதாவின் பிரகாரம் ஜில்லா கலெக்டர் ஒரு மெம்பரை கெட்ட நடவடிக்கைக்காகவும், இன்னும் இதரகாரணங்களுக்காகவும், சஸ்பெண்டு செய்யவும், நீக்கவும், ரிவினியூபோர்டு அப்பீலுக்கு உட்படுத்தி அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தாசில்தார் அல்லது டிப்டி தாசில்தாருக்கு அவர்களின் கட்டளைகளை நிறைவேற்றும்படியான அநேக கிராம முனிசீபுகள் பஞ்சாயத்து மெம்பர்களாக ஆவார்கள். இவர்கள்தான ஜனங்களாலும் கெவர்ன்மெண்டாராலும் நடுவு நிலைமை குன்றாமல் நியாய விசாரணைசெய்ய எதிர்பார்க்கும்படியான பஞ்சாயத்தார்? இப்பஞ்சாயத்தின் நிலை என்ன பரிதாபமாயிருக்கும்? 1916-வருஷத்து 5-வது ரெகுலேஷன்படி பஞ்சாயத்து மெம்பர்கள் கௌரவமாக எண்ணப்படுவார்கள். நடத்தப்படுவார்கள். ஆனால் இம்மசோதாவின் பிரகாரம் இவர்கள் தகுந்த முகாந்திரத்துக்காக கலெக்டரால் சஸ்பெண்டு செய்யப்பட்டும் நீக்கவும் படுவார்கள். இத்தகைய ஞாய விசாரணை செய்ய ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்ட மெம்பர்களுக்கும் ஒரு தாசில்தார் அல்லது டிப்டி தாசில்தாருடைய கேவலமான சேகவனுக்கும் வித்தியாசமில்லை போலும். இவ்வித குறைகளிருக்கும்போது மரியாதையுள்ள மனிதர்கள் பஞ்சாயத்து மெம்பராயிருந்து வேலை செய்யவேமாட்டார்கள். ரிவின்யூ அதிகாரிகளுக்கு முழுவதும் கீழ்பட்ட பஞ்சாயத்து மெம்பர்கள் சுயேச்சையாக நடுவுநிலைமை குன்றாமலும், நீதி குறையாமலும், நியாய விசாரணை செய்யக்கூடும் என்று நாம் நினைக்கமுடியுமா? பஞ்சாயத்தார்களாயிருந்து நீதி பரிபாலனம் செய்யவேண்டியவர்கள் சர்க்கார் நிர்வாக காரியங்களை நடத்த கிராம உத்தியோகஸ்தர்களால் கெவர்ன்மெண்டுக்கு உதவியாயிருக்கக்கூடுமானாலும், ஜனங்கள் நியாய விசாரணை விஷயங்களில் இவர்களை நம்பவேமாட்டார்கள். அத்தகையார் நியாய விசாரணையில் நீதியை எதிர்பார்க்க முடியவே முடியாது.

மசோதாவில் முக்கியமான பலகுறைகளில் ஒன்று இன்னதென்றும் அதற்கு பரிகாரமும்.

8. பஞ்சாயத்து மெம்பர்கள் படித்தவர்களாயிருக்கவேண்டுமென்பது இம்மசோதாவின் பல குறைகளில் நான் எடுத்துக்காட்ட விரும்புகிற முக்கியமான ஒரு குறையாகும். ஜனங்களுடைய விருப்பங்களை கவனிப்பதற்கு வேண்டிய பாதுகாப்பு விதிகளெல்லாம் செய்வது கவர்ன்மெண்டாருடைய அபிப்பிராயம் என்று இம்மசோதாவை சட்டசபைக்கு கொண்டுவந்த கவர்ன்மெண்டு ஹானரபில் மெம்பர் சட்டசபையில் சொன்னது எனக்கு ஞாபகமிருக்கிறது. தேச பக்தியிலும் இராஜதந்திரங்களிலும் முதிர்ந்த பெரியோர், கிராமங்களிலும் கூட பிரஜைகள் பஞ்சாயத்து மெம்பர்களை தெரிந்தெடுத்து (எலக்ஷன் செய்து) கொள்ளவேண்டும் என்னும் சுதந்திரத்துக்காக வாது செய்தாலும், அந்தந்த கிராமங்களில் இருக்கும்படியான கல்வியின் நிலைமை, பிரதிகட்சி, முதலான சமாசாரங்களை பக்ஷபாதமில்லாமல் நேரிலறிந்தவர்கள மெம்பர்களை தெரிந்தெடுத்துக்கொள்வது (எலக்ஷன் செய்வது) முதலிய சுதந்திரங்களை கேட்பதற்கு முந்தி கிராமாந்தர குடிகள் வாசிப்பில் பயிர்ச்சி அடைந்து முன்னுக்கு வரவேண்டிய ஏற்பாடுகள் கவர்ன்மெண்டார் முதலில் செய்ய வேண்டியதென்று விரும்புவார்கள்: ஆகையால் படிப்பு மிக்க குறைவாயுள்ளவும், தங்கள் சுதந்திரங்கள் இன்னவை என்றும் தெரியாத கிராமங்களில் ஜனங்கள் தாங்களே மெம்பர்களை தெரிந்தெடுத்

துக்கொள்ளவேண்டும் என்று நான சொல்ல முன்னுக்கு வரவில்லை. ஆனாலும், வாசிப்பு நிறைந்த சாத்தியப்படுமிடங்களில் ஜனங்கள் மெம்பர்களை தெரிந்தெடுக்கவும், மற்ற கிராமங்களில் மெம்பர்கள் படிக்கவர்களாக இருக்கவேண்டுமென்றகட்டாயத்தையும் படிப்பில்லாதவர்களைவிட படித்தவர்களையே உத்தியோகஸ்தர்கள் நியமனம் செய்யும்படிக்கும் அதிகாரிகளை பந்தப்படுத்தக்கூடிய சில ஏற்பாடுகள் ரூல்கள் மூலமாய் உண்டுபண்ண சட்டத்தில் சேர்த்துவைப்பது மிக்க க்ஷேமமாயிருக்குமென்பது எனது அபிப்பிராயம்.

தென்னிந்தியாவில் பஞ்சாயத்து கோர்ட்டு எப்படி இருக்கவேண்டுமென்பது.

9. புதிதாகவரும் கிராம பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் ஆக்ட்டு ஏதாவது ஜனங்களுக்கு உண்மையில் உபயோகமுள்ளதாயிருக்கவேண்டுமென்று கெவர்ன்மெண்டார் அபிப்பிராயப்படுவது மெய்யாயிருந்தாலும், சட்டச்சபையில் வாசித்த கனம் பிலிப்ஸ் துரையவர்கள் ரிபோர்ட்டில் தெரிவித்தபடி பஞ்சாயத்து கருத்துகளையும், அம்சங்களையும், நிலைபெற செய்யவேண்டுமென்பது கெவர்மெண்டு உத்தேசம் என்னும் வார்த்தை உண்மையானாலும், பிரஸ்தாப இம்மசோதாவில் நான் மேல் எடுத்துக்காட்டியபடி பலவிஷயங்களை திருத்தியும், நாணயமும், படிப்பும், நல்ல நிலைமையுமுள்ள கிராமவாசிகள் பஞ்சாயத்து மெம்பர்கள் ஸ்தானத்தை விரும்புமாறு யோக்கியதையுள்ள பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் பிரஜைகளுக்காக பிரஜைகளாலேயே உண்டாக்கப்பட கவர்ன்மெண்டார் சட்டத்தில் ஏற்பாடு செய்யவேண்டும. தென்னிந்தியா பஞ்சாயத்தானது என்னுடைய அபிப்பிராயப்பிரகாரம் எம்மாதிரி இருக்கவேண்டுமென்றால் கிராமாந்தர ஜனங்களுக்காக, ஜனங்களால், ஜனங்களுக்குள் அமைக்கப்படவேண்டும். அப்படிக்கில்லாவிடில் முற்றிலும் பிரயோசனமில்லை.

---

## II. வில்லேஜ் கோர்ட்டு மெம்பர்களை நீக்குவதும், சஸ்பெண்டு செய்வதும்.

பஞ்சாயத்து மெம்பர்களை சஸ்பெண்டு செய்வதும் நீக்குவதும்.

நான் எடுத்துக்காட்ட விரும்புகிற இம்மசோதாவிலிருக்கும் இன்னொரு ஆட்சேபகரமுள்ள விஷயமாவது:—மெம்பர்களை நீக்குவதும், சஸ்பெண்டு செய்வதும் முதலியவைகளைப்பற்றியவையாகும். 7-வது பிரிவு 6-வது சப் பியாராவின்படி "திறமையின்மை" "கெட்ட நடத்தை" அல்லது "வேறு தகுந்த காரணங்களுக்காக" ஒரு பஞ்சாயத்து கோர்ட்டு மெம்பரை நீக்க கலெக்டருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. "திறமை இல்லாமை" என்றால் என்ன? ஒருவருடைய அபிப்பிராயத்தின்படி "திறமையற்றவன் என்பது" எப்பொழுதும் சரியாயிருக்காது கெட்ட நடத்தை என்றால் என்ன? நான் முன்னமேயே எடுத்துக்காட்டியபடி இவ்விதநிபந்தனையிலும் சந்தர்ப்பத்திலும் ஏற்படும் பஞ்சாயத்துக்கோர்ட்டுக்கு மரியாதையுள்ள எந்த கிராமவாசியும் மெம்பர் உத்தியோகத்தை வகிக்க உடன்படார். 1816-வருஷத்திய ரெகுலேஷன் 5ல் கவர்ன்மெண்டார் பஞ்சாயத்து மெம்பர்களை கௌரவமாக நடத்தும்படி விதிக்கப்பட்டிருக்கிறது. அதுவே இதைவிடசிலாக்கியமென்று எனக்கு தோன்றுகிறது. ஆகையால் பஞ்சாயத்து மெம்பர்களை கவுரமாய் நடத்த தகுந்த ஏற்பாடுகள்செய்ய கவர்ன்மெண்டாரை நான் கோருவேன். கெட்டநடத்தை எவ்விதமான "கெட்ட நடத்தை" "எப்படி கெட்ட நடத்தை" என்பதற்கு சரியானவரையருத்து வியாக்யானம் செய்து அதற்காகவும், லஞ்சம் வாங்குதல் முதலியவற்றிற்காகவும், மெம்பர்களை நீக்கிவிடுங்கள். திறமையில்லாமை அல்லது "வேறு தகுந்த காரணங்கள்" என்பதை போன்ற பல அர்த்தங்களைக்கொடுக்கும் வார்த்தைகளுள்ள உத்திரவுகளினால் பஞ்சாயத்து மெம்பர்களை ரெவினியூ அதிகாரிகள் தண்டனைக்குட்படுத்தவேண்டாம். நீதி விசாரணை செய்வதற்காக ஏற்படுத்தும் பஞ்சாயத்து கோர்ட்டு மெம்பர்களை ஊழியனைக்கபார்க்காதீர்கள். ஊழியராயிருக்க மெம்பர்கள் பிரியப்படமாட்டார்கள். அந்த நிலைமையில் அவர்களை அமைப்பதும் நீதிக்கு கெடுதியை உண்டாக்கும்; கவர்மெண்டார் கௌரவமுள்ளவர்கள் கிராம முனிசீபு வேலைக்கு வருகிறதில்லை என்று குறை கூறுகிறார்கள். அது ஏனென்றால் ரிவின்யூ முதலிய சில டிபார்ட்டுமெண்டு அதிகாரிகள் கிராம முனிசீப்புகளை கௌரவமாக நடத்தாதபடியினால் கௌரவமுள்ள ஜனங்கள் கிராம முனிசீபு வேலைக்கு வருவதில்லை ஒரு தாசில்தாரின் இஷ்டப்படியே கிராமமுனிசீபுகள் நடப்பது முடியாதகாரியம். பலவிதங்களில் கிராம முனிசீபுகள் தாசில்தார்களின் இஷ்டப்படி நடக்க முடிவதில்லை. கிராம முனிசீபுக்கு சம்மந்தப்பட்ட எந்தவிஷயத்திலும் தாசில்தாருடைய "அபிப்பிராயம்," "தயவு" இவைகள் தேவையாய் இருக்கிறது. தாசில்தாருடைய அபிப்பிராயம் 'சிபார்சு' இவைகளின்பேரில்தான் கலெக்டர் முதலிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகிறார்கள். மெம்பர்களை நீக்கும்படியான அதிகாரம்





நியாய விசாரணையே செய்யும்படியான டிஸ்ரிக்ட் ஜட்ஜி அல்லது ஹைகோர்ட்டார் போன்றவர்களிடத்திலிருக்கவேண்டுமே ஒழிய கலெக்டர் முதலிய அதிகாரிகளிடத்தில் இருக்கவேகூடாது. கெவர்ன்மெண்டார் இவ்வித அதிகாரத்தை கலெக்டரைவிட்டு நீக்கமுடியாதென்றால் பஞ்சாயத்து மெம்பர்களை நீக்கும் விஷயத்தில் ஜில்லா கலெக்டர் நியாய விசாரணை முறைகளை (அதாவது ஜூடிஷியல் முறைகளை) அனுசரித்து விசாரணைசெய்து தீர்ப்பு செய்யும்படியாக இருக்கவேண்டும். இவ்விததீர்ப்புக்கு அப்பீல் ரிவினியூபோர்டுக்கில்லாமல் ஹைகோர்ட்டுக்குள்பட்டிருக்கவேண்டும்.

---

## III. கோர்ட்டுகளின் வசதியும் அதிகாரவரையறுப்பும்.

### (a) சீவில்.

சிவில் கோர்ட்டின் அதிகாரஎல்லை.

சீவில் கோர்ட்டுகளின் வசதிகளும் அதிகாரவரையருப்பு முதலியவைகளைப்பற்றி ஆலோசனை செய்யவேண்டியது மற்றொரு விஷயம். முதலில் கோர்ட்டுகளின் சீவில் அதிகாரவரையருப்பைப்பற்றி கொஞ்சம் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இம்மசோதாவினால் ஏற்படப்படும் வில்லேஜ் கோர்ட்டுக்கு ஒரு கிராமத்தின் முன்சிபு நீதிபதியாயிருப்பார். பஞ்சாயத்துக்கோர்ட்டுகளும் அதே ஊரில் ஏற்பட்டால் ஒரே இடத்தில் இரண்டு நியாய விசாரணை செய்யும் கோர்ட்டுகளாகின்றன. இத்துடன் இம்மசோதாவில் டிஸ்ட்ரிக்ட்முனிசீபு கோர்ட்டுக்கும் கேசுகொண்டு போகலாம் என்கிற சுயேச்சையும் சட்டம் ஜனங்களுக்கு கொடுக்கிறது. ஆகையால் இம்மசோதா ஒரு கோர்ட்டுக்கு பதிலாக அடியில் குறிக்கப்பட்ட மாதிரி மூன்று கோர்ட்டுகளை திட்டம் செய்கிறது அவையாவன: ரிவினியூ முதலிய விஷயங்களுக்காக உத்தியோகஸ்தர்களால் ஏற்படுத்தப்பட்டு இம்மசோதாவின்படி விசாரணைசெய்ய அதிகாரம் கொடுக்கப்படும் கிராம முனிசீபுகோர்ட்டு ஒன்று. இம்மசோதாவின்படி சீவில் விவகாரங்களை விசாரணைசெய்ய ஏற்படுத்தப்படும் பஞ்சாயத்து கோர்ட்டு இரண்டு டிஸ்திரிக்டு முனிசீபு கோர்ட்டு மூன்று.

முதலாவது கிராமமுனிசீபு கிராம ஆட்சிக்கு சம்மந்தப்பட்ட ஒரு உத்தியோகஸ்தராயிருப்பதால் அவர் முக்கியமாய் செய்யவேண்டியிருக்கும் ரிவினியூ முதலிய பல டிபார்ட்டுமெண்டு கிராம வேலைகள் சிறிய சீவில் விவகாரங்களை விசாரணைசெய்ய இடம் கொடுப்பதில்லை. கிராம முனிசீபுகள் தங்கள் இஷ்டப்பிரகாரம் ஜனங்களுக்கு கஷ்டத்தையும் நஷ்டத்தையும் விளைவித்துவந்தபடியால் 1816-வருஷத்திய 11-வது ரெகுலேஷன் எடுபடவேண்டியதவசியமென்று சர்க்கார் கடைசியாக தெரிந்துகொண்டு இம்மசோதா கொண்டுவந்திருக்கிறார்கள். நம்பிக்கை, திறமை, கௌரவம் வாய்ந்த மனிதர்களுக்கு கிராம முனிசீபு உத்தியோகம் கொடுக்கவேண்டுமென்ற எண்ணமும் முயற்சியும் சர்க்காரிடமிருந்துங்கூட, படிப்பும் கௌரவமும் வாய்த்தவர்கள், கிராம முனிசீபு வேலைக்கு வரவில்லை என்று பலமுறை கவர்ன்மெண்டார் குறை கூறுகிறார்கள். இதன் மூலகாரணம், உத்தியோகஸ்தர்கள் அவர்களை சரியாயும், மரியாதையாயும் நடத்ாதபடியினாலேயே படிப்பில்லாதவும் யோக்கிதையற்றவர்களையும் முக்கியமாய் கந்தாயபணம் வசூல் செய்வதற்காக சர்க்கார் நியமித்துக்கொண்டு வந்ததினால்தான் தங்களுடைய எண்ணம் நிறைவேர கக்ஷி பிரதி கக்ஷி உண்டுபண்ணியும் கௌரவமான மனிதர்களையும், ஸ்திரீகளையும் நிஷ்காரணமாக விசாரணைக்கு கொண்டுவந்து கிராம முனிசீபுகள் ஜனங்களுக்கு விரோதமாகிறார்கள். இதற்கு வேண்டிய பல திருஷ்டாந்திரங்கள் இருக்கின்றன. இப்பேர்க்கொத்த விஷயங்களில் கிராம முனிசீபுகள் நியாய விசாரணை செய்யவேண்டியவர்களாயிருக்க துன்பத்தையும், தொந்தரவையும், அநியாயத்தையும் செய்பவர்களாக இருக்கிறார்கள். ஜனங்களுடைய நம்பிக்கையை கிராம முனிசீபுகள் இழந்ததினால் தான் எவ்வித சிலவுமில்லாமல சுலபமாய் உள்ளூரில் இருக்கும் கிராம முனிசீபு கோர்ட்டை விட்டு ஜனங்கள் நியாய விசாரணைக்காகவே ஏற்பட்டுள்ள இதர கோர்ட்டுகளுக்கு பலவகை சிலவு செய்து கொண்டும் அலைச்சல்பட்டும் போகிறார்கள். ஆகையால்தான் இப்போதிருக்கும் சிஸ்டத்தின்படி படிப்பில்லாத கிராம முன்சீப்புகள் என்னும் உத்தியோகஸ்தர்களின் ஊழியர்கள் எப்பொழுது முழுவதும் எடுபட்டுப் போவார்கள் என்ற சமயத்தை நான் எதிர்ப்பார்க்கிறேன். கிராம முனிசீப்களுக்கு இந்த விஷயத்தில் கொஞ்சமேனும் அதிகாரம் கொடுக்காமல் பஞ்சாயத்தாருக்கு இந்த விஷயத்தை விசாரிக்க பிரத்தியேக அதிகாரம் கொடுக்கவேணுமென்பது நாகரீகமுள்ள கிராமவாசிகளுடைய நெடுநாளைய கோறிக்கை. என்னுடைய விருப்பமும்

அதுவேயாகும். ஒரு கிராமத்தில் அநேக கோர்ட்டுகள் ஏற்படுத்தி ஜனங்களுடைய இஷ்டத்தின்படி பெஞ்சி கோர்ட்டை விசாரிக்கச் செய்வதில் பிரயோசனமில்லை. ஒரு கிராமத்தில் ஒரு கோர்ட்டுதா னிருக்க வேண்டும். கிராம தலைவன் விவகாரங்களை எல்லாம் தன்னிடம் அனுப்பும்படியாக செய்து கொள்வான். ஆகையால் வில்லேஜ் கோர்ட்டை அடியோடு எடுத்துவிட்டு அதற்கு பதிலாக நியாய விசாரணைக்காகவே பஞ்சாயத்து கோர்ட்டுகளை ஏற்படுத்துவது மிகவும் நல்லது என்று தோன்று கிறது. கவர்ன்மெண்டு ரிவினியூ முதலான அலுவல்களுக்காகவும் கிராம நிர்வாக காரியங்களுக் கும் தனியே கிராம முனிசீப்புகள் இருக்கலாம்.

வில்லேஜ் முன்சீப்பென்ப தற்கு வியாக்கியானமென்ன.

(2) வில்லேஜ் முன்சீப் என்பதின் "வியாக்கியானம்" மசோதாவில் சரியானபடியாயில்லை. வில்லேஜ் முன்சீப் என்பது ரிவினியூ முதலிய விஷயங்களுக்காகவா அல்லது நியாய விசா ரணைக்காகவா, என்பது ஏற்படவில்லை. அது "சட்டத்தில்" தெளிவா யிருக்கவேண்டும் ரிவினியூ விஷயங்களுக்காக ஏற்பட்ட கிராம முனிசீபு அடிக்கடி ஊழியக்கார வேலை செய்வதினால் தன்னுடைய கௌரவத்தையும் சுயேற்சையையும் இழந்து விடுகிறான். ஆகையால் முன்சீப் "நியாய விசாரணைக்குதான் முன்சீபு" என்று வியாக்கியானம் மசோதாவில் காட்ட வேண்டியது அவசியம்.

கட்சிக்காரர் இஷ்டப்பட் டால் பஞ்சாயத்து கோர்ட் டில் விசாரிப்பது.

(3) கிராம வாசிகள் இஷ்டப்பட்டால் "பஞ்சாயத்து கோர்ட்டில் விசாரணைசெய்துக் கொள்ளலாம்" என்று மசோதாவில் ஏற்படுத்துவது பணச் செலவுள்ள கோர்ட்டுகளுக்கு ஜனங்கள் போய் ஏழையாய் விடுவதை தடுக்க போதுமானதல்ல. யாதொரு கேசில், பஞ்சாயத்துக்கோர்ட்டில் தாக்கல் செய்திருக்கவேண்டுமென்று டிஸ்டிரிக்ட் முனிசீப் நினைத்தால் வாதியின் சிலவு தொகையை கொடுக்காமல் மருத்துவிடலாம் என்று இம்மசோதாவின் 8-வது பிரிவில் கண்டிருப்பதானது ஜனங் களை புதிதாக ஏற்படும் கோர்ட்டுகளுக்கு போகச்செய்யும் என்ற உத்தேசத்தை நிறைவேற்றுது. அப் படி உத்தேசித்திருப்பதை நிறைவேற்ற இந்த விஷயத்தில் மசோதா செய்யும் ஏற்பாடுகள் போது மானதல்ல. கேஸ்களை தாக்கல் செய்யக்கூடிய கடைசி கோர்ட்டு, பஞ்சாயத்து கோர்ட்டுதான் என்றும் பஞ்சாயத்து கோர்ட்டுகளிலேயே தாக்கல் செய்ய வேண்டுமென்றும் கட்டாயப்படுத்தி ஜனங்களை இந்த கோர்ட்டுகளுக்கும் போகும்படியாக தூண்டவேண்டிய பாதுகாப்புகள் சட்டத்தில் உண் டாக்கவேண்டும்.

பஞ்சாயத்து கோர்ட்டு களுக்கு சிவில் விஷயமாய் ஆரம்பத்திலேயே பூரு அதி காரமும் கொடுக்க கவர்ன் மெண்டார் தங்களிடம் வேண்டிய பாதுகாப்பு இரு க்கும் அச்சப்படுவானேன்?

(4) இந்த பஞ்சாயத்துகளுக்கு முதலிலேயே பூரா அதிகார வரம்பும் கொடுக்கத்தகுந்த தருணமிதுவல்லவென்றும் ஜனங்கள் பரிபக்குவப்பட இன்னும் கொஞ்ச நாள் போகவேண்டிய திருக்கிறதென்றும் இம்மசோதாவைக்கொண்டுவந்த ஹானரபில் மெம்பர் தெரிவிக்கிறார். வில்லேஜ் பஞ்சாயத்தானது நெடுங்காலமாக சரிவர நடந்தேறி வருகிறதா என்று இதுவரை பரிக்ஷை பார்த்து வந்திருப்பதால் இப்பொழுதாவது ஜனங்களை நம்பி இந்த அதிகாரத்தை பஞ்சாயத்துக்கு கொடுக்க லாம். அப்படி கொடுக்க யோசனையே செய்யவேண்டியதில்லைஎன்பது என் அபிப்பிராயம். ஏனென் றால் :— இரண்டுவித அதிகாரம் கெவர்ன்மெண்டார் கையில் சட்டம் கொடுக்கிறது. அதாவன :— தகுந்த இடங்களில் நியாய விசாரணை பஞ்சாயத்துகளை ஏற்படுத்துவது முதலாவது அதிகாரம். இப்பஞ்சாயத்துகளின் வேலையை கவனித்து பஞ்சாயத்தை இல்லாமல் செய்யவும், தொந்திரவு கொடுக்கும் போக்கிதையற்ற மெம்பர்களை நீக்கும்படிக்கும் இருப்பது இரண்டாவது அதிகாரம் (மசோதாவின் 7-1 & 6·7 பிரிவுகளைப்பார்க்கவும்) இவைகள் கடமையை செய்யாமலிருத்தல் முதலிய குற்றங்களின் பாதுகாப்புக்காக வேண்டிய போதுமான பாதுகாப்புகளாகும். சிவில் விவகாரங் களில் பிரத்தியேகமான அதிகாரங்களை பஞ்சாயத்து கோர்ட்டுகளுக்கு இப்பொழுது கொடுத்து டிஸ் டிரிக்ட்டு முன்சீப்களுக்கு பிராதுகளை எல்லாம் பஞ்சாயத்துக் கோர்ட்டில் தாக்கல் செய்ய வேண்டு மென்று வாபஸ் செய்ய அதிகாரம் கொடுத்தால் சிவில் விவகாரங்களில் பிரத்தியேகமான அதிகாரங் களை இப்பவே பஞ்சாயத்தாருக்கு கொடுப்பதில் யாதொரு ஆக்ஷேபமுமில்லை என்று நான் நினைக்கிறேன்.

---



32

## III (B) கிறிமினல் அதிகாரம்.

கிரிமினல் அதிகாரம் பெஞ்சி கோர்ட்டுகளுக்கு கொடுக்கும் விஷயமாக இம்மசோதாவுடன் நூதனமாய் சேர்க்கப்பட்டிருக்கும் 8-வது அத்தியாயத்தை பற்றி சற்று யோசிக்கலாம். இந்த அத்தி யாயத்தின் 76-வது பிரிவின் கீழ் இந்தியன் பினல் கோடில் கண்ட சில சிறிய குற்றங்களை விசா ரணைசெய்ய பஞ்சாயத்து கோர்ட்டுக்கு அதிகாரம் கொடுக்கப்படுகிறது. B முதல் கொண்டு K வரை யிலுள்ள பிரிவுகளில் செப்பியுள்ள திருடு, தூராக்கிரதமாய் நுழைவது, தீங்கு செய்வது, துன்பப் படுத்துவது, முதலிய குற்றங்களெல்லாம் இப்பஞ்சாயத்து கோர்ட்டுகளில் சரிவர விசாரணை செய்யப்படுமாவென்று நான் சந்தேகிக்கிறேன். 10-ரூபாய் மதிப்புள்ள பாத்தியத்தை ஸ்தாபிக்கக் கூடிய நிலவழக்குகள், திருடு, கெடுதி, தூராக்கிரதமாய் பிரவேசித்தல் முதலிய குற்றங்களிலிருந்து சொத்துகள் சம்பந்தமாய் வியாஜ்ஜியங்கள் உற்பத்தியாகி கஷ்டத்தை விளைவிக்கின்றன. உயர்தரப் படிப்புள்ளவர்களால் உத்தியோகம் வகிக்கப்பட்டு, இப்பொழுது இருக்கும்படியான மாஜிஸ்திரேட் கோர்ட்டுகளாலேயே அநேக கேசுகள் சரிவர விசாரிக்கப்படாமல் அப்பீலில் ஹைகோர்ட்டுக்கு போய் தீர்ப்பாகின்றன என்பது எல்லாருமறிந்த விஷயம். நிலத்தில்விளையும், விளைபொருள் திருடு, அசை வற்றசொத்துக்களில் சுவாதீனம், முதலியவைகள் சம்பந்தப்படாத திருட்டு கேஸை விசாரிக்க இந்த கோர்ட்டுகளுக்கு அதிகாரம் கொடுக்கலாம் சுதந்திரத்தைப் பற்றிய தீங்கு, தூராக்கிரதமாய் நுழை தல், முதலிய குற்றங்கள் எல்லாம் பஞ்சாயத்து கோர்ட்டுகளால் விசாரிக்க சட்டம் இடம்கொடுக்கக் கூடாது. இந்த விஷயங்களில் பஞ்சாயத்து கோர்ட்டுகள் செய்யும் தீர்மானங்களுக்கு அப்பீல் இல்லை என்று பிரஸ்தாப மசோதாவின் 76·4 செக்ஷனில் ஏற்படுவதால் இந்தவித அதிகாரங்கள் கொடுக் கும் விஷயத்தில் கெவர்ன்மெண்டார் அதிக ஜாக்கிறதையாயிருக்கவேண்டும். பஞ்சாயத்து கோர்ட்டு தீர்ப்புகளை ரிவிஷன் செய்ய அதாவது மாற்ற டிஸ்டிரிக்ட் மாஜிஸ்திரேட்டுக்கும் டிவிஷனல் மாஜிஸ் திரேட்டுக்கும் 76·4-வது பிரிவின் கீழ் கொடுக்கப்படும் அதிகாரம் உதவி செய்யாது. ஏனென்றால் அந்த செக்ஷனில் விதிக்கப்பட்டிருப்பதுபோல லைஞ்சம், துர்நடத்தை, முதலான குற்றங்களை பஞ்சாயத்து கோர்ட்டு மெம்பர்களின்பேரில் ரூபிப்பது அதிக துர்லபம். 100-ல் ஒன்றுகூட திருப்தியாய் ரூபிக்க முடியாது.

பஞ்சாயத்து கோர்ட்டு களால் விசாரிக்கத்தக்கின கிரிமினல் குற்றங்கள் இன்ன வைகள் என்பது.

2. இ பி. கோ. 325-வது செக்ஷன்படி வரும் காயக் கேசுகளை எல்லாம் இப்பொழுதே பஞ்சாயத்துக்குட்படுத்த வேண்டியதில்லை. சப்பாரா B-யில் அசால்ட்டைப் பற்றி சொல்லி இருந்த போதிலும் இ. பி கோ. 352-வது செக்ஷன்படி தண்டிக்கக் கூடிய "கிரிமினல் போர்ஸ்" என் னும் குற்றத்தைக்கூட இம்மசோதாவைக் கொண்டு வந்தவர் அந்த பிரிவில் சேர்த்த உத்தேசித்தார் என்று நான் நம்புகிறேன். "அசால்ட்டு" என்னும் குற்றத்தைப்பற்றி இ. பி. கோ. 350-வது செக்ஷனை வியாக்கியானம் செய்திருக்கும் பிரகாரம் சப்பாரா B-யில் சேர்த்திருப்பது தவறுதல் என்று தோன்றுகிறது. இதுவுமல்லாமல் "கிரிமினல் போர்ஸ்" என்னும் குற்றத்தை இ. பி. கோ. 350-வது செக்ஷனில் வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கிறது. காயம் (Hurt) என்பதை வியாக்கி யானம் செய்திருப்பதை, இம்மசோதாவின் 76·6 செக்ஷன் K பிரிவுக்கு பொருத்தமாயிருக்க B பிரிவை அடியில் கண்டபடி மாற்றுவது நலமாயிருக்கும். அதாவது இ. பி. கோ. 350, 351, செக்ஷன்களில் "கிரிமினல் போர்ஸ்" "அசால்ட்" என்னும் குற்றங்களை விவரித்திருக்கிற படி" என்று மாற்ற வேண்டும்

ஒன்றுக்கொன்று பொரு த்தமில்லாமலிருக்கும் சில செக்ஷன்கள்.

(3) நமக்கு ஜாஸ்தி சுதந்திரம் வேண்டுமென்று கேட்கும் நாட்களில் கிராமப் பஞ்சாயத்து களுக்கு அதிக அதிகாரமும் பொருப்பாண்மையும் வேண்டாமென்று சொல்லுவது அறியாமையாகு மென்று சிலர் சொல்லக்கூடும். இப்பொழுதிருக்கும் கிராம முனிசீப்புகள் பட்சபாதமில்லாதவர்கள் என்று சொல்ல முடியாததால் கிராமாந்தரங்களில் நம்பிக்கையுண்டாக்குவதற்காகவே கிராமபஞ்சா யத்துகளை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. டவுன்களில் இருக்கும் கிராமமுனிசீபுகள் கிராமத்திலிருக் கும் கிராமமுனுசீபுகளைவிட ஜாஸ்தி கேஸ்களை பைசல் செய்கிறார்கள் என்பது நிஜமே எப்படி எவ் வளவுவரையில் கிரிமினல் கேஸ் விஷயங்களில் பெஞ்சி கோர்ட்டுகளுக்கு அதிகாரம் கொடுக்கலாம் என்பது கட்சிக்காரர்கள் வக்கீல்களுக்கு கொடுத்தும் இதர சிலவுகள் செய்தும் டிஸ்டிரிக்ட்டு முனி சீபுகோர்ட்டுக்கும் பெரியமாஜிஸ்திரேட் கோர்ட்டுக்கும் போகிறார்களே தவிர சிறிய கேசுகளுக்குகூட

எப்படி, எவ்வளவுவரையில் கிரிமினல் கேஸ் விஷயங் களில் பெஞ்சி கோர்ட்டு களுக்கு அதிகாரம் கொடுக் கலாம் என்பது.

கிராம முனிசீபினிடம் வருகிறதில்லை. கிராம பஞ்சாயத்து கோர்ட்டுகளின் பிரயத்தினம் இடையூரின்றி முடிந்தாலும் அவைகளின் ஏற்பாடு குறைவில்லாமல் வேலை செய்தாலும், மேல் சொன்ன கிராம பஞ்சாயத்து கோர்ட்டுகளுக்கு தங்களுடைய பொருப்பை தெரிந்துக்கொள்ளும் வரையிலும் தங்களுடைய வேலையை சரியாக செய்யும் வரையிலும், அதாவது சில வருஷங்கள் வரையில் சர்க்காரில் அதிகாரங்களைக் கொஞ்சமாகவும் அதிகக் கடுமையில்லாத கேசுகளையுமே விசாரிக்க அதிகாரம் கொடுக்கவேண்டும். "நீங்கள் வேண்டுமென்ற கிராமப் பஞ்சாயத்தை கொடுத்துவிட்டோம்." "உங்களூர் ஜனங்களையே நியமித்திருக்கிறோம்," "ஆனால் அந்த ஏற்பாடு சரியாய் நடக்கவில்லை" என்று கவர்ன்மெண்டார் பின்னால் சொல்லுவதில் பிரயோஜன மில்லை. இந்த மசோதாவைக் கொண்டுவந்தவர் இவற்றை எல்லாம யோசித்தே மசோதாவின் (K) (L) பிரிவில் கவர்ன்மெண்டார் எவ்விதமான குற்றங்கள் விசாரிக்கலாமென்று விளம்பரம் செய்கிறார்களோ அந்த குற்றங்கள் கிராமப்பஞ்சாயத்துகளால் விசாரிக்கப் படலாமென்று கெவர்ன்மெண்டுக்கு அதிகாரம் ரிசர்வு செய்து வழி வைத்திருக்கிறார்.

ஆகையால் என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால் பஞ்சாயத்துக் கோர்ட்டார் விசாரிக்கும் கேசுகள் ஸ்தாவர சொத்துக்களைப் பற்றிய வரையில் H L. Z. பிரிவில் சொல்லிய குற்றங்களை கிராமப் பஞ்சாயத்தார் விசாரிக்கலாமென்பதும் "காய" (Hurt) சம்மந்தமான குற்றங்கள் அவர்களிடம் விசாரணைக்கு வரக்கூடாதெனபதே இந்த ஆரம்ப பிரயத்தனம் சரியாக வேலை செய்தால் பிற்பாடு விசாலமான அதிகாரங்கள் கொடுக்கலாம.

அயோக்கியர்கள் அனாவசியமாய் பிராதுகள் கொண்டு வந்து யோக்கியர்களை அலக்ழியச் செய்யாதிருக்க சட்டத்தில் பிரஜைகளுக்கு பாதுகாப்பு இல்லை.

4. ஒரு அயோக்கியமனிதன் ஓர் கௌரவமுள்ள மனிதனை அனாவசியமாக அலைக்கழிக்கச் செய்யவும் அவமானப் படுத்தவும் விர்தாவான பிராது கொண்டுவருவதை தடுக்கக்கூடிய ஏற்பாடுகள் புது பஞ்சாயத்து ஆக்ட்டான இம்மசோதாவின் 8-வது அத்தியாயத்தில் ஒன்றும் தென்படவில்லை. கிராமக் கட்சிக்காரர்களுக்குத் தெரியாதவராயும் முகப்பழக்கமில்லாதவராயும் அதிக அதிகாரத்தை வகித்தவராயும் உள்ளவர்கள் இருக்கக் கூடிய 'பெரிய மாஜிஸ்திரேட்டு' கோர்ட்டுகளில் கூட அனாவசியமான பிராது கொண்டு வருபவனுக்கு அபராதம் போடலாமென்று கிரிமினல் புரோசிஜூர் கோடு 250-வது செக்ஷனில் விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த செக்ஷன் ஜனங்கள் பாதுகாப்புக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்பது யாவரும் அறிந்த விஷயம். பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் உள்ளூர் மனிதர்களாலேயே நடத்தப்படும். ஆதலால் கிராமத்தார்களுக்கு மிகச்சுலபமாக இருக்கும். இதைக்கொண்டு துன்மார்க்கர்கள் வேணுமென்று தங்கள் க்ஷாத்திரியத்தை தீர்த்துக் கொள்ளும் பொருட்டு கண்ணிய முள்ளவர்களை பஞ்சாயத்துக் கச்சேரிக்கு தங்கள் பிராது மூலமாய் இழுத்துக்கொண்டுபோய் நிறுத்துவார்கள். அதை விசாரித்த பின் பொய் என்றும் "மன வருத்தப்படக்கூடியதென்று" தெரிந்தும், குற்றவாளியை தண்டிக்க மசோதாவில் "விதிகள்" ஒன்றுமில்லாமையால் பஞ்சாயத்துக் கோர்ட்டாருக்கு அப்படிப்பட்டவர்களை ஒன்றும் செய்ய முடியாததாயிருக்கிறது. மாஜிஸ்திரேட்டு முன்பாக சில்லரை குற்ற கேசுகள் வந்தது 140259; அதில் தண்டிக்கப்பட்டது 16466; மீதி 123793 விடுதலை செய்யப்பட்டதென்று சட்டத்தை கொண்டு வந்த மெம்பர் கொடுத்த ஸ்டேட்மெண்டிலிருக்கிறது. இந்த மேல்கண்ட புள்ளிகளை யோசித்தால் ஜனங்கள் கி. பு. கோ. 250-வது செக்ஷன்படி மாஜிஸ்திரேட் அபராதம் போடுவாரென்று தெரிந்தும் ஜனங்கள் வீணை சச்சரவு செய்கிறார்களென்றும் அனாவசியமாக வரக்கூடிய பிராதுகளை தடுக்க போதுமான விதிகள் ஏற்பாடு செய்யவேண்டுமென்பதும் விளங்கும்.

கி. பு. கோ. 250-செக்ஷனுக்கு சமமான ஒரு செக்ஷனை மசோதாவில் ஏன் சேர்க்கவேணு மென்பத் காரணம்.

5. மேலும் புது ஆக்ட்டுபடி, கிராமக் கோர்ட்டார்களுக்கு மசோதா 77-வது பிரிவில் இப்போது விலக்கப்பட்டிருக்கும் கி. பு. கோ. 250 செக்ஷனுக்கு சமானமான ஒரு செக்ஷனை மசோதாவில் கிராம ஜனங்களை காப்பாற்றும் பொருட்டு ஏற்படுத்தவேண்டுமென்று ருஜுப்படுத்துகிறது.

அப்பேர்ப்பட்ட அதிகாரமில்லாமலிருப்பதும், பஞ்சாயத்துக் கோர்ட்டுகளால் ஞாயமில்லாதவைகளென்று கண்டுபிடிக்கப்பட்டு அநேகபிராதுகள் தள்ளும்படி செய்கிறதும், மேலதிகாரிகளுக்கு கீழ்கச்சேரியான பஞ்சாயத்து கோர்ட்டு நடத்தைகளில் சந்தேகம் உண்டாக்கும். கிராம ஜனங்களை கிராம துஷ்டர்களால் மன வருத்தப்படுத்தக்கூடிய குற்றங்களிலிருந்து காப்பாற்றவேண்டிய எண்ணத்துடனும் மேலதிகாரிகளின் சந்தேகத்துக் கிடமன்னில் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளை காப்பாற்றும்பொருட்டும், கி. பு. கோ. 250-க்கு சமமான ஒரு பிரிவு மசோதாவில் சேர்க்க வேண்டுமென்று நான் உறுதியாகச் வற்புருத்துவேன்.



## அப்பீல்.

அப்பீலில்லாவிட்டால் எப்படி நீதி கெடும் என்பதும் பஞ்சாயத்தார்களுக்கு பயமில்லாமல் இஷ்டப்படி செய்ய இடங்கொடுக்கும், என்பதும்.

1. பஞ்சாயத்துக் கோர்ட்டுகளால் செய்யப்படும் உத்திரவுகளுக்காவது, தீர்மானங்களுக்காவது அப்பீல் செய்ய இந்தமசோதா இடஞ்செய்து வைக்கவில்லை. நான் ஏற்கனவே சொன்னபடி 76-வது செக்ஷன் 4-வது பிரிவை மசோதாவில் வைப்பது க்ஷேமகரமுள்ளதல்ல. ஏனென்றால் அப்பீலில்லாத ஒரு உத்திரவையாவது தீர்மானத்தையாவது செய்யத்தக்கின ஒரு அதிகாரத்தை கோர்ட்டுகளுக்கு கொடுப்பது எப்பவும் அபாயகரமுள்ளது. 2-வது 3-வது வகுப்பு அதிகாரமுள்ள மாஜிஸ்திரேட்டுகள் அக்கிராசனத்தின் கீழ் டவுன் ஜாகாக்களின் கிரிமினல் புரோசிஜர் கோடையனுசரித்து நடத்தும் கிரிமினல் பெஞ்ச் கோர்ட்டுகளில் கூட அப்பீலில்லாத ஒரு உத்திரவை செய்ய சட்டம் அனுமதி கொடுக்கிறதில்லை. அப்படிப்பட்ட கிரிமினல் பெஞ்சு கோர்ட்டுகளால் விதிக்கப்படும் 0-8-0, எட்டு அணா அபராதத்திற்குக்கூட அப்பீலுண்டு. ஆனால் பிரஸ்தாப மசோதாவினால் ஏற்படப்போகும் கோர்ட்டுகளுக்கு அதிகமான பவர் கொடுப்பதினால் சாட்சியங்களை சரியாய் சீர்தூக்கி பார்ப்பதில் ஒழுங்கீனங்களுண்டாகியும் இன்னும் பல காரணங்களாலும் நேரிடக்கூடிய அக்கிரமம் அப்பீலிருக்கிறதென்று பயமில்லாதகாலத்தில் அதிகப்பட சந்தர்ப்பங்கள் பலவிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டவும் தங்கள் தீர்மானங்கள் அப்பீலில் கேள்விக்கு இடமில்லை என்ற பயமில்லாமல் போய்விடுகிறது என்பதை எடுத்துக்காட்டவும் நான் கிரிமினல் புரோசீட்ஜரின் விதிகளை குறிப்பிடுகிறேன்.

மசோதாவின் 76-வது பிரிவு 4-வது சப் பிரிவில் கண்டபடி ரூபித்த பிறகு கேசுகளிலும் ரிவிஷன் செய்ய பார்ப்பது அசாத்தியமான காரியம்.

2. 8-வது அத்திபாயம் 6-வது பிரிவில் சாட்சிகள் வாக்குமூலங்களை ரிகார்டுசெய்யவேண்டியதில்லை என்று ஏற்படும்போது அப்பீல், இன்னும் அவசியமான விஷயமென்று விளங்கும், தாலூக்கா போர்ட்டுகளுக்கு எலக்ஷன் விஷயத்தில் ஒருவருக்கொருவர் வித்தியாசமான மனப்பாங்கினாலும், தெரிந்தோ, தெரியாமலோ, தங்களுக்குள்ளேயே பிரிவுகள் ஏற்பட்டு அதனால் ஜனங்களுள் ஜாதி வித்தியாசங்கள் உண்டாகி கலகம் ஏற்படும் இக்காலத்தில் ஏற்படுத்தப்போகும் புது பஞ்சாயத்து கோர்ட்டுகளில் அப்பீலைவிட பரிகாரம் வேறு சுலபமானவை ஒன்றுமில்லை ஏனென்றால் இவர்கள் தீர்ப்பில் துன்பமடைந்த குற்றவாளி 76-வது செக்ஷன் 4-வது பிரிவில் கேட்கிறபடி "லெஞ்சம்" "நடத்தை பிசகு" "கொடூரமான பக்ஷபாதம்" முதலியவைகளை ரூபித்து, அந்த விதிகளின்படி கேசை புணராலோசனை செய்ய மேல் கோர்ட்டுகளில் வியாச்சியம் தொடருவது சுலபமான காரியமல்ல. ஒரு மாதத்துக்கு அதிகப்படாமலும் 50-ரூபாயுக்கு அதிகப்படாமலும் தண்டனை விதிக்கக்கூடிய அப்பீல் இல்லாத கேசுகளில் தன் கடமையை கவனிக்காத சில மாஜிஸ்திரேட்டுகள் தங்கள் மன இஷ்டப்படி சிட்சைகள் விதிப்பதும் அப்படிப்பட்ட சமயங்களில் ஐகோர்ட்டில் ரிவிஷனுக்கு போவதால் நேரிடும் கஷ்டங்களும் நஷ்டங்களும் நமக்கு அனுபவத்தில் தெரிந்தவிஷயம். ஆனால் இப்படிப்பட்ட முதல் வகுப்பு அதிகாரிகளைவிட அவர்களுக்கு கீழ்பட்ட அதிகாரமுள்ள மாஜிஸ்திரேட்டுகள் தீர்மானத்திற்கு அப்பீல் இருக்கிறதென்ற பயத்தால் மாஜிஸ்திரேட்டுகள் மனம்போனபடி அக்கிரமமான தீர்ப்பு எழுதத்துணிகிறதில்லை என்று நான் சொல்ல துணிவது மிகைபடாது. இவ்வித காரணங்களாலும் பெஞ்சு கோர்ட்டுகளின் மெம்பர்களாயிருக்கும் சில மனசாட்சி இல்லாத நபர்களால் உண்டாக்கக்கூடிய ஞாய விரோதமான செய்கைகளை தடுக்கவும், குறைக்கவும், பொது ஜனங்களுக்கு சவுகரியத்தையும் பாதுகாப்பையும் உண்டாக்கவும், வேண்டி பெஞ்சிகோர்ட்டு தீர்மானங்களுக்கு அப்பீல் இருக்கும்படியான ஏற்பாடுகள் மசோதாவில் சேர்க்க வேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.

கேஸை டிரான்ஸ்பர் செய்யும் விஷயமாய் மசோதா கொண்டு வந்தவருக்கு வந்தனம்.

3. (2) 1886-வது வருஷத்திய 11-வது ரெகுலேஷன் கிராம முனிசீப்பிடம் நடக்கும் கேசை ஹைகோர்ட்டுக்கே விண்ணப்பம் போட்டு மாற்ற வேண்டுமென்கிற பயமும் ஹைகோர்ட்டில் கேசை நடத்த அதிக பணம் சிலவழியும் என்கிற பயமும் தீரும்படி கி. மு. கோர்ட்டு கேஸ்கள் மாற்றுவதைப் பற்றி பிரஸ்தாப மசோதா 25-வது செக்ஷன் 5-வது பிரிவில் விதிகள் ஏற்படுத்தியிருப்பதற்காக இந்த மசோதா கொண்டுவந்த மெம்பர் அவர்களுக்கு நான் வந்தனமளிக்கிறேன். கிராம முனிசீபுகள் கோர்ட்டிலிருந்த கேசுகளை மாற்ற ஹைகோர்ட்டுக்கு விண்ணப்பம்போட்டு அதனால் பண நஷ்டமும் மனகஷ்டமும் பட்ட ஏழைக்குடிகள் இந்த ஏற்பாட்டை உண்டாக்கும் "மசோதா" ஒரு வரப்பிரசாதம் என்றே நினைப்பீர்களென்று நான் நினைக்கிறேன்.

## சாட்சியம் பதிந்து கொள்வது.

1. கடைசியாக விசாரணையில் சாட்சியம் பதிந்துக்கொள்வதைப்பற்றி கிஞ்சித்து சொல்லிவிடுகிறேன். மசோதாவின் 76-வது செக்ஷன் 6-வது பிரிவின்படி "சாட்சிகள் வாக்கு மூலத்தை ரிகார்ட்டு செய்யவேண்டியதில்லை யென்று பஞ்சாயத்து கோர்ட்டுகளுக்கு கொடுத்திருக்கும் அதிகாரம் மிகவும் அசாதாரணமானது. 1-வது 2-வது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளால் நடத்தபபடும் பெஞ்சு கேசுகளில்கூட சாட்சியத்தின் சுருக்கத்தைக் குறித்துக் கொள்ளுகிறார்கள். 6-வது பிரிவின்படி கோர்ட்டார் "சிட்சிக்கும்" காரணத்தை ரிகார்டு செய்யவேண்டியது. முதல் நாளிலேயே தீர்ப்பு சொல்லி பைசல் ஆகாவிட்டால் முதல் நாளில் கொடுத்த சாட்சியத்தை பெஞ்சு கோர்ட்டார் மறுநாள் தீர்ப்பு சொல்லும் வரை எப்படி ஞாபகம் வைத்திருக்க முடியுமோ எனக்கு தெரியவில்லை? தீர்ப்பு சாட்சியத்தின் பேரில் சொல்லப்பட்டது என்று என்ன நிச்சயம். நான் முன்னமேயே சொன்னபடி சரியான வழிகளால் மாஜிஸ்திரேட்டுகளின் செய்கைகளை திருத்தவிட்டால் நல்லவர்களும் கூடிய சீக்கிரத்தில் கெட்ட மாஜிஸ்திரேட்டுகளாக ஆய்விடுவார்கள். எனக்குத் தெரிந்தவரையில் அநேகமாய் எல்லா மாஜிஸ்திரேட்டுகளும் நியாயமாகவும் யோக்கியமாயுமிருக்கிறார்கள். ஆனால் யாராயினும் ஒருவராவது அநீதியாய் நடந்தால் இப்பொழுது ஏற்பட்ட கோர்ட்டுகளில் அநியாயம் நடக்கிறது என்று தூஷணை ஏற்படும்.

என் சாட்சிகள் வாக்கு மூலத்தை ரிகார்ட்டு செய்ய வேணுமென்பது.

2. ஆகையால் பஞ்சாயத்து கோர்ட்டு ஏற்பாடு சரியாக நடக்கவேண்டுமென்றால் சாட்சியம் ரிகார்டு செய்யவேண்டியது அவசியம். ஏனெனில் அப்பீல் செய்தாலும் அங்கு நியாயம் கிடைக்க வழி ஏற்படும். அபீலுக்கே இடம் கொடாத விஷயத்தில் சாட்சியம் பதிவு செய்யவேண்டாமென்பது நிஜமே. ஆனால் சாட்சியம் பதியாத வரையிலும் தீர்ப்புகள் அப்பீலுக்கு போக இடங்கொடுக்காத வரையிலும், பெஞ்சுகோர்ட்டார் ஜனங்களால் விரும்பப்படாத கோர்ட்டாராயிவிடுவார்கள். அப்படிப் பட்ட கோர்ட்டுகளை விரும்பத தகுந்ததாக செய்வதற்கே இப்பொழுது மசோதா மூலமாய் கெவர்ன்மெண்டார் செய்யும் ஏற்பாடு.

எப்படி இருந்தால் பஞ்சாயத்து கோர்ட்டுகளை ஜனங்கள் விரும்புவார்கள் என்பது.

3. கலெக்டர்கள் மெம்பர்களை நியமிப்பதினால் மட்டும் இந்த கோர்ட்டுகள், ஜனங்கள் விரும்பக்கூடிய நல்ல விதமான பஞ்சாயத்து கோர்ட்டுகளாய்விட மாட்டாது. சட்டங்கள் செய்வதினாலும், விதிகள் விதிப்பதினாலும், பெஞ்சு கோர்ட்டாரை சரியான வழிகளில் நடக்கும்படி செய்வதினாலும், சட்டங்களும் இவர்கள் நடத்தையும் சேர்ந்தே ஜனங்களுக்குள் நம்பிக்கை கொடுத்து சர்க்கார் சொற்படி கிராமக் கோர்ட்டுகளுக்கு பிரஜைகளை போகும்படிசெய்யும். ஒருவன் இருக்கும் இடமும் சமயமுமே நல்லவனையும் கெட்டவனைச் செய்துவிடும். ஆயினும் மேல்பார்வையும் மற்ற வழிகளுமிருந்தால் அவன் இருக்க வேண்டியபடி இருக்கச்செய்யும். மேலதிகாரிகளுக்கு கொடுத்திருக்கும் அதிகாரம் கீழதிகாரிகளை கவனிக்கச்செய்ய கூடியதும் அவர்களது நடத்தையை சீர் செய்யக்கூடியதுமாக இருக்கவேண்டும்.

ஒருவன் இருக்கும் இடமும் சமயமுமே நல்லவனையும் கெட்டவனை செய்யும்.

4. ஆகையால் இந்த மசோதாவை கொண்டுவருகிறவர்கள் அப்பீலுக்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்கிறதும், சாட்சியத்தை பதிவு செய்தலும், ஆகிய இரண்டு அம்சங்களையும் கவனிக்க வேண்டியது. கிராமச் சாவடிகளில் அடைத்து வைப்பதும், கிட்டிபோடுவதும் ஆகிய உபத்திரவங்களை இம்மசோதா மூலமாய் நீக்கி வைக்கும் கெவர்ன்மெண்டாருக்கு நான் மறுபடியும் வந்தனம் செய்கிறேன்.

(Sd.) H. V. VEDI CHETTY.

---

கவனிப்பு:—இந்த லெட்டரில் கண்ட 1888-ம் வருஷத்திய கிராமகோர்ட்டுகளை திருத்துவதற்கான "மசோதா" என்னும் 1917-ம் வருஷத்திய 3-வது நெம்பர் புது ஆக்ட்டு காபிகள் சென்னை போர்ட்டு செயின்ஜார்ஜு கெஜெட்டில் 1917ஹு ஜூலைமீ 31உ செவ்வாய்க்கிழமையின் 4-வது நெம்பர் சப்ளிமெண்டில் அநுபந்தமாக பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. தமிழ் காபி விலை 0-0-6 அரையணா தபால்சார்ஜ்உள்பட 0-2 0 இரண்டணா மணியார்டர் அனுப்பினால் கிடைக்கும். தேவையுள்ளவர்கள் "சென்னை மவுண்டுரோட்டில் கவர்ன்மெண்டு அச்சாபீசு சூப்ரின்டெண்டுக்கு" பணம் அனுப்பி தருவித்து இந்த லெட்டருடன் வைத்துக்கொண்டு வாசித்து தகவல்பார்த்துக்கொள்ளவேண்டியது அவசியமானதாக பாவிக்கத்தக்கினது. [H.V.V.C.]

N. M. S. PRESS, VEPERY, MADRAS.

# இந்திய அரசியல் சீர்திருத்தங்கள்.

1918-ஹு ஆகஸ்டுமீ 2-உ வெள்ளிக்கிழமை தீர்த்தமலையில் கூடிய ஊத்தங்கரை தாலூகா மகாஜனசபை, ஸ்பெஷல் மீட்டிங்கின் நடவடிக்கைகள்:—

இந்த மீட்டிங்குக்கு மகா-ள-ள-ஸ்ரீ H. V. வேடி செட்டியார் சபாநாயகராயிருக்கும்படி C. ராமசாமி செட்டியாரால் பிரேரேபிக்கப்பட்டு சபையார் ஏகோபித்து அங்கீகரித்தபடி ஷையார் அக்கிராசனம் வகித்தார்.

ராஜப்பிரதிநிதி அவர்களான கனம் செம்ஸ்போர்ட் அவர்களாலும் காரியதரிசி அவர்களான கனம் மாண்டேகு பிரபு அவர்களாலும் ஜூலைமீ 8-உ வெளிப்படுத்தப்பட்ட இந்திய சீர்த்திருத்தங்களடங்கிய ரிபோர்டை வாசிக்கப்பட்டது. அடியில் கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டது.

அவையாவன :—

1. 1917-ஹு ஆகஸ்டுமீ 20-உ பார்லிமெண்டில் விளம்பரப்படுத்தினபிரகாரம் ஜவாப்புதாரியான ஆட்சி ஏர்படுத்தவேண்டுமென்று ரிபோர்ட்டின் கிரந்தகர்த்தாக்களால் சொல்லப்பட்டிருந்தாலும் அவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ரிபோர்ட்டில்கண்ட சீர்திருத்த திட்டங்கள் இந்திய பிரஜைகள் எதிர்பார்த்தபடி இல்லையென்றும் இப்பொழுது இருக்கும் சுதந்தரத்தைகூட சில விஷயங்களில் ஒருகால் பாதிக்கலாமென்றும் அபிப்பிராயப்படுவதுடன் காங்கிரஸ் லீக் கோறிக்கைகளில் கண்டுள்ள முக்கியலட்சியங்களுக்கு பொருத்தமாயில்லையென்றும் ஜவாப்புதாரியான ஆட்சிக்கு முதல் படியாகவும் தேசபிரஜைகளுக்கு பொருத்தமானதாயும் அவர்கள் பிரதிநிதிகளால் ஆதரிக்கப்பட்டதுமான காங்கிரஸ் லீக் திட்டத்தை ஆதாரமாக கொள்ளாமல் தயார் செய்யப்பட்டிருக்கும் திட்டத்தைக்கண்டு இக்கூட்டத்தார் விசனப்படுகிறார்கள்.

2. ஐரோப்பிய வர்க்கத்தினர், அதிகாரவர்க்கத்தினர், அன்னியநாட்டு வியாபாரிகள் முதலியோர் மேம்பாடும் செல்வமும் சுதந்திரமும் அதிகப்படும் மார்க்கத்தில் அவர்களிடம் ஏராளமான அதிகாரத்தை வகிக்கப்பட்டிருப்பதாக ரிபோர்ட்டின் பல இடங்களில் விளக்குகிறது. அப்படி ஓர் வகுப்பினர்களுக்கு இடம்கொடுப்பது ஜவாப்புதாரி ஆட்சியின் ஆரம்பத்திலாவது மத்தியிலாவது முடிவிலாவது இந்தியர் விரும்பக்கூடிய விஷயமல்லவென்றும் பிரிடிஷ்ஷாரும் அவர்கள் நன்மைகளும் இந்தியாவிலுள்ள மற்ற பிரஜைகளைப்போல சமதத்துவமாக நடத்தப்பட இசைவார்களானாலும் அதிகார வர்க்கத்தினர் அரசரின் பிரஜாபக்திக்கு ஜவாப்புதாரியாக அமுல்செய்ய உட்படுத்தப்படுவார்களானாலும் அப்போதுதான் உண்மையான ஜன நாயகஆட்சி கவர்ன்மெண்டு ஏற்பட்டதென்று சொல்லலாமென்றும் அதில்லாமல் செய்யும் இச்சீர்திருத்த திட்டம் 1917-ஹு ஆகஸ்டுமீ 20-உயில் பார்லிமெண்டில் விளம்பரம் செய்த வாக்கை நிறைவேற்றினதென்று பிரஜைகள் அங்கீகரிக்கத்தகுந்ததல்லவென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

3. இந்தியாவின் கைத்தொழில், வியாபாரம் விவசாயம், பெருகவேண்டுமென்று ரிபோர்ட்டின் சிலபாகங்களில் அபிப்பிராய ரூபமாக சொல்லப்பட்டிருந்தாலும் சொன்னபடி இந்தியாவுக்கும் இந்திய மக்களுக்கும் அபிவிர்த்தி உண்டாக்கக்கூடிய மார்க்கங்கள் அந்த வகைகளைப் பற்றி சீர்திருத்த திட்டத்தில் மற்றவைகளைப்போல யாதொன்றும் அமைக்கப்பட்டிராததைப் பற்றி இக்கூட்டத்தார் துறிப்பாய் ஆக்ஷேபிக்கிறார்கள். இந்தியாவின் நிர்வாகம் இந்தியாவுடையவும் இந்திய ஜனங்களுடையவும் நன்மையை உத்தேசித்து செய்யப்படுமென்று பிரிடிஷ்பார்லிமெண்டாரும் நமது சக்ரவர்த்தியவர்களும் ஒப்புக்கொண்டு அபிப்பிராயரூபமாய் சொல்லாமல்

இந்தியரிடம் நம்பகம்கொண்டு குறிப்பிட்ட இன்னின்ன காலத்தில் இன்னின்ன அபிவிருத்தி செய்யப்படுமென்று உறுதியின்மேல் சட்டமூலமாய் காங்கிரஸ் லீக் கோரிக்கைகளுக்கு குறையாத திட்டங்களை முதலில் ஏற்படுத்தப்பட்டாலொழிய 1917-ஷு ஆகஸ்டுமீ 20-உ பார்லிமெண்டில் வாக்களித்த நோக்கங்களுக்கிணங்க ஜவாப்புதாரியான ஆட்சி இந்தியாவில் ஜன சம்மதியுடன் ஏற்பட முடியாதென்று இக்கூட்டத்தார் தெரிவிக்கிறார்கள்.

4. வரவு சிலவு விஷயத்தில் ஜனப்பிரதிநிதிகளுக்கு அதிகாரம் கொடுக்காமல் இருப்பதைப்பற்றி இக்கூட்டத்தார் வெகு விசனகரமாய் ஆக்ஷேபிப்பதுடன் இந்தியர்களிடம் அவநம்பகம் கொண்டிருப்பதையும் சாமான்னிய ஜனங்களின் க்ஷேமலாபத்தை கவனிக்க சிவில் சர்விஸ் உத்தியோகஸ்தர்களென்றும் ஒரு வகுப்பார் இருக்கவேண்டுமென்று ரிபோர்ட்டில் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தை இக்கூட்டத்தார் ஆக்ஷேபிப்பதும்தவிர தென்னாட்டின் இந்த தமிழ் ஜில்லாக்கள் பொருப்பானஆட்சிக்கு இப்போதே லாயக்காக இருக்கிறதென்பதை இதன்மூலமாய் தெரிவிக்கிறார்கள்.

வகுப்புவாரி பிரதிநிதித்வம் முறையை நிராகரித்திருப்பதற்கு தகுந்த காரணங்களை சொல்லப்படாததைப்பற்றி வருத்தப்படுகிறோம். சென்னை மாகாணம் சம்மந்தப்பட்டவரையில் வகுப்புவாரியாய் பிரதிநிதி ஸ்தானங்கள் கொடுக்கப்பட்டேதீரவேண்டுமென்று வற்புறுத்துவதுடன் இது விஷயத்தில், சென்னை மாகாண சங்கத்தார் குறிப்பிடும் ஸ்தான விவரங்கள் எல்லாருக்கும் திருப்தியை தருமென்று இக்கூட்டத்தார் தெரிவிக்கிறார்கள். முக்கியமாய் அடியில் கண்ட விஷயங்களில் திருத்தங்கள் செய்யப்படாவிட்டால் அரசியல் பிரேரணைகள் 1917-ஷு ஆகஸ்டு மாதத்திய விளம்பரத்தின் முற்போக்குள்ள நோக்கத்தையும் கருத்தையும் வாக்குதத்தத்தையும் பூர்த்தி செய்ததாகாதென்று இக்கூட்டத்தார் அபிப்பிராயப்படுகிறார்கள்.

அவைகளாவன :—

(1) சட்ட சங்கத்தின் அதிகாரத்தை மன்னர்கள் சபை மூலமாயும் சட்ட சபையின் அதிகாரங்களை பெரிய சமிட்டியாரின் மூலமாயும் குறைத்திருத்தல்.

(2) மந்திரியோ அல்லது மந்திரிகளோ திருப்திகரமான வேலை செய்யவில்லை என்று சட்ட சபையில் மெஜாரட்டியார் அபிப்ராயப்பட்டால் அவர்களை விலக்கிவிட அதிகாரம் கொடாமலிருத்தல்.

(3) வரவு சிலவு விஷயத்தில் சட்ட சபைகளின் அதிகாரத்தை குறைத்தல்,

(4) நிர்வாக இலாக்காக்களை ஒத்திவைக்கப்பட்டவைகளென்றும் மாற்றப்பட்டவைகளென்றும் பிரிவினை செய்திருத்தல்.

(5) மாகாண சட்டசபைகளுக்கு கொடுக்கப்பட்டிருப்பதுபோல இந்தியா கவர்ன்மெண்டு சட்ட சங்கத்திற்கும் அதிகாரம்கொடாமல் இருப்பது.

(6) ராஜப்பிரதிநிதி நிர்வாக சபை மெம்பர்களில் பாதி இந்தியர்களாக இருக்கவேண்டுமென்று காங்கிரஸ் லீக் திட்டத்தில் கோரப்பட்டிருந்ததை நிராகரித்திருத்தல்.



(7) இரண்டு சட்டசபைகளிலும் முஹம்மதியர் பிரதிநிதிகள் காங்கிரஸ் லீக் திட்டத்தில் கோரியபடி இல்லாமலிருத்தல்.

(8) இந்திய சட்டசங்கத்திற்கு ஏற்றுமதி இறக்குமதி வியாபார சம்மந்தமாய் அதிகாரம் கொடாமலிருத்தல்.

(9) ராணுவம் கடற்படை முதலியவைகளைதவிர மற்ற இனங்களில் பணவிஷயமாய் இந்தியா சட்டசங்கத்திற்கு அதிகாரம் ஏற்படாதிருத்தல்.

(10) மாகாண கவர்ன்மெண்டில் பூரா பொருப்பான ஆட்சியும் 5-ஷுத்திற்கதிகப்படாமல் உடனே கொடுக்க தகுந்த ஏற்பாடுகள் இல்லாதிருத்தல்.

6. காங்கிரஸ் சபை முஸ்லீம் லீக் முதலான சபைகளின் பிரதிநிதிகள் இந்த சீர்திருத்த விஷயமான கோரிக்கைகளை பிரிட்டிஷ் பிரஜைகளும் பார்லிமெண்டாரும் அங்கீகரிக்கும்படிக்கும உதவி செய்யும்படிக்கும் செய்ய இங்கிலாந்துக்கு சென்று பிரசாரணவேலை செய்யத்தக்கின ஏற்பாடுகள் உடனே இப்போது பம்பாயில் கூடும் ஸ்பெஷல் காங்கிரஸ் கூட்டத்தார் செய்யவேண்டுமென்றும் இந்த தீர்மானங்களின் காப்பிகளை சேலம் ஜில்லா கான்பரன்சு சென்னைமாகாண கான்பரன்ஸ் பம்பாய் ஸ்பெஷல் காங்கிரஸ் இவைகளின் அக்கிராசனாதிபதிகளுக்கு அனுப்பவேண்டுமாயும் இக்கூட்டத்தார் தீர்மானிக்கிறார்கள்.

7. இந்த தாலூகா மஹாஜன சபையார் முயற்சியின்மேல் மேமீ 20-உ கூடின ஊத்தங்கரை தாலூகா கான்பரன்சில் செய்த 23-நெ. தீர்மானத்தை கவனித்து சேலம் ஜில்லா கான்பரன்சு ஏற்படுத்தின விஷயமாய் அதன் மூலபுருஷர்களுக்கு இக்கூட்டத்தார் வந்தனமளிக்கிறார்கள். (a) ஷை கான்பரன்சுக்கு இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கும் லிஸ்டில் கண்டவர்களை உபசாரணை கமிட்டி மெம்பர்களாகவும் டெலிகேட்டுகளாகவும் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஷை கான்பரன்சுக்கு இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கும் இச்-ஜில்லா சம்மந்தமான குறைகளடங்கிய தீர்மானங்களை சப்ஜெக்ட் கமிட்டியில்வைத்து இந்த மீட்டிங்கின் சேர்மென் கான்பரன்சுக்கு முன்கொண்டுவர இடங்கொடுக்கவேணுமாய் கான்பரன்சு அதிகாரிகளை மகாஜனங்கள் கோறிக்கொள்ளுகிறார்கள்.

(Signed) H. V. VEDI CHETTY,
*Presiding Chairman.*

வானேக்கிவாழு முலகெலாம்—மன்னவன்
கோனேக்கி வாழுங்குடி.

குறள்.

Scott. II—8 (a)—160,004—16-1-17.

**NOTES.**



35

Home Ms. Dept

Uttankarai Taluk Conference
From the President, Uttankarai Taluk Mahajana Sabah d/12.10.18

For the Regr

A draft letter acknowledging the receipt of the report is submitted.

2. The resolutions are printed in Tamil and it is for consideration whether translations should be obtained from the Tamil Translator. If found necessary, the draft memo submitted may be approved.

[illegible] 22/10

Yes. We should have a translation of the resolutions relating to Govt. alone.

CR
25.10.18

Memo. to the Tamil Translator d/ 24.10.18
From the Tamil Translator letter No 486 d/ 6.11.18.

(C. no 3271)

An acknowledgement has been already sent. Submitted the file may be sent U.O. to the Depts. of the Secretariat noted in the margin for any action that ~~may be taken as there are no resolutions relating to this Dept.~~ Considered necessary.

Home (Edl.) Dept
— (Judl.) —
Rev. Dept.
Rev. Special Dept.
L. & M. Dept.
L. & M. (Mctl.) —
P. W. D. Dept.
(Genl. Rys. & Irrign.)
~~Rev. Special~~

There are no resolutions relating to this Department.

CR
15/11/18

[illegible]
14.11.18

Home (misc.) 3271-1
18-11-18

Scott II—8 (a)—160,004—16-1-17.

**NOTES.**



<u>Home (Edn.) Dept.</u>

(pages 4 to 6 of c.f.) Extract of Resolution No. 7 relating to educational matters has been taken. The file may be passed on to the Judl. Section

UNDER SECY. TO GOVT. 29 NOV 1918 REVENUE DEPT.

SK
26/11/18.

NK
26/11/18

A
27.11.18

Judl. co

Home (Edn.) No. 2918 A-1
28.11.18

Judl. 3500 C
28.11.18

KA + B Section

<u>Home (Judl.) Dept.</u>
(C)

~~Regr.~~

Extract of Resolution No. 12 relating to registration has been taken.

RM

<u>Thro' B Section</u>

MA
29.11.18

Extracts of Resolutions no 11 (C) and 22 regarding the establishment of a Bench magts court at Hazur and the new Rule to amend the Madras Village Courts Act respectively have been taken and will be separately dealt with. The file may now be passed on to the Rev. Dept.

Rev. co.

RM
2.12.18

LDS
8.12.18

Ghl
6-12-18

NA
160
10.12.18

3919 B-1
9.12.18

Rev. C. No. 1718 S.R.
Regd. 10-12-18

Rev. dept.

To Under Secy,

Extracts of Resolutions Nos 7 (g), 11 (a), (b) & (c), 16, 18 and 19 relating to this department have been taken and the file may be passed on to Rev (Spl) dept.

U.O. 12.12.18 — Rev (Spl). u.o. — 14.12.18.

13.12.18.

16.12.18

Rev. No 17185-R/18-1 16.12.18.

Rev (special) Dept

To Under Secy.

Extract of resolution 10 relating to this Dept. (Forests) has been taken for action in this Dept. Submitted that the file may be passed on to the L&M Dept. u.o.

Resp. 263 No. I/18 16.12.18

20.12.18 — 20.12.18.

L&M. U.O.

SECRETARY TO GOVERNMENT 10 JAN 1919 PUBLIC WORKS DEPARTMENT

Rev Spl. No. 263 No. I/18-1 21.12.18

L and M Dept

Extracts of resolution 7 (a), (b), (c), (d), (f), 13 (a) and (c) and 12(a) relating to this Department have been taken for action in this dept and the file may be passed on to P. W. D. u.o.

REGISTRAR 21 DEC 1918 LOCAL & MUNICIPAL SECRETARIAT

C. No 7096 L 21.12.18

L&M u.o. 7096 L 9.1.19

4/1/19 — 8.1.19. — P.W.D. u.o.

C. No. 102 Ad 10.1.19

7/1/19

4.

38 P.W.D.

P.9 cf

D.S

Action on resolution no. 13(c) regarding the stopping of the collection of railway cess has to be taken in the L&M Dept who have taken an extract of the resolution. There are no resolutions pertaining to the P.W.D (Gl) and Railways. This may be passed on to P.W.D(I). ~~[illegible]~~

~~[illegible]~~

[illegible] 15/1

Thro' S.A.

20/1

20/1 . [illegible]

20/1

[illegible] 21/1/19

P.W.D. No. 102 Ad/19

PUBLIC WORKS DEPT. MADRAS 22 JAN 1919 482/19 A

P.W.D (I)

D.S

P.W.D (Irrign).

There are no resolutions pertaining to Irrigation. The file may, it is submitted, be returned to Home (Mis) dept.

22.1.19. 22.1.19

31/1/19

Home (Misc)

Noted Without date of return 3.2.19

P. W. D. IRRIGATION.
U. 482/19 A-1
dated 1-2-19

Home (Mis) Dept

Order Mis 320 of 11. 2. 19
Recorded ?

6.2.19 Pass 6.2.19

8/2/19, 10/2/19

REGISTRAR HOME DEPARTMENT 2 FEB 1919 GOVT. OF MADRAS

When given for copying
When copied
When examined
When signed
} 191 .

Read again G.O. No. , dated
191 .

Current No.

Enclosures to C. No.

Order of Government .. .. .. A A A A A A A

Letter of Government

Statement with ditto.

Papers not filed up, being meant for despatch in original.

*N.B.*—
A = Copy in full.
B = Not to be copied.
P = Copy abstract only.
Q = Copy heading only.